# பழமொழிக் கதைகள்

கே.வி. குணசேகரம்.

# நூல் விபரம்

நூலின் பெயர் : பழமொழிக் கதைகள் 40

(கவிதை, உரை, பழமொழி, விளக்கம், கதைகள்)

நூலாசிரியர் : கே. வி. குணசேகரம்.

பதிப்பாண்டு :

மொத்தப்பக்கங்கள் :

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை

**F.L. 1.14,** டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர,

கொழும்பு – 12.

**Tel : 011-2-341942**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சந்நிதானம்
ர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
ரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 23202
நாள்: 7.7.2010


நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

அருள் வாழ்த்துரை

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

–அப்பர் தேவாரம் –

இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே. வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும், மாயை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும் மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான, தத்துவங்களைப் படிப்பாயாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து துணிய வேண்டிய செய்திகளும் உள்ளன.

இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகளி மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இணைப்பு : திருநீற்றுச்செல்வம்
பெறுநர் : திரு.கே.வி. குணசேகரம் அவர்கள்
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, ஸ்ரீலங்கா.

## என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 –1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன. அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும் உரை விளக்கம் கதை

என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின் பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு மிகவும் அண்மையில் உள்ள கிராமம் கோப்பாய். அங்கு நமசிவாயம் சுவாமிகள் ஆச்சிரமமைத்து சமயப்பணிகள் செய்து வந்தார். அவரிடம் வேதம், உபநிடதம், திருமந்திரம், ஆசாரக்கோவை, பகவத்கீதை, திருக்குறள் என்ற நூல்களின் தத்துவங்களைக் கதைகள் மூலம் கேட்டுச் சுவைப்பதற்கு ஏராளமான அடியார்கள் வருவார்கள். அவர் அவற்றின் சுலோகங்களைக் கூறுவார் ; அதன் பின் உரை சொல்வார்; அதற்கான விளக்கத்தையும் சொல்வார். இறுதியாக அந்த நுட்பமான தத்துவங்களுக்குப் பொருத்தமான கதைகளைக் கூறுவார். புனிதமான நாட்களில் இரவிலும் போதனை செய்வார். அவருக்குப் பல சீடர்கள் இருந்தனர்.

அன்று பௌர்ணமி நாள். களங்கமற்ற வானில் பூரண சந்திரன் உலாவிக் கொண்டிருந்தான். நீண்டு பரந்து வளர்ந்திருந்த வேப்பமரத்தின் கீழ் மக்கள் கூடியிருந்தனர். வேப்பமரத்தின் அடியில் கருங்கல்லாலான ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது. அதன் அருகில் நமசிவாயம் சுவாமிகள் கண்களை மூடிய படி அமர்ந்திருந்தார்.

“அன்பானவர்களே, சந்திரன் பூரண மகிழ்வுடன் களங்கமில்லா வானில் உலவுவது போல, இன்றைய பௌர்ணமி தினத்தில் மன நிறைவுடன் கூடியிருக்கிறீர்கள். இன்று தொடக்கம் நான் உங்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான பழமொழிகளைக் கவிதையாகக் கூறி அதற்கு விளக்கமும், உரையும், கதையும் கூறப்போகிறேன்”.

“அறிவுக்கு வளம் சேர்த்து, வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை,சோதனைகளை, வேதனைகளை எவ்வாறு நீக்கலாம் என்று சுருங்கக்கூறுவது பழமொழி. இவை அனுபவங்களின் கூற்று ; வாழ்க்கையை நன்கு ரசித்துச் சுவைத்து அனுபவித்த ஆன்றோர் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைச் சுருக்கமாகக் கூறியுள்ளனர்”.

“அன்பானவர்களே, ஐம்புலன்கள் தான் உயிர்களை வாட்டி வதைப்பதும், இன்பதுன்பங்களைக் கொடுப்பதும். இவ் ஐம்புலன் களால் உண்டாகும் உணர்வுகள் அசுரத்தன்மையானவை. அசுரர்கள் ஐம்புலன்களையும் ஒடுக்கப்பல காலம் கடுந்தவம் செய்து இறைவனிடம் அரிய பல வரங்களைப் பெற்ற பின்பு, ஐம்புலன் களினால் உண்டான ஆசை, அவா, பொறாமை என்பவற்றின் காரணமாகச் செய்யக்கூடாத செயல்கள் பலவற்றைச் செய்து அதனால் அழிந்தனர். அரிய வரங்களைப் பெற்ற அசுரர் ஐம்புல இன்பங்களைத் தவிர்த்திருந்தால் மேலான நிலையை அடைந்திருப்பார்கள்”

“ஐம்புலன்கள் அசுரத்தன்மை வாய்ந்தவை. அவை நல்லவற்றைச் சிந்திக்க ஒருபோதும் விடுவதில்லை. இறைவன் எண்குணங்களை உடையவன். அவை யாவும் உங்களுக்குத் தெரியும். பற்றுக்களற்ற இறைவனின் பாதங்களைப் பற்றிப்பிடித்து, ஐம்புல இன்பங்களுக்காட்படாது வாழ்பவர்கள் தான் உலகில் உயர்தவர்கள்; பெருமைக்குரியவர்கள். அவர்களது உடம்பினுள் இருக்கும் உயிரும்

பெருமை உடையது மட்டுமன்றி பெருமையான செயல்கள் பலவற்றையும் அது செய்யும்”

“பெரியவர்கள் தான் செயற்கரிய செயல்களைச் செய்வார்கள். செயற்கரிய செயல்களென்பது ஐம்புலன்களால் வரும் இச்சைகளைத் துறத்தலேயாகும்”.

“நாவலூரிலே பூரணன் என்றொரு முனிவர் இருந்தார். அவரது ஆச்சிரமத்திற்கு அருகில் கலையரசி என்ற விபச்சாரி இருந்தாள். அவளின் வீட்டிற்குத் தினமும் ஏராளமான ஆண்கள் வந்து போவார்கள். இதனால் ஊரில் எந்நாளும் சண்டை, சச்சரவுகள் இடம்பெறும். அக்கிராமப் பெண்கள் பாதிக்கப்பட்டனர். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. அதனால் அவளைத் திருத்தவேண்டு மென்று பூரணன் நினைத்தார்”.

“ஒரு நாள் நள்ளிரவு அவளது வீட்டிற்குச் சென்றார். வீட்டின் வெளிப் பக்கத்தில் விளக்கு ஒன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. கலையரசியின் நாய் குரைத்தது. அவள் வெளியே வந்தாள். வாசலில் முனிவர் நின்றார்”.

“சுவாமி அங்கேயே நில்லுங்கள்” என்று கூறிவிட்டு அவள் முனிவரின் அருகில் வந்து சொன்னாள்; “சுவாமி. இந்தப் பாவியின் இடத்திற்கு ஏன் வந்தீர்கள்?. யாரிடமாவது சொல்லியனுப்பி யிருக்கலாம். புனிதர்களின் பாதங்கள் இந்த மண்ணில் படக்கூடாது.

ஐம்புலன்களால் வருகின்ற இச்சைகளைத் துறந்து நீங்கள் இங்கு வரக்கூடாது. உங்கள் புலன்களைத் தூண்டிய நான் பெரும் பாவி. பெரியவர் ஒருவர், தான தர்மம் செய்யும் ஒருவர், மக்களை நல்வழிப்படுத்தும் ஒருவர் என்னால் கெடுக்கப்படுவதைப் பெரும் பாவமாகக் கருதுகிறேன். இனிமேல் கீழான செயலைச் செய்ய மாட்டேன். நான் இன்றே இவ்வுலகை விட்டுச் செல்கிறேன்" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றாள் அவள்".

"மறுநாள் அவளைக் காணவில்லை. மக்கள் மகிழ்வுடன் முனிவரை வாழ்த்தினர். ஒரு விபச்சாரியே ஐம்புலன்களினால் வரும் ஆசையை நீக்கிய முனிவரைத் தனது வீட்டினுள் அனுமதிக்க வில்லை. அந்த விபச்சாரிக்கு ஐம்புலன்களையும் அடக்கிய மேலான ஒருவர் தனது வீட்டுக்கு வந்து விட்டார் என்ற பயம் உண்டானது. அதனால் தனக்குப் பெரும் பழிவருமென்று அவள் நினைத்தாள். அந்த முனிவர் தான் செய்யும் பாவத்தை நீக்குவதற்காகவே வந்தார் என்றும் நினைத்தாள். அதனால் அவள் திருந்தி வேறொரு ஊருக்குச் சென்று கூலிவேலை செய்து வாழ்ந்தாள்."

**அறிதவித்து ஆசின்று உணர்ந்தவன் பாதம்**
**வரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்து,**
**உரியதனிற் கண்டுணர்ந்தார் ஓக்கமே, போலப்**
**பெரியதன் ஆவி பெரிது.**

ஐம்புலன்களினால் வரும் இச்சைகளைத் தவிர்த்தலே பெருஞ் செயல். அச் செயலைச் செய்வோரைப் போற்றுவோம். "**பெரியதன் ஆவிபெரிது**" என்பது பழமொழி.

2 அன்பானவர்களே, கலையரசி தனது ஊருக்கு வெகு தொலைவில் உள்ள இலந்தை ஊருக்கு வந்து ஒரு கோயிலில் இருந்தாள். காலைப் பூசை முடிந்த பின்பும் அவள் அக்கோயிலிலேயே இருந்தாள். பூசை முடிந்து கோயிலைப் பூட்டிய அக் கோயிற் குருக்கள் அவள் வெளி மண்டபத்தில் இருப்பதைக் கண்டு அவளருகே வந்து கேட்டார் ; "பெண்ணே, நீ யார்? பூசை முடிந்த பின்பும் ஏன் இங்கே இருக்கிறாய்?"

"நான் அயலூரவள். இங்கு வேலை தேடி வந்தேன்" என்றாள்".

"இங்கு முருகப்பாச் செட்டியார் என்றொரு நல்ல மனிதர் இருக்கிறார். அவரிடஞ் செல். உனக்கு வேண்டிய உதவிகள் செய்வார்" என்றார் குருக்கள்".

"அவள் முருகப்பாச் செட்டியாரின் வீட்டுக்குச் சென்றாள். செட்டி யார் அவளை அன்போடு வரவேற்றார்; "நீ யாரம்மா? உன் பெயரென்ன?"

"ஐயா நான் நாவலூரில் இருந்து வந்தேன். எனக்கு அங்கு உறவு என்று சொல்ல யாரும் இல்லை. ஏதாவது வேலைகள் தந்தால் செய்வேன்" என்றாள்".

"சரி, எனது தோட்டத்தில் வேலை செய். அங்கு ஒரு சிறிய வீடு உள்ளது. அதில் தங்கியிரு. உனக்கு வேண்டிய பொருட்களை அனுப்புகிறேன். உன்னை எனக்கு யாரென்று தெரியாது. எப்படியானவள் என்றும் தெரியாது. எதற்காக வந்திருக்கிறாய் என்றும்

தெரியாது. பெண்ணென்பதால் இரங்கி உனக்குதவி செய்கிறேன். நம்பிகையுடன்  நடந்தாயேயானால் உனக்கு வேண்டியளவு உதவி செய்வேன். நீ முன்பு என்ன செய்தாலும் பரவாயில்லை. செய்யக்கூடாத செயல்களைச் செய்தாலும், அப்பழியைப் போக்கிக் கொள்ளக்கூடியதாக வாழ்ந்தால் மேல் நிலையடையலாம். எனவே நல்லபடி வாழப்பார்" என்றார்".

"அவரது வார்த்தைகளை அவள் வேதவாக்காகக் கொண்டாள். அவரது தோட்டத்தில் ஏராளமான கூலியாட்கள் வேலை செய்தனர். கலையரசி அவர்களுடன் நல்ல முறையில் பழகி வந்தாள். அவள் கற்றவள். தந்தையை இழந்த அவள், தாயின்  உதவியோடு வாழ்ந்து வந்தாள்.  தாய்க்கு கடும் நோய் வந்தது. அந்நோய்க்கான வைத்தியச் செலவுக்காகத் தனது வீட்டை விற்றாள். அப்படியிருந்தும் அவளால் தாயைக் காப்பாற்ற முடியவில்லை. தாய் இறந்த பின்பு அவள் தனது மைத்துனனைக் காதலித்தாள். அவன் தனக்கு வாழ்வு தருவான் என்று நம்பியிருந்தாள். அவளின் நம்பிக்கையைக் கெடுத்து விட்டு,  அவன் இன்னொரு பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். அதன் பின் அவளது வாழ்வு சீரழிந்து விட்டது"

"கலையரசி, முருகப்பாச் செட்டியாரின் நன் மதிப்பைப் பெற்றதால், அவர் அவளுக்குக் கணக்குப் பார்க்கும் பதவியைக் கொடுத்தார். அப்பண்ணையில் வேலை செய்வோரைப் பதிவது, அவர்களுக்கு உணவு வகைகளைக் கொடுப்பது, அவர்களின் வேலை

நாட்களைக் கணக்கிட்டுச் செட்டியாருக்குச் சொல்வது போன்றன அவளது வேலைகள்".

"அன்று முருகப்பாச் செட்டியார் கலையரசியை அழைத்துச் சொன்னார்; "மகளே, நீ யார்..? நீ என்ன சாதியென்று எனக்குத் தெரியாது. நீ எப்படியானவள் என்றும் தெரியாது. அதை அறியவும் நான் விரும்பவில்லை. நீ இங்கு வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. இந்த ஆறு மாதங்களும் நான் உன்னைக் கவனித்தேன். நீ நல்லவள். நல்ல குடியிற் பிறந்தவளென உனது நடத்தைகள் எடுத்து இயம்புகின்றன. ஒருவன் செய்யக்கூடாத பழி பாவங்களைச் செய்தால், அதை அவன் நீக்கிக் கொள்ளும் வழிவகைகளை அறிந்து செயற்பட்டால் அப்பழிபாவங்கள் யாவும் மறைந்து விடும். செய்த பழிபாவங்களைத் தொடர்ந்து செய்தால் தான் அவை நீங்காது. அப்படி நினைப்பது சிறிய குன்றில் உள்ள நீருக்குள் நீர் தெறித்து மேலெழும்பும்படி குதித்து நீராடி உடல் அழுக்குகள் யாவற்றையும் போக்குவேன் என்று சொல்வதைப் போன்றதாகும். எனவே இப்பொழுது நீ நடந்து கொள்ளும் முறைகளைப் பார்த்தால், முன்பும் நீ நல்லபடி வாழ்ந்திருப்பாய் என்று எண்ணுகிறேன்" என்றார். ஆகவே தவறு செய்பவர்கள் அதைத்திருத்த வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**மிக்க பழிபெரிதும் செய்தக்கால், மீட்டதற்குத்**
**தக்கது அறியார், தலைசிறத்தல், – எக்கர்**
**அடும்பு அலரும் சேர்ப்ப! அகலுள் நீ ராலே**
**துடும்பல் எறிந்து விடல்'.**

செய்யும் தவறுகளை நீக்கும் முறைகளை அறிந்திருத்தல் வேண்டும். அறியாதவர்கள் மேல்நிலையடைய மாட்டார்கள் **“அகலுள் நீராலே துடும்பல் எறிந்து விடல்**’ என்பது பழமொழி. சிறிதளவான நீரால் உடல் அழுக்குப் போகக் குளிக்க முடியாது. என்பது பொருள்.

3 “அன்பானவர்களே, கலையரசி நன்றாகப் பாடுவாள். அழகாக மாலைகள் தொடுப்பாள். சிறு பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுவாள். அவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பாள். அதனால் அத்தோட்டத்தில் வேலை செய்யும் கூலிக்காரர்களின் பிள்ளைகள் மாலை நேரங்களில் அவளது வீட்டுக்கு வருவார்கள். அவர்களுக்கு அவள் பாடஞ்சொல்லிக் கொடுப்பாள். அவர்களைக் கொண்டு பூப்பறித்து மாலைகள் கட்டித் தினமும் அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் சிவனுக்கு கொடுப்பாள். அத்துடன் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும், விசேட தினங்களிலும் பஜனை சொல்லிக் கொடுப்பாள்”.

“இதனால் அவ்வூரவர்கள் அவளை மிகவும் நேசித்தனர். முருகப்பச் செட்டியார் இல்லை என்று சொல்பவர்களுக்கு உதவுபவர். அவருக்கு ஐந்து பிள்ளைகள். ஐந்து பேரும் திருமணமாகி நல்ல நிலையில் இருக்கிறார்கள். இருந்த போதும் அவர் தினமும் வேலை செய்வார். பிள்ளைகள் அவரை வேலை செய்யாது ஓய்வாக இருக்குமாறு கூறுவார்கள். அப்போது அவர் கூறுவார்; “பிள்ளைகளே, ஒருவன் வலு உள்ளவரை உழைக்க வேண்டும். எம்மிடம் ஏராளமான பொருள் இருக்கிறது. ஆனால் அவை தான தர்மஞ் செய்யப் போதாது.

உழைப்பில்லாமல் இருந்து தான தர்மஞ் செய்தால் பொருள் குறைவடையும். எம் முன்னோர் சொல்வார்கள்; "குந்தியிருந்து தின்றால் குன்றும் குழியாகுமென்று" நான் தான தருமஞ் செய்ய வேண்டும். தானம் செய்யப்படும் பொருள் எனது உழைப்பால் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்" என்றார்".

"அதன் பின் பிள்ளைகள் அவரை வற்புறுத்துவதில்லை. அதனால் அவர் முன்பு போலத் தொழில் செய்து வந்தார். அவர் கல்வி கற்கும் பல பிள்ளைகளுக்கு உதவி செய்து வந்தார். திக்கற்றவர்கள், அனாதைகள், பிள்ளைகளாற் கைவிடப்பட்ட பலர் அவர் கட்டிய மடத்தில் தங்கியிருக்கின்றனர். பாடசாலைகளுக்கும் கோயில்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுப்பார்".

"சிவன் கோயிற் குருக்கள் அன்று பூசை முடிந்த பின்பு முருகப்பச் செயட்டியாரின் வீட்டுக்கு வந்தார். பொதுவாகச் செட்டியார் தரும காரியஞ்செய்வதானால் அந்தந்த இடங்களில் வைத்தே செய்வார். கோயிற் குருக்களுக்கு என்னென்ன தேவையென்று பூசை முடிந்த பின் கேட்டு அதைச்செய்வார். யாரையும் வீடு தேடி வரவிடமாட்டார் அப்படியிருக்கக் கோயிற் குருக்கள் ஏன் வீடுதேடி வந்தார் என யோசித்தார்".

"கோயிற்குருக்கள் வந்து ஆசனத்தில் அமர்ந்து வெகுநேரமாகப் பேசாதிருந்தார். செட்டியார் இவர் ஏன் வந்தார் என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்".

“வெகுநேரத்தின் பின் குருக்கள் சொன்னார்; “செட்டியாரே, நான் கலையரசியைப் பற்றிக் கதைக்க வந்தேன். அவள் எமது ஊருக்கு வந்த பின் ஊரும், கோயிலும், பாடசாலையும் மாறியிருப்பது உங்களுக்குத் தெரியும். அவள் மிக நல்லவள் மட்டுமல்ல வல்லவளும் கூட. நீங்கள் அவளுக்கு உதவி செய்தல் வேண்டும்” என்று கூறிவிட்டு நிறுத்திய குருக்கள் மீண்டும் சொன்னார்; “ஐயா, தரும வழியில் பொருள் தேடி, அதைத் தருமஞ் செய்து வரும் உங்களுக்கு நான் தர்மஞ் செய்யும்படி கூறுவது சர்க்கரையைப் பாலில் கரைப்பதைப் போன்றதாகும். பாலில் சர்க்கரையைக் கலந்தால் அதன் சுவை மேலும் அதிகரிக்கும் என்று தெரிந்தமையாற் கூறுகின்றேன். கலையரசிக்கு ஒரு திருமணம் செய்து வையுங்கள்”

“செட்டியார் சிரித்தார் ; “குருக்கள், நான் எப்போதோ தீர்மானித்து விட்டேன். பொருத்தமான மாப்பிள்ளை கிடைத்ததும் செய்து வைக்கலாம் என்றார்”.

“மேலான குணங்களை உடையவர்கள் எப்போதும் மேன்மையாகவே நடந்து கொள்வார்கள். பாலில் சர்க்கரையைச் சேர்த்தால் அது மேலும் சுவை கூடி உண்பவர்களை இன்பத்திலாழ்த்தும். அது போலத் தருமஞ் செய்பவர்களுக்கு உண்மை நிலையை விளக்கித் தருமஞ் செய்யுமாறு தூண்டினால், அவர்கள் மேலும் மேலும் மகிழ்வுடன் தருமஞ் செய்வார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தக்கமில் செய்கைப் பொருள்பெற்றால், அப்பொருள்**

**தொக்க வகையும் முதலும் அதுவானால்.**

**மிக்க வகையால் அறஞ்செய்க!' எனவெகுடல்**

**அக்காரம் பால்வெருக்கும் ஆறு.**

தர்மஞ்செய்வதைத் தூண்டுவதால் அவர்கள் மேலும் மேலும் தர்மஞ் செய்வார்கள் ' **அக்காரம் பால் வெருக்கும் ஆறு**" என்பது பழமொழி.

4 அன்பானவர்களே, "முயற்சியுள்ளவன் எவனும் பணக்காரனா –கலாம்; கல்விமானாகலாம்; உயர்ந்தவனாகலாம் என்று நம்புவன் நான். கலையரசி முயற்சியுள்ளவள்; சுறு சுறுப்பானவள்; எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பவள்; தன்னாலான உதவிகளைப் பிறருக்குச் செய்பவள். இப்பொழுது அவள் ஏழையாக இருந்தாலும் ஒரு காலத்தில் அவள் மேன்மையுள்ள பணக்காரியாவாள்" என்றார் முருகப்பச் செட்டியார்".

"நீங்கள் சொன்னால் அது உண்மையாக இருக்கும்" என்றார் கோயிற் குருக்கள்".

"நான் உண்மையைச் சொல்லவில்லை. எனது அனுபவத் தைச் சொல்கிறேன். எனக்குப் பத்து வயது நடக்கும் போது எனது தந்தையாருடன் நான் நடந்து அவர் நடத்தும் வியாபார நிலையத் திற்குச் செல்வேன். எனது தந்தையார் மிகவும் சிறிய தொரு காய்கறிகள் விற்கும் கடை வைத்திருந்தார். அதிலிருந்து வரும் வருமானம் எமது குடும்பத்தின் தேவைகளுக்குப் போதாது. அதனால் அவர் அம்மாவைக்

கடையில் இருந்து விற்பனையைக் கவனிக்குமாறு கூறிவிட்டுக் கூலிவேலைசெய்யக் கமங்களுக்குச் செல்வார்"

"அன்று நானும் அப்பாவும் கடைக்குச் சென்ற போது மதுபோதையில் மோட்டார் வாகனத்தைச் செலுத்திக் கொண்டு வந்த ஒருவன் அப்பாவை மோதிவிட்டான். அப்பா பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் சுயநினை வடையாமலே இறந்து விட்டார். நான் ஆடிப்போனேன். அம்மா செயலிழந்து விட்டார்"

"சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அப்பா எனக்கு நீதியைப் போதிப்பர். நீதியான கதைகளைக் கூறுவார். ஒரு நாள் சொன்னார்; "மகனே எந்தத் துன்பம் வந்த போதும் கலங்கக்கூடாது. தைரியத்தை இழக்கக் கூடாது. துணிவுடன் இருந்து வரும் துன்பங்களை எதிர்த்துப் போராட வேண்டும்"என்பார். கதை சொல்லுவார். ஒரு வயற்கரையிலே மேய்ந்த பசுவொன்று கன்று ஈன்று விட்டு இறந்து விட்டது. அப்பசுக் கன்று பட்டியிலுள்ள மாடுகளுடன் சேர்ந்து புல்வெளிகளுக்குச் சென்று மேய்ந்து வந்தது. கன்று ஈன்ற இன்னொரு பசுவில் அது பால் குடித்தது. நாளடைவில் அது வளர்ந்து மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் முதலாவதாக வந்தது. அது போலக் கஷ்டம், கரைச்சல், முதல் இல்லை, கற்க உபகரணங்கள் இல்லையென்று மனஞ்சோராது துணிவுடன் காளைக் கன்றைப் போல வளர்ந்து முன்னேற வேண்டும்" என்பார். அந்தக் கதை தான் எனது அப்பா இறந்த பின்பு எனக்கு ஞாபகத்திற்கு வரும்"

"அம்மாவைக் கடையில் இருந்தி விட்டு நான் கதிரேசு என்ற வர்த்தகரின் வியாபார நிலையத்தில் சிப்பந்தியாகச் சேர்ந்தேன். எனது வருமானத்திற்கு ஏற்றளவு பொருட்களை அவரிடம் வாங்கி வந்து அம்மாவிடம் கொடுத்து விற்பனை செய்து வந்தேன். எனது உற்சாகத்தைக் கண்ட கதிரேசன் அவர்கள் ஒரு நாள்ச்சொன்னார்;

"முருகப்பா, நீ உழைப்பில் நம்பிக்கை கொண்டவன், துணிவானவன். நம்பிக்கைக்குரியவன். அதனால் நான் உனக்குக் கடனாகப் பொருட்களைத் தருகிறேன். தினமும் விற்று முடியப் பணத்தைக் கொண்டுவந்து தந்து விட்டுப் பொருட்களை வாங்கு" என்றார்".

"எனக்குச் சரியான மகிழ்ச்சி. அவர் கூறியபடி தினமும் தேவையான பொருட்களை வாங்கி விற்று விட்டுப் பணத்தைக் கொடுப்பேன். என்னில் நம்பிக்கை வைத்த அவர் கூடியளவு பொருட்களைத் தந்தார். நான் நேர்மையாக நடந்து இன்று பெரும் பணக்காரனாகி விட்டேன்".

"என்னைப் போலத் திறமைசாலிகள் பலர் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு உதவி வருகிறேன். ஊரவர்கள் அப்பாவுக்குச் சம்பாதிக்கத் தெரியாது. அவருக்குப் பிறந்த நானும் பிழைக்கத் தெரியாதவனாகவே இருப்பேன் என்று கேலி செய்வார்கள். அதையெல்லாம் கவனிக்காது மனத்துணிவுடன் உற்சாகமாக உழைத்தேன். "அப்பா அடிக்கடி சொல்வார், அங்காடி மேயும்

பழங்கன்று ஏறாததும் உண்டு.” என்று அதனால் தான் கலையரசியும் முன்னேறுவாள் என்று உறுதியாக நம்புகிறேன்” என்றார். முருகப்பச் செட்டியார்”.

“எனவே முதல் இல்லை, முதல் போதாது என்று எண்ணாது உள்ளததைக் கொண்டு முன்னேறிப் பெரியவனாதல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**உள்ளூ ரவரால் உணர்ந்தாம் முதலெனினும்**

**எள்ளாமை வேண்டும்; இலங்கிழாய்! – தள்ளாது**

**அழுங்கல் முதுபதி அங்காடி மேயும்**

**பழங்கன்று ஏறாதலும் உண்டு.**

கைமுதல் சிறிதானாலும் விடாமுயற்சியால் அதைப்பெருக்கி இகழ்ந்தவர்கள் மெச்சும் படியாகவாழலாம். **‘அங்காடி மேயும் பழங்கன்று ஏறாதலும் உண்டு’** என்பது பழமொழி.

5 “அன்பானவர்களே, கீழ்மக்கள் கீழ்த்தரமான செயல்களை பழிபாவங்களுக்கு அஞ்சிக் கூடக் கைவிட மாட்டார்கள். அவர்கள் தமது காரியங்களைப் பார்ப்பதற்காக எதையுஞ் செய்வார்கள்.

“நாவலூரிலே கோவலன் என்றொருவன் இருந்தான். அவன் குடிப்பதற்காக யார் வீட்டிலும் திருடுவான். அவனது மனைவி ஊரில் உள்ள வீடுகளில் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். அவர்களுக்கு ஓர் ஆண் பிள்ளையும், ஒரு பெண் பிள்ளையும்

உண்டு. மூத்தவள் பெண் மாலதி. இளையவன் வைகுந்தன். இருவரும் பாடசாலைக்குச் செல்வதில்லை. தாயுடன் கூலி வேலை செய்து வந்தனர்".

"மாலதிக்கு நோய் வந்து விட்டது. தாய் பார்வதி தான் கூலி வேலை செய்யும் வீடுகளில், மகள் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கூறிப் பணம் பெற்று மருந்து எடுத்து வந்தாள்".

"வைத்தியர்கள் மாலதிக்குச் சத்தான உணவு வகைகளைக் கொடுக்கும்படி கூறினர். அதைப் பார்வதி தான் வேலை செய்யும் வீட்டாருக்குச் சொல்வாள். பார்வதி நேர்மையானவள். கடும் உழைப்பாளி. நேர காலம் பாராது வேலைகள் செய்பவள். அதனால் அவள் வேலை செய்யும் வீட்டார் அவள் மீது இரக்கப்பட்டு அவளுக்குப் பணமும், மாலதிக்குச் சத்தான உணவுவகைகளும் கொடுத்து வந்தனர்".

"பார்வதி அவற்றைக் கணவன் இல்லாத வேளைகளில் தான் வீட்டுக்குக் கொண்டு வந்து மாலதிக்குக் கொடுப்பாள். கோவலன் அதைக் கண்டு விட்டால் அதை எடுத்துச் சென்று அறா விலைக்கு விற்று விட்டுக் குடித்து விடுவான்."

"ஒரு நாள் ஐந்நூறு ரூபா பெறுமதியான சத்துணவு ஒன்றை பார்வதி வேலை செய்யும் வீட்டார் கொடுத்தனர். அதைக் கொண்டு

வரும் போது கோவலன் கண்டு விட்டான். அதை அவளிடம் பறித்துச் சென்று கடையில் நூறு ரூபாவுக்கு விற்று விட்டு மது அருந்தினான்.”

“ஊரில் கடை வைத்திருக்கும் செல்லப்பா மிகவும் கீழ்த்தரமானவன். அவன் ஊரில் திருடர்கள் திருடி வந்து கொடுக்கும் பொருட்களை மிகவும் மலிவான விலையில் வாங்குவான். அதற்காகப் பலமுறை காவல்துறையினர் பிடித்தும் அவன் திருந்தவில்லை. கோபாலனும் அவனது தீயநண்பர்களும் சேர்ந்த ஒரு முறை வரதனின் கர்ப்பமான பசுவைத் திருடி வெட்டி இறைச்சியைப் பங்கு போட்டு விற்று விட்டனர். அதற்காகக் காவல் துறையினர் பிடித்து வழக்குத் தாக்கல் செய்தனர். கோபாலனையும் நண்பர்களையும் குற்றவாளிகள் எனக் கண்டு கொண்ட நீதிபதி அவர்களுக்கு மூன்று வருட காலம் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். தண்டனையை அனுபவித்து விட்டு விடுதலையான கோபாலனும் அவனது நண்பர்களும் மீண்டும் ஊரில் திருடுகிறார்கள்”

“இது காட்டில் வளரும் கொடிய மிருகங்கள் சிறிய விலங்குகளைக் கொன்று தின்னும் போது, அச்சிறு விலங்குகள் அவலக் குரல் எழுப்பித் துன்பப்படும். அப்படித் துன்பப்படுவதைக் கொடிய மிருகங்கள் உணர்ந்து கொள்ளாதது போல, எப்பொழுதும் கீழ்த்தரமான செயல்களைச் செய்யும் கொடிய மனிதர்கள், தம்மீது பழிச் சொற்கள் பலவும் வந்து சேர்ந்தாலும் அதைப் பொருட்படுத்தாது மேலும் மேலும் கொடுமைகளையே செய்வர். பழிக்கு அஞ்சிக்கூட கீழ்மக்கள் தம் செயல்களைக் கைவிட மாட்டார்கள்”

“அதனால் அன்பானவர்களே, கீழ்த்தரமான செயல்களைச் செய்யாதீர்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**கருத்தொழிலர் ஆய கடையாயார் தம்மேல்**
**பெரும்பழி யேறுவ பேணார் – இரும்புன்னை**
**புன்புலால் தீர்க்கும் துறைவ! மற்று அஞ்சாதே**
**தின்பது அழுவதன் கண்.**

தீயவர்கள் கீழ்த்தரமான செய்களைப் பழிக்கு அஞ்சியும் கூடக் கைவிடமாட்டார்கள்.‘**அஞ்சாதே தின்பது அழுவதன் கண்**’ என்பது பழமொழி

6 அன்பானவர்களே, மனிதப் பிறப்பு கிடைத்தற்கரியது. பெரும் புண்ணிய பயன்களால் வந்தமைவது. பிறப்புக்களை அறுப்பதற்காக இறைவனால் கொடுக்கப்படுவது. எடுத்த மனிதப் பிறவியிலேயே தான தர்மங்கள் செய்து, நீதிவழுவாது வாழ்ந்து இறைவனை அடைதல் வேண்டும். மனிதனுக்கு நோய்கள் வரும், வறுமை வரும், இயலாமை வரும், மரணம் வரும், இவைகள் வருமுன் நலிந்தோர்க்கு உதவிகள் செய்தல் வேண்டும். வயதிருக்கிறது பின் தானதர்மம் செய்யலாம் என்று நினைக்கக்கூடாது. பாரிய நோய்கள் வந்து நிலையை இழக்கச் செய்யும். சொல்லாமல் கொள்ளாமல் மரணம் வந்து சேரும். அதனால் வாழும் போதே தர்மத்தைச் செய்யுங்கள்”

“முருகப்பச் செட்டியார் மிகவும் வறுமைப்பட்ட நிலையில் இருந்தவர். அவரது தகப்பனார் சிறுவயதில் விபத்தில் சிக்கிச்

காலமானார். தகப்பனார் நடத்திய சிறிய வியாபார நிலையத்தைச் சிறு வயதிலேயே அவர் நடத்தி வந்தார். அவரின் இனத்தவன் அருமைநாதன், அவனுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று வந்தனர். நல்ல வசதியாக வாழ்ந்த அருமைநாதன் முருகப்பாச் செட்டியாரின் தந்தை இறந்த போது சிறிய தொகைப் பணம் கொடுத்து முருகப்பாச் செட்டியார் வியாபார நிலையம் வைக்க உதவியவன். காலப்போக்கில் முருகப்பா அருமைநாதன் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டான். தற்செயலாக ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் அருமை நாதனின் இரண்டு கண்களும் பார்வையை இழந்தன. அவனால் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. பிள்ளைகளைக் கற்பிக்க முடியவில்லை. அதையறிந்த முருகப்பா, அருமைநாதனின் குடும்பத்திற்கு உதவிகள் செய்தான். இன்று அந்தக் குடும்பம் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்து வருகிறது".

"சில தினங்களுக்கு முன்பு அருமைநாதன் எனது ஆச்சிரமத்திற்கு வந்திருந்த போது சொன்னான்; "சுவாமியார், முருகப்பா எனது உறவினன் அல்ல. அந்தக் குடும்பம் எனக்கு நட்பானதும் அல்ல. தகப்பன் இறந்து அல்லற்பட்ட முருகப்பாவுக்கு ஏதாவது உதவி செய்தல் வேண்டுமென்று நினைத்து ஒரு சிறுதொகைப் பணத்தை அன்று கொடுத்தேன். அதையும் அவன் திருப்பித் தந்துவிட்டான். பின் நான் கண்களை இழந்து தவித்தபோது அவன் தான் எனது குடும்பத்திற்குக் கண்ணாய் இருந்தவன். இன்று எமது குடும்பம் இந்த நிலையை அடைய அவன்தான் காரணம். எனது

குடும்பத்திற்கு அவன் உதவிகள் செய்யும் போது அவனுக்குப் பதினேழு வயது. அந்தச் சிறுவயதில் தனது குடும்பத்தையும் காப்பாற்றி, எனது குடும்பத்தையும் வாழ வைத்தவன் அவன். அவன் மட்டும் உதவாதிருந்தால் நாம் நஞ்சு குடித்திருப்போம்" என்றான்".

"உழைப்பவன், உழைக்கும் சிறு தொகையானாலும் அதில் இயன்றளவு தானம் செய்யதல் வேண்டும். முருகப்பா பதினேழு வயதில் அருமைநாதனின் குடும்பத்திற்கு உதவி செய்தவன். அந்த நேரம் அவனது குடும்பம் மிகவும் வறுமைப்பட்டிருந்தது. அப்படியான வேளையில் அவன் செய்த தர்மம் தான் இன்று அவனை உயர்த்தி வைத்துள்ளது. அவனிடம் இன்று நூற்றுக்கணக்கான கப்பல்கள் உள்ளன. இருந்தும் கர்வங்கொள்ளாது சாதாரண குடிமகனைப் போல வாழ்கிறான்".

"தர்மம் பல வழிகளாலும் செய்யலாம். பணம் பொருள் கொடுப்பது தான் தர்மம் அல்ல. இன்சொல் பேசுவதும் தர்மம். தகுந்த ஆலோசனைகள் வழங்குவதும் தர்மம். இயலாதவனுக்கு வேலை செய்து கொடுப்பதும் தர்மம். இப்படி தர்மம் பல வகைப்படும். ஒவ்வொருவரும் தமது இயல்புக்கேற்றபடி தர்மம் செய்து வாழுதல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தோற்றம் அரியதாய மக்கட் பிறப்பினால்**

**ஆற்றும் துணையும் அறஞ்செய்க! – மாற்றின்றி**

**அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற் றுடனியைந்து**

**துஞ்ச வருமே துயக்கு.**

வாழ்க்கை நிலையில்லாதது. அதனால் இயன்ற போதெல்லாம் தர்மஞ் செய்தல் வேண்டும். '**அஞ்சும் பிணி மூப்பு அருங்கூற்றுடனியைந்து துஞ்ச வருமே துயக்கு**' என்பது பழமொழி.

7 அன்பானவர்களே, கோழைகளுக்குப் பாதுகாப்பே கிடையாது. அதனால் தைரியத்தை வளர்க்க வேண்டும். துணிவைப் பெருக்க வேண்டும். இவற்றைப் பெருக்க ஆரோக்கியத்தை வளர்த்தல் வேண்டும். உடற்தைரியத்தை விட மனத்தைரியமே முக்கியமானது. ஒரு பலசாலி இருநூற்றி ஐம்பது இறாத்தல் எடையைத் தனியே தூக்கிச் சுமப்பான். ஆனால் பாம்புக்குப் பயப்படுவான்; பேய்க்குப் பயப்படுவான்; உள்ளூர்ச் சண்டியர்களுக்குப் பயப்படுவான்"

"நாவலூரிலே ஒரு குடிகாரன் இருந்தான். அவன் அந்தப் பல சாலியை விடப் பல மடங்கு பலவீனமானவன். ஆனால் எந்த வேளையிலும் ஒரு கூரிய சுத்தியலை வைத்து ஊரவரை வெருட்டுவான். அவனுக்கு, இந்தப் பலசாலிகூடப் பயம்."

"மனப்பலமுள்ளவன் பயப்படமாட்டான். அத்துடன் எந்தச் செயலையும் துணிவுடன் செய்து முடிப்பான். செயற்கரிய செயல்களைச்

செய்வதற்கு உடற்பலத்தையும், மூளைப்பலத்தையும் விட மனப்பலம் தான் முக்கியம். மனம் துணிந்து இந்தக் காரியத்தைச் செய்து முடிப்பேன் என்று தீர்மானித்தால், மூளை, பணம், பொருள் யாவும் வலிய வந்தடையும். எனவே மனப்பலத்தை உண்டாக்குங்கள். மனம் பலமடைய வேண்டுமானால், மனதில் நம்பிக்கை வேண்டும்; கடவுள் நம்பிக்கை வேண்டும். இந்த இரண்டும் ஒரு சேர இருந்தால் வானத்தைக்கூட வில்லாக வளைக்கலாம். மலையையும் தூக்கலாம்."

"அன்பானவர்களே, கோழையான ஒருவனுக்கு வலிமை உடையவர்களின் துணையிருந்தாலும், அவன் மன உறுதியுடன் வாழ மாட்டான். எவ்வேளையிலும் பயந்து கொண்டேயிருப்பான். இப்படியானவனை எவ்வழியாலும் திருத்த முடியாது. வலிமையை ஒருவர் தமக்குத் தாமே உருவாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர அதைப் பிறரால் கொடுக்க முடியாது".

"எதிரியினுடைய பலத்தை அளவுக்கதிகமாக மிகைப்படுத்தி எண்ணுவது, எதிரியினுடைய பலத்தை அறியாமல் இருப்பது, தன்னை மிகவும் கீழானவனாக நினைப்பது, இவையே பலத்தை இழப்பதற்குரிய காரணங்களாகும்".

"வேலூரின் அரசன் மாத்தாண்டன் மிகவும் பலவீனமானவன். அந்த நாட்டை ஆண்ட வீரவர்மனின் மகன் என்பதால், வீரவர்மன் அவனுக்கு முடிசூட்டி வைத்தான். நாவையூர் மன்னன் சேதுபதி மிகுந்த பலசாலி. பிற நாட்டரசர்கள் அவனது பலத்தைக் கேட்டதும் அஞ்சி

நடுநடுங்குவர். சேதுபதி மார்த்தாண்டனின் பள்ளித்தோழன். இணைபிரியாத நண்பன். மார்தாண்டன் முடிசூடியதும் சேதுபதி சொன்னான்; "நண்பனே, பயம் கொள்ள வேண்டாம். நான் உனது இணைபிரியாத நண்பன். உனக்கொரு ஆபத்து வந்தால் எனக்கு அது வந்தது போலாகும். எனவே எதையும் எண்ணிக் கலங்காது ஆட்சியை முறைப்படி செய். உனக்கு உதவிதேவையானால் எவ்வேளையிலும் உதவ நான் தயாராக உள்ளேன்" என்றான்".

"இருப்பினும் மார்த்தாண்டன் காரணமில்லாது பயப்படுவான். வேலூருக்கு அருகே திருவாவூர் என்றொரு நாடு இருந்தது. அதன் அரசனான கலையரசன் அயல் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தான். அவன் தனது நாட்டையும் கைப்பற்றித் தன்னைக் கொன்று விடுவான் என்று காரணமில்லாது மார்த்தாண்டன் பயந்து கொண்டிருந்தான்."

"இதை உணர்ந்து கொண்ட தளபதி பாண்டியன் தந்திரமாக மார்த்தாண்டனை அரசபதவியிலிருந்து அகற்றி விட்டுத்தான் முடிசூட விரும்பினான். அதைப் பகிரங்கமாகச் செய்தால் மார்த்தாண்டனது நண்பனான சேதுபதி தன்னைக் கொன்று விடுவானென்று பாண்டியனுக்குத் தெரியும்"

"அதனால், தனது அறிவால் மார்த்தாண்டனைத் தவஞ்செய்யக் காட்டுக்கு அனுப்பத் திட்டமிட்டான். அறிவாளி தனக்கு ஆபத்தைத் தரும் எந்த விடயத்திலும் ஈடுபடமாட்டான். அறிவாளி எந்தக் காரியத்தில்

ஈடுபட்டாலும் அதை வெற்றியடையச் செய்வான். விவேகமுள்ள மனிதன் மன்னனாகலாம்; விஷத்தையும் குடிக்கலாம்; எந்தப் பெண்களுடனும் பழகலாம்.”

“இதை உணர்ந்திருந்த பாண்டியன் மார்த்தாண்டனுக்குச் சொன்னான்; “மன்னா, திருவாரூர் மன்னன், நாரையூர் மன்னனின் சகோதரியைத் திருமணம் செய்யப் போகிறான். அதன் பின் அவர்கள் இரத்த உறவினர்களாகி விடுவார்கள். திருவாரூர் மன்னன் கலையரசன் அயல் நாடுகளைக் கைப்பற்றி வருகிறான். ஒற்றர்கள் எமது நாட்டையும் அவன் கைப்பற்றப் போகிறான்” என்கின்றனர். எனவே நாம் போருக்குத் தயாராக இருத்தல் வேண்டும்.” என்றான்”.

“அதன்பின் மார்த்தாண்டன் எதுவும் செய்யத் தோன்றாதவனாக இருந்தான். முதலமைச்சர் நாரையூர் மன்னன் உனது பள்ளித்தோழன். அதனால் அப்படி எதுவும் நடைபெறாது என்று கூறியும் அவன் நம்பாது நாட்டுப் பொறுப்பை பாண்டியனிடங் கொடுத்து விட்டுக் காட்டிற்குத் தவஞ் செய்யச் சென்றான்.”

“கோழைகளுக்குப் புத்திமதிகள் சொல்ல முடியாது. அவர்கள் தாமாகவும் சிந்திக்க மாட்டார்கள், தெரிந்தவர்கள் சொல்வதையும் கேட்கமாட்டார்கள். பலம் வாய்ந்த கோட்டைக்குள் பாதுகாப்பாக இருந்தாலும் அவர்கள் காரணமின்றிப் பயப்படுவார்கள். சில நாட்களின் பின் காட்டில் தவஞ்செய்த மார்த்தாண்டனைப் பாண்டியன் கொன்று விட்டு அவனைக் காட்டு மிருகங்கள் கொன்றுவிட்டதாகச் செய்தி

பரப்பினான். அதனால் தைரியத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**வன்சார்பு உடையர் எனினும் வலிபெய்து**
**தஞ்சார்பு இலாதாரைத் தேசூன்றல் ஆகுமோ**
**மஞ்சுசூழ் சோலை மலைநாட! யார்க்கானும்**
**அஞ்சுவார்க் கில்லை அரண்.**

வலிமையை ஒருவர் தாமே தமக்குள் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். **'அஞ்சுவார்க்கு இல்லை அரண்'** என்பது பழமொழி.

8 "அன்பானவர்களே,ஒருவனை அவனோடு சம்பந்தப்பட்டவர்கள் புகழக்கூடாது. அவர்கள் அவனைத் தமது நட்புக்காக அல்லது இலாபத்திற்காக அல்லது பொருளுக்காகப் புகழ்வர். தாயினாலோ அல்லது தந்தையினாலோ கூடப் புகழ்ப்படாது தன்னைத்தானே புகழ்ந்து கொண்டு திரிபவன் மிகமிகக் கேவலமானவன்".

"புகழ் தன்னைத் தேடி வரும்படி வாழுதல் வேண்டும். புகழ் வரவேண்டுமானால் வறுமைப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும். பெருமையாகப் பேசப்படுவது வறுமை காரணமாகத் துன்பப்படுவோருக்கு கொடுத்துதவுபவர்களைப் பற்றியே. புகழ்தான் அழியாமல் இருந்து புகழுக்குரியவனின் பெயரைக் காப்பாற்றும். புகழுடன் வாழ்ந்தவர்களைப் பற்றித் தான் மனிதர்கள் பேசுவார்களே தவிரத் தேவர்களைப் பற்றிப் பேசமாட்டார்கள்".

“ஒருவனது செல்வங் குறையக் குறையப் புகழ் அதிகரிக்கும். அப்புகழ் செல்வம் அழிந்த பின்பும் நெடுங்காலம் நிலைத்து நிற்கும். இப்படியான வல்லமை கொண்ட புகழைப் பெற வேண்டுமானால் புகழைப் பெற விரும்புபவன்  செயற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டுமே தவிரத் தன்னைத் தான் புகழக் கூடாது. தன்னைத் தான் புகழ்ந்தால் பெரும் துன்பத்தையும் இழுக்கையும் அது தரும்”.

“ நாரையூரில் மதிவாணன் என்றொரு  தனவந்தன் இருந்தான். அவன் பெரிய வணிகன். அவனிடம் ஏராளமான கப்பல்கள் இருந்தன. அவன் தனது நாட்டில் விளையும் பொருட்களை வாங்கிச் சென்று பிறநாடுகளில் விற்பதும், பிறநாடுகளில் இருந்து பொருட்களைக் கொண்டு வந்து தனது நாட்டில் விற்பதும் வழக்கம். அவனிடம் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர். பெருஞ்செல்வம் அவனிடம் குவிந்திருந்த போதும் அவன் யாருக்கும் ஈயாத கஞ்சனாகவே இருந்தான். ஊரில் உள்ள பிரமுகர்கள் சிலருக்கு அவன் தேவைக்கதிகமாகப் பொருட்களைக் கொடுப்பான். அதனால் அவர்கள் அவனைப் பெருங்கொடையாளி, தர்மவானென ஊர்முழுவதும் சொல்லித் திரிவார்கள்”.

“அந்த ஊரிலே வேந்தனார் என்றொரு புலவர் இருந்தார். அவர் மிகவும் வறியவர். அவருக்குப் பத்துப் பிள்ளைகள். வேளாண்மை செய்து தனது வாழ்க்கையைத் துன்பங்களுடன் கழித்துக் கொண்டிருந்தார்”

“வணிகனிடம் பணம் பெறும் ஊர்பிரமுகர்கள் வணிகனிடஞ் சென்று வேந்தனாரைப் பற்றிக் கூறி, அவரைக் கொண்டு புகழ்ந்து பாடும்படி அவனது ஆசையைத் தூண்டி விட்டனர். அவன் ஊர்ப்பிரமுகர்களிடம் கொஞ்சப் பணத்தைக் கொடுத்து அதை வேந்தனாரிடம் கொடுத்துத் தன்னைப் புகழ்ந்து பாடும்படி கேட்கச்சொன்னான். ஊர்ப்பிரமுகர்கள் வணிகன் கொடுத்த பணத்தைக் கொடுக்காது வணிகனைப் புகழ்ந்து பாடும்படி கேட்டனர். புகழ்ந்து பாடினால் பெரும் பொருள் பெற்றுத் தருவதாகவும் கூறினார்”

“ஊர்ப்பிரமுகர்கள், வணிகனிடம் பணம் பெற்றுக் கொண்டு ஊரில் அவனைப் புகழ்ந்து கொண்டு திரிவது புலவருக்குத் தெரியும். அதனால் அவர் சிவன் கோயிலில் பௌர்ணமி அன்று அவனைப் புகழ்ந்து பாடுவதாகக் கூறினார்.”

“பௌர்ணமியன்று சிவன்கோவிலில் மக்கள் கூடி நின்றனர். ஒழுக்க சீலரான புலவர் எப்படி கஞ்சனான வணிகனைப் புகழ்ந்து பாடப் போகிறார் என்று மக்கள் எதிர்பார்த்தனர். புலவர் சிவன் கோயிலுக்கு வந்து பாடலைப் பாடினார்.”

**“கஞ்சனே கஞ்சனைப் புகழும் நஞ்சரே**
**நஞ்சை உண்ட நம் தேவனே**
**அடுப்பின் கடை முடங்கும் நாயை**
**புலியென்று எப்படிக் கூறுவேன்”**

என்று பாடினார் புலவர்.

ஆகையால் அன்பானவர்களே, தன்னைப் பிறர் புகழவேண்டும் என்று நினைக்காதீர்கள். அது எப்போதும் ஆபத்தையே தரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தாயானும் தந்தையா லானும் மிகவின்றி**
**வாயின்மீக் கூறும் அவர்களை ஏத்துதல்**
**நோயின்று எனினும், அடுப்பின் கடைமுடங்கும்**
**நாயைப் புலியாம் எனல்.**

குடிப்பெருமை இல்லாதவனின் போலித் தோற்றத்தை உண்மையென்று நினைத்துப் புகழ்வது கூடாது, ‘**அடுப்பின்கடை முடங்கும் நாயைப் புலியாம் எனல்’** என்பது பழமொழியாகும்.

9

அன்பானவர்களே, ஓர் அரசன் தன் குடிமக்கள் நல்ல வழியில் வாழத்தக்கதாக அரசாள வேண்டும். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்றொரு முதுமொழி உண்டு. அரசன் கொள்ளைக்காரனாக இருந்தால், மக்களும் கொள்ளைக்காரர்களாக இருப்பார்கள்; அரசன் பெண் பித்தனாக இருந்தால், மக்களும் பெண் பித்தர்களாகவே இருப்பார்கள். மன்னன் அறவழியில் நடந்து மக்களை நன்னெறிப்படுத்தி தானும் அறம் வழுவாது வாழ்ந்தால் மக்களும் அவ்வாறே வாழ்வர்.”

“இத்தன்மை அரசனுக்கு மட்டும் பொருத்தமானதல்ல, குடிமக்கள் அத்தனை பேருக்கும் பொருத்தமானது. ஒரு தந்தை தன் மக்களை நல்லவர்களாக, வல்லவர்களாக, ஊருக்கு உதவுபவர்களாக,

கல்வியில் மேம்பட்டவர்களாக வளர்த்தெடுத்தால், அம்மக்கள் பெற்றோருக்கும் உதவுவார்கள்; மக்களுக்கும் உதவுவார்கள். நாட்டிற்கும் உதவுவார்கள்; இதனால் அவர்களுக்கும் பெற்றோருக்கும் நாட்டிற்கும் பெருமையும் புகழும் உண்டாகும்."

"சிற்பி ஒருவன் சிவனின் உருவச் சிலையைச் செதுக்குகிறான். பிற்காலத்தில் அச்சிலையை மக்களோடு சேர்த்து சிற்பியும் வணங்கிப் பெருமை அடைகிறான். முருகப்பச் செட்டியாரின் மூத்த மகன் ஆருரன் வைத்தியன். மேலை நாட்டிற்குச் சென்று நிபுணத்துவம் பெற்றுத்தாய் நாடு திரும்பியவன். அரசாங்க வைத்தியசாலையில் கடமை செய்தாலும், வீட்டில் வைத்தியசாலை அமைத்து இலவசமாக மக்களைப் பரிசீலனை செய்து மருந்து எழுதிக் கொடுப்பான். அந்த மருந்தை அவர்கள் கடையில் வாங்குவார்கள். ஏழை எளியவர்களுக்கு அவன் மருந்தையும் இலவசமாகக் கொடுத்து வந்தான்".

"அந்த ஊரிலே பெரும் தனவந்தன் சிறுத்தொண்டன். பெரும் சிவபக்தன். தான தர்மம் செய்வதில் பெருவிருப்புடைவன். அவன் திருமணமாகிப் பத்து வருடங்கள் பிள்ளைப் பாக்கியமில்லாதிருந்தான். மனைவி வள்ளியம்மை பிடிக்காத விரதங்கள் இல்லை; செல்லாத கோயில்கள் இல்லை. பத்து வருடங்களின் பின் இறையருளால் ஆண்பிள்ளை ஒன்று பிறந்தது. அதற்குக் கணேசன் என நாமமிட்டு வளர்த்து வந்தான். கணேசனுக்குப் பத்து வயதான போது நோய் ஒன்று தொற்றிக் கொண்டது. சிறுத்தொண்டன் ஆடிப்போனார். அவர் செய்யாத

வைத்தியம் இல்லை. செல்லாத கோயில்கள் இல்லை. இருப்பினும் கணேசனது நோய் தீரவில்லை"

"முருகப்பச் செட்டியாருக்கும் சிறுத்தொண்டனுக்கும் வியாபார விடயத்தில் சில முரண்பாடுகள் இருந்தமையால் இருவரும் கதைப்பதில்லை. அதனால் பேர் பெற்ற வைத்தியனான ஆரூரனிடம் தனது மகனைக் காட்டச் சிறுத்தொண்டன் விரும்பவில்லை. அது செட்டியாருக்குத் தெரியும். எனினும் பெருமை பாராது செட்டியார் தனது மகனுக்குச் சொன்னார்; "ஆரூரா, நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. இருப்பினும் சிறுத்தொண்டன் என்னை விரோதியாகவே நினைக்கிறான். இது எனக்கு மிகுந்த கவலை. இருப்பினும் அவனது மகன் கணேசன் நோயால் துன்பப்படுகிறான். பாவம் அவன். எனக்கென்றால் நீ வைத்தியஞ் செய்தால் சுகப்படுமென்று தோன்றுகிறது. அவன் இங்கு வரமாட்டான். நீ அங்கு சென்று பார்" என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் கூடக் காத்திராது சென்று விட்டார்"

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றறிந்த ஆரூரன் சிறுத்தொண்டனது வீட்டுக்குச் சென்றார். சிறுத்தொண்டனுக்கு கணேசனை ஆரூரனிடம் காட்ட வேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதும், அவரது தற்பெருமை அதை மறைத்தது. அதிர்ச்சியுடன் ஆரூரனை வரவேற்றார். ஆரூரன் கணேசனைப் பரிசோதித்து மருந்துகள் கொடுத்தான். ஒரு மாத காலம் அவரது வீட்டுக்குச் சென்று வந்தான். கணேசனது நோய் மாறியது."

“சிறுத்தொண்டனும் மனைவியும் கணேசனும் முருகப்பச் செட்டியாரின் வீட்டுக்கு வந்தனர்; “செட்டியாரே, உம்மை நான் தவறாக நினைத்து விட்டேன். நீர் கடவுள். அதனால் தான் கடவுளைப் போல பிள்ளைகளைப் பெற்றுள்ளீர். சிற்பியானவன் செதுக்கும் சிலையால் பெருமை கொள்வதோடு, தானும் வணங்கிப் பயன்பெறுகிறான்” அதைப் போன்றது தான் உங்கள் நிலை” என்றார். ஆகவே பிள்ளைகளை நல்ல முறையில் வளருங்கள். அதற்காக உங்களை நீங்கள் தியாகம் செய்யுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச்**
**செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும் – அந்நெறி**
**மான் சேர்ந்த நோக்கினாய்! ஆங்க, அணங்காகும்**
**தான் செய்த பாவை தனக்கு.**

அரசனும் மக்களும் தம் மக்களைச் செந்நெறியில் வளர்த்தல் வேண்டும். ‘**அணங்காகும் தான் செய்த பாவை தனக்கு**’ என்பது பழமொழி.

**10** அன்பானவர்களே, ஒருவர் முகத்துதிக்கு மகிழக்கூடாது. பெரும் புகழைத் தரும் காரியங்களைச் செய்து வெற்றியீட்டினாலும் அதை முகஸ்துதியாக தனக்கு மிகவும் வேண்டியவர்கள் கூறினாலும் அதை ஏற்கக்கூடாது. முகஸ்துதி கூறுபவர்களைத் தடுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அதனால் பெரும் துன்பங்கள் உண்டாகும். முகஸ்துதி ஒருவனைக் கர்வப்பட வைத்து வேண்டாத செயல்கள் யாவற்றையும் செய்ய வைக்கும். முகஸ்துதியை விரும்பினால் மனதில் கர்வமும்,

அகம்பாவமும், தற்பெருமையும் உண்டாகும். அதனால் தன்னை விட யாரும் இல்லை என்ற நிலை உருவாகி, அழிவு உண்டாகும். பொருத்தமில்லாத ஆபரணங்களை ஒருவர் அணியக்கூடாது அதுபோலப் பொருத்தமில்லாத முகஸ்துதியை ஏற்கவும் கூடாது”.

“நாகையூரில் வாழ்ந்த மதிவாணன் என்ற வணிகன் யாருக்கும் எதுவும் கொடுக்க மாட்டான். கோயில் கட்டுவதானால் கூட கோயில் மண்டபத்தில் தனது பெயரைப் போட்டால் தான் பணம் தருவேன் என்பான். அதனால் யாரும் அவனிடம் பொருள் கேட்டுச் செல்வதில்லை. நாகையூரில் ஏகாம்பரம் என்றொரு தரகன் இருந்தான். அவன் தான் வாழ்வதற்காக எதையும் செய்யும் கயவன். ஒரு முறை கடற்கொள்ளையர்கள் கடலில் செல்லும் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். அதனால் கடல் வாணிபம் செய்வோர் எல்லோரும் ஒன்று கூடித் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யும் வரை கடல் வாணிபத்தை நிறுத்துவது என்று தீர்மானித்தனர். ஏகாம்பரத்திற்கு கடல் வாணிபக் கொள்ளையர்களோடு இரகசியத் தொடர்பிருந்தது. சிறுத்தொண்டன், முருகப்பாச் செட்டியார் போன்றோர் நிதானமானவர்கள். சொன்னசொற் தவறாதவர்கள். அதனால் தனது ஏமாற்று வேலைகள் அவர்களிருவரிடமும் பலியாதென்பதை உணர்ந்து அவன் மதிவாணனிடம் வந்தான். மதிவாணனுக்கு அவன் கள்ளப் பொருட்கள் வாங்கிக் கொடுப்பவன்”

“மதிவாணனன், ஏகாம்பரத்தைத் தடல்புடலாக வரவேற்றார். ஏகாம்பரம் சொன்னான்; “ஐயா, நீங்கள் எந்தப் பெரிய மனிதன்.

உங்களை மதியாது முருகப்பாச்செட்டியாரையும் சிறுத் தொண்டனையும் மதித்து தூக்கி வைத்திருக்கிறார்கள். கடற் கொந்தளிப்புள்ள காலங்களில் நீங்கள் துணிந்து கப்பலைக் கொண்டு சென்றீர்கள். அத்துடன் கடற்கொள்ளைக் காரர் உங்களை மதிக்கிறார்கள். சிறுத்தொண்டனையும், முருகப்பாச் செட்டியாரையும் தான் பழிவாங்க நினைக்கிறார்கள். நீங்கள் பயப்படாதவர் ; துணிவானவர்; செல்வாக்குள்ளவர். தொழில் செய்வதானால் கெட்டவர்களையும் கைக்குள் வைத்திருத்தல் வேண்டும். நீங்கள் கெட்டிக்காரன்." என்றான் ஏகாம்பரம். மதிவாணன் முகஸ்துதியில் மயங்கிப் போனார். அவரது மனதை அகந்தை பற்றிப் பிடித்தது."

"அதை உணர்த்த ஏகாம்பரம் சொன்னான்; "உங்களது கப்பலில் பொருட்களை ஏற்றுங்கள். உங்களை நம்பி கள்ளியங்காட்டுச் செட்டியார் வாமதேவன் பணம் தருவார். கள்ளியங்காட்டிற்கு அவசரமாக அரிசியும், மாணிக்கமும், பொன்னும் தேவையாம். நான் மாலையில் வாமதேவன் செட்டியாரைப் பணத்துடன் வரச் சொல்கிறேன். வாமதேவன் செட்டியார் உங்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்" என்றான் ஏகாம்பரம்".

"ஏகாம்பரத்தின் பெருமை மிக்க முகஸ்துதியை நம்பிய மதிவாணன், கப்பலில் ஏராளமான பொருட்களை ஏற்றி அனுப்பினான். அதைக் கடற்கொள்ளையர் இலகுவாகக் கொள்ளை அடித்துவிட்டனர். அதனால் ஏகாம்பரம் பணக்காரனானான். இப்போது மதிவாணன் ஏகாம்பரத்தையும் வாமதேவனையும் தேடித்திரிகிறார். அவர்களை

அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை அதனால் உங்களைக் காரணமின்றிப் புகழ்பவரை மதிக்காதீர்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்**
**அமராது அதனை அகற்றலே வேண்டும்**
**அமையாரும் வெற்ப! அணியாரே தம்மைத்**
**தமவேனும் கொள்ளாக் கலம்.**

முகஸ்துதியை விரும்பினால் உள்ளத்தில் அகந்தை உண்டாகும். பொருத்தமில்லாத ஆபரணங்களை அணியாமை போல, முகஸ்துதியை ஏற்கக் கூடாது. ‘**அணியாரே, தம்மைத் தமவேனும் கொள்ளாக் கலம்**’ என்பது பழமொழி.

11 அன்பானவர்களே, அறிவினால் வரும் பெருமைகள் தான் புகழைத் தருபவை. பிற செல்வங்களினால் வரும் பெருமைகள் யாவும் அச்செல்வங்களை அழித்து விடும். ஒருவனை அழிவில் இருந்து காப்பது அறிவு. மனதில் உண்டாகும் தீமைகளை உணர்த்தி, அத்தீமைகளிலிருந்து மனதை மீட்டெடுப்பது அறிவு. உண்மைப் பொருளை ஆராய்ந்தறிய உதவுவது அறிவு. பிறர் சொல்வதைப் புரிந்து கொள்ளவும், தாம் சொல்பவற்றை மற்றவர்கள் உணர்ந்து கொள்ளவும் வழிவகுப்பது அறிவு. உயர்ந்தவர்களையும், நண்பர்களையும், பெரியவர்களையும் சேர்த்து வைப்பது அறிவு. பின் வரக்கூடியவற்றை முன்பே அறிந்து கொள்ள வைப்பது அறிவு. அதனால் மக்களாகப் பிறந்த அனைவரும் முயற்சி செய்து அறிவைத் தேடிக் கொள்ளல்

வேண்டும். பொன்னும், மணியும் உடுத்தும் ஆடைக்குப் பின்பே அணியப்படுவதுதான் பெருமை. அது போல அறிவின் பின் தான் சகல செல்வங்களும் இருத்தல் வேண்டும்”

“மாங்குளத்திலே மணிமாறன் என்றொரு வணிகன் இருந்தான். அவனது தந்தையார் சம்பாதித்த சொத்துக்கள் ஏராளமாக இருந்தன. அவனது தந்தையாரின் தந்தாயாரும் பெரும் தனவந்தர். அவர்கள் தான தர்மம் செய்வதில்லை. கோயில்களுக்குக் கூடப் பொருட்கள் கொடுப்பதில்லை.”

“மணிமாறனின் தந்தை பொன்னம்பலம் எப்போதும் பட்டுப் பீதாம்பரம் அணிந்திருப்பார். கைகள், விரல்கள், கழுத்து எங்கும் கைச் சங்கிலிகள், மோதிரங்கள், நவரத்தின மாலைகள் அணிந்திருப்பார். ஒரு முறை சேனாதிராசா என்பவன் கோயிலுக்கு நிதிகேட்டு அவரிடஞ் சென்றான். அவர் ஒரு சிறு தொகையைக் கொடுத்து விட்டுச் சொன்னார்; “இப்பொழுது எனக்குக் கஷ்டம். ஆறு மாதங்கள் கழித்து வாருங்கள்” என்றார். சேனாதிராசா ஆறு மாதங்கள் கழித்து சென்ற போது பொன்னம்பலம் மீண்டும் சாக்குப் போக்குச் சொன்னார். அதன்பின் சேனாதிராசா அங்கு செல்லவில்லை.”

“பொன்னம்பலம் நோய்காரணமாகப் படுத்த படுக்கையாகி விட்டார். அதனால் வீட்டு வேலைகளையும் தொழில்களையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு மணிமாறனுக்கு வந்தது. மணிமாறன் அறிவில்லாதவன். தந்தையைப் போல அடுத்தவர்களின் நல்ல

வார்த்தைகளைக் கேளாதவன். அதனால் தந்தையோடு சேர்ந்து தொழில் செய்த யோகேஸ்வரன் என்பவரை வேலையை விட்டு நீக்கி விட்டான்."

"மணிமாறனது நண்பன் சிவயோகன். மணிமாறனுக்கு ஏற்றபடி அவன் சொல்வதைக் கேட்டு நடப்பான். மணிமாறன் அறிவில்லாதவன் என்று தெரிந்து கொண்ட அவன் பல காசோலைகளை எழுதி விட்டுச் சிலவற்றில் காசின் தொகையைப் போடாது மணிமாறனிடம் கையெழுத்து வாங்கிவிடுவான். பின் மணிமாறனிடஞ் சென்று ; மணிமாறா பட்டணத்தில் உள்ள வர்த்தக நிலையத்தில் பல இலட்ச ரூபா நட்டமேற்பட்டு விட்டது." என்பான். பிறிதொரு நாள் தென்னந்தோப்பில் வருமானம் இல்லை என்பான்".

"இப்படிச் சொல்லிச் சொல்லிப் பல இலட்சம் ரூபாவை அவன் பெற்றுக் கொண்டான். கடைசி காலத்தில் மணி மாறனுக்குக் குடியிருக்கும் வீடு மட்டுமே எஞ்சியது. தொழில் செய்யவும், மூதாதையர் தந்த சொத்துக்களைப் பாதுகாக்கவும், வாழ்க்கையில் முன்னேறவும், அறிவுதேவை. அந்த அறிவை நாம் கல்வியின் மூலமும், அனுபவமுள்ள பெரியோர்கள் மூலமும் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பெற்றுக்கொள்ளாதவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மிகுந்த துன்பம் அடைவர். மனிதனுக்கு ஆடை எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு அறிவும் முக்கியமானது. ஆடை அணிந்த பின்பு ஆபரணங்களை அணிவது போல, அறிவைத் தேடிய பின்பே

வாழ்க்கையைத் தொடங்குதல் வேண்டும்.”என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அறிவினால் மாட்சியொன்று இல்லா ஒருவன்**

**பிறிதினால் மாண்ட தெவனாம்? – பொறியின்**

**மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன,**

**அணியெல்லாம் ஆடையின் பின்.**

ஆடையின் மேல் அணியப்படும் அணிகலன்கள் அழகையும் பெருமையையும் தரும். அது போல அறிவுடமையின் பின்செல்வம் சேர்ந்தால் அதுவே பயன்மிக்கதாகும். **‘அணியெ ல்லாம் ஆடையின் பின்**’ என்பது பழமொழி.

12 “அன்பானவர்களே, நன்மையானவை எவை, தீமையானவை எவையென்று தெரிந்து கொள்ளாது பயனற்ற சொற்களைப் பேசித்திரிவோரது வார்த்தைகளைப் பொருட்படுத்தக்கூடாது. தற்செயலாக அவற்றைக் கேட்க நேர்ந்தால், அதைக் கவனத்தில் எடுத்தல் கூடாது. நன்மை, தீமையறியாது பேசும் வார்த்தைகளால் என்றும் தீமையே உண்டாகும். பயனில்லாத பேச்சுக்களைப் பேசுவோர் தர்மம் இல்லாதவர்கள்”

“நல்லோர் நன்மைதராத சொற்களைத் தவறியும் பேசமாட்டார்கள். தவறிப் பேசினாற் கூட அவர்களது சிறப்பும் மதிப்பும் அழிந்து விடும். ஆகையால் அப்பேச்சுக்களைக் கேட்க நேர்ந்தால்

அதற்குப் பதில் கூறாது விலகிச் சென்றுவிடல் வேண்டும். தவறிப் பதிலளித்தால் ஊர்ப் பொதுவிடத்தைத் தாழிட்டு வைக்க முயல்வதைப் போன்றதாகும்.".

"மணிமாறனின் நண்பனான சிவயோகன், மணிமாறனது தாய் மாமனான கந்தவனத்தைக் கண்டால் பயனில்லாத வார்த்தைகள் பலவும் பேசுவான். கந்தவனத்துடன் பொன்னம்பலம் சொத்து விடயத்தில் அடிக்கடி முரண்படுவார். அதனால் கந்தவனம் பொன்னம்பலத்தின் சகவாசம் வேண்டாமென ஒதுங்கியிருந்தான். கந்தவனத்தின் வீட்டில் நடைபெறும் நன்மை, தீமைகளுக்குக் கூடப் பொன்னம்பலம் செல்வதில்லை. பொன்னம்பலம் இறந்த பின்பு அறிவில்லாதவனான மணிமாறனை ஏமாற்றி சிவயோகன் பொருட்களை அபகரிக்கிறான் என்று தெரிந்து கொண்ட கந்தவனம் மணிமாறனது நண்பர்களிடம் அதைப்பற்றிக் கதைத்தார். அவர்கள் அதைமணிமாறனுக்குக் கூறுவார்கள். மணிமாறன் கந்தவனம் கூறுவதை நம்புவதில்லை. தகப்பன் இறந்தமையால் தன்னுடன் நட்பு ரீதியாகச் சேர்ந்து தனது காணி பூமிகளைக் கவர நினைக்கிறாரென்று நினைத்தான். அத்துடன் சிவயோகன் கந்தவனத்தைப் பற்றி இல்லாதது பொல்லாததுகள் பலவற்றைக் கூறி இருவரையும் பெரும் பகையாளி ஆக்கி விட்டான்."

"ஒரு நாள் மாலை ஐந்து மணி போல ஊர்ப்பொதுச் சந்தையில் சிவயோகன் கந்தவனத்தைக் கண்டு விட்டு. ஆத்திரமிகுதியுடன் சொன்னான்; "கந்தவனம், நீ பொன்னம்பலம் ஐயா உயிரோடு

இருக்கும் போது அவரோடு வழக்குப் பேசினாய். இப்ப அவர் இறந்த பின் மணிமாறனுடன் சேர்ந்து கொள்ளத் திட்டமிடுகிறாய். உன்னுடைய திட்டங்களெல்லாம் மணிமாறனுக்குத் தெரியும். ஆதலால் உனது செயல்களெதுவும் பலிக்காது. ஏன் ஊரவரின் சொத்திற்கு ஆசைப்படுகிறாய். உனது மகன் தணிகாசலத்தை வளைத்துப் பிடித்து அவனின் சொத்தை அடிக்கத் திட்டமிடுகிறான். நீ மாறனின் சொத்தையடிக்கப் பார்க்கிறாய். குடும்பமே கொள்ளைக் கோஷ்டி" என்றான்".

"கந்தவனத்திற்கு அவமானமாக இருந்தது. தணிகாசலம் கந்தவனத்தின் ஆத்ம நண்பர். அவர் நல்லவர். அதர்மமான எச்செயலிலும் ஈடுபட விரும்பாத ஓர் உத்தமமான மனிதர். அவரைப் பற்றி இப்படிச் சொல்கிறானே எனக் கந்தவனம் துயரப்பட்டார்."

"சந்தையில் நின்றோர் கந்தவனத்திற்காகக் கதைக்க முன் வந்தனர். அதைக் கந்தவனம் விரும்பவில்லை. "நண்பர்களே, உங்களுக்கு உண்மையான நிலை தெரியும். நல்லவர்கள் ஒரு போதும் நன்மை, தீமைகளை ஆராயாது பேசமாட்டார்கள். பழி கூறித் திரிபவர்கள் எப்பொழுதும் தமது நன்மைக்காகவே இல்லதாதது பொல்லாதவற்றைக் கூறுவார்கள். அவர்களது சொற்களைக் கவனத்தில் எடுக்கக்கூடாது. மாறாகக் கவனத்தில் எடுத்து அதற்கு விளக்கம் கூற முற்பட்டால், அது ஊர்ப் பொதுவிடத்தை தாழிட முயன்றவர் போலத் தாமே பெரும் அவமானத்தை அடைவர்". என்று கூறிவிட்டுச் சென்றார் கந்தவனம். ஆகையால் அன்பானவர்களே,

நீங்கள் நன்மை தீமைகளை அறியாது பேசுவோரைக் கண்டால் அவரை மதியாது செல்லுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தெரியா தவர்தம் திறனில் சொல் கேட்டால்**

**பரியாதார் போல இருக்க! – பரிவுஇல்லா**

**வம்பலர் வாயை அவிப்பான் புகுவரே,**

**அம்பலம் தாழ்கூட்டு வார்.**

நன்மை தீமைகளை அறியாது பயனில்லாத சொற்களைப் பேசுவோனின் பேச்சைச் செவிமடுத்தல் கூடாது. ‘**அம்பலம் தாள் கூட்டுவார்**’ என்பது பழமொழி.

13 “அன்பானவர்களே, நன்மை தீமைகளை ஆராய்ந்து நன்மையான காரியங்களைச் செய்யும் மேலோர் வீண் வார்த்தைகள் பேசுவோரை எண்ணித் துயரப்படுவதில்லை. வீட்டுக்கு வந்த கந்தவனம், தணிகாசலத்தையும் அழைத்துக் கொண்டு மணிமாறனின் வீட்டிற்குச் சென்றார்.”

“கந்தவனத்தைக் கண்டதும் மணிமாறன் வெகுண்டெழுந்து சொன்னான்; “நீ ஏன் இங்கே வந்தாய்? இன்று மாலை எனது நண்பனான சிவயோகனை நீ சந்தையில் வம்பிற்கிழுத்து அவமானப்படுத்தினாய். அவனை அவமதிப்பது என்னை அவமதிப்பதைப் போன்றது. ஆகையால் வீட்டை விட்டு வெளியே செல்.

இல்லாவிட்டால் வேலையாட்களைக் கொண்டு வெளியே துரத்தி விடுவேன்.”

“கந்தவனம் அமைதியாக அன்புடன் சிரித்தார். பின் சொன்னார், “நீ எனது சகோதரியின் மகன். நீ என்னை எப்படி நினைத்தாலும் பரவாயில்லை. ஆனால் நான் உனது நன்மையையே எப்பொழுதும் விரும்புவேன். உனது தந்தை இருக்கும் போது நட்டமடையாத வியாபாரமும், சேனைத் தொழிலும் இப்போது ஏன் நட்டமடைகிறது? வியாபாரம் என்ன காரணத்திற்காக நட்டமடைகிறது என்று சொல். தென்னைகள் காய்த்துக் குலுங்குகின்றன. வாழைத்தோப்பில் குலைகள் தாராளமாக இருக்கின்றன. வயலில் நெல் நல்ல விளைச்சலைத் தந்துள்ளது. இவ்வேளையில் எப்படி நட்டமுண்டாகும்? நட்டமுண்டானால் பணத்தைக் கடனாகப் பெறுவதை விட்டு விட்டு ஏன் வயலை விற்க முயற்சிக்கிறாய்? நட்டத்தின் காரணத்தை நீ சொன்னால் நான் செல்கிறேன். மருமகனே, நீ ஊர் போற்றும் பெரும் பணக்காரனாக வாழ வேண்டும்” என்றார் கந்தவனம்.”

“கந்தவனத்தின் அன்பான வார்த்தைகள் மணிமாறனின் இதயத்தைத் தாக்கின. அவன் முதல் முறையாகச் சிந்தித்தான். அன்பானவர்களே, அன்பால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. அறத்திற்கு மட்டும் தான் அன்பு உதவும் என்றில்லை. வீரத்தையும் உண்டு பண்ணுவது அன்பு தான். மணிமாறன் சிந்தித்துப் பார்த்தான்.

உண்மைகள் தெரிந்தது. அதனால் சிவயோகனைக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தான்."

"அன்பானவர்களே அன்பினால் இதயத்தைக் கசியச் செய்யலாம்; உறுதியுள்ளதாக்கலாம்; அரிய செயல்களைச் செய்ய வல்லதாக்கலாம் என்பதைக் கண்டு கொண்ட கந்தவனம், அன்பால் அவனை வென்றார். இது கன்றைக் குடிக்க விட்டுப் பசுவிலிருந்து பால் கறப்பதைப் போன்றது. இதை விடுத்து கன்றைக் கொன்று விட்டுப் பால் கறக்கலாமென நினைப்பது முட்டாள்த்தனமானது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது,**
**நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே**
**கன்று விட்டு ஆக்கறக்கும் போழ்தில் கறவானாய்,**
**அம்புவிட்டு ஆக்கறக்கு மாறு**

பிறரின் மனதை வருத்திக் காரியம் சாதிக்க முடியாது. அன்பால் எதையும் சாதிக்கலாம்; '**அம்பு விட்டு ஆக்கறக்குமாறு**' என்பது பழமொழி.

14 அன்பானவர்களே, அயல் வீட்டார் அறியாதபடி சமைத்து உண்ண முடியாது. ஏனென்றால் அவிக்கும், பொரிக்கும், தாளிக்கும் உணவு வகைகளின் வாசனை அயல் வீட்டாரின் மூக்கை அரிக்கச் செய்யும். அது போல ஒருவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ளப் பெரிதாகக் கஷ்டப்படத் தேவையில்லை. அவரோடு பழகுபவர்களை

அறிந்து கொண்டால் அவரை அறிந்து கொள்ளலாம். சுற்றத்தவர் களுடன் கலந்து பழகுதல் வேண்டும். சுற்றத்தவர்கள் இல்லாதவர்கள் கரையில்லாத குளத்தைப் போன்றவர்களாவர். அதற்காகக் கண்டகண்டவர்களுடன் நட்பு வைத்தல் ஆகாது. அறம் உணர்ந்தரிர்களாய்த் தம்மை விட மூத்தவராய் உள்ள அறிவுள்ள பெரியவர்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே பழகுதல் வேண்டும். இவ்வகையான பெரியவர்களைத் தமக்கு உறவாக்கிக் கொண்டு, அவர்கள் வழி நடப்பது வல்லமைகள் எல்லாவற்றிலும் பெரும் வல்லமையாகும். சந்தர்பத்திற்கேற்றவாறு தக்க வழிகளை ஆராய்ந்து சொல்பவர்கள் தீர்க்கதரிசிகள். அவர்களை நட்பாக்கிக் கொள்பவர்களை யாராலும் வெல்ல முடியாது.”.

“அன்பானவர்களே நீங்கள் நட்புக் கொள்பவர் பணக்காரனாக இருக்கவேண்டியதில்லை. பெரும் அறிவாளியாக இருக்க வேண்டியதில்லை. தர்மம் உள்ளவராக, நீதி நியாயம், ஒழுக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.”.

“நாகையூரிலே சதாசிவம் என்றொரு தர்மவான் இருந்தார். அவரைக் கொடை வள்ளல் என்று கிராமத்தவர்கள் சொல்லி மதித்து வந்தனர். ஊரில் நடைபெறும் சகல மங்கல, அமங்கல காரியங்களுக்கெல்லாம் அவர்தான் தலைமை தாங்குவார்.”

“அவ்வூரில் வேலவன் என்றொரு திருடன் வாழ்ந்து வந்தான். திருடி மது அருந்துவது தான் அவனது தொழில். அந்தத் திருடன்

சதாசிவத்தின் வீட்டுக்கு அடிக்கடி செல்வான். அவரின் வீட்டு வேலைகளைச் செய்வான். தெருக்கள் சந்திகளில் குடித்து விட்டு நின்று ஊரவருடன் சண்டை பிடிப்பான். நல்ல வெறியான வேளையிலும் நிதானம் இழக்காதவன் போல நடிப்பான். இவ்வேளைகளில் சதாசிவத்தை அளவுக்கதிகமாகப் புகழுவான். அவனது வார்த்தைகளை யாரும் கவனத்தில் எடுப்பதில்லை.”

“சதாசிவம் நன்கு கற்றவர். பலர் அவரின் வீட்டுக்குச் சென்று தமது கல்வியில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வார்கள். கிராமத்தில் எந்தக் காரியம் நடந்தாலும், அவரின் வீட்டில் தான் கூடியிருந்து ஆராய்ந்து முடிவெடுப்பார்கள்.”

“ஒரு நாள் அவ்வூரில் உள்ள சிவன் கோயில் நகைகள் முழுவதும் களவு போய்விட்டது. கோயில் அறங்காவல் சபைத்தலைவர் தணிகாசலம் நினைவிழந்து போனார். இதுவரை சிவன் கோயிலில் எதுவும் களவு போனதில்லை. ஒருவாரம் கழிந்தும் திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தணிகாசலம் இடிந்து போனார். குருக்கள் ஒருவாரமாக உணவு உண்ணவில்லை. ஊரார் திகைத்துத் திகிலடைந்து போயிருந்தனர்.

“ஆதவன் என்ற ஆசிரியர் அன்று கோயிலுக்கு வந்து சிவனை வணங்கிவிட்டுச் சொன்னான்; “இந்தத் திருட்டு மிகவும் மர்மமான முறையில் நடந்துள்ளது. திருடியதற்கான தடயங்கள் எதுவுமில்லை.

வேறு இடத்தில் இருந்து வந்தும் திருடியிருக்க முடியாது. எனக்கென்றால் ஊரில் உள் ளஒரு பிரமுகர் மீது தான் சந்தேகம்.”

‘யார்...? யாரென்று சொல்” என்று ஊரவர்கள் அவசரப்பட்டனர்.”

“எனக்கென்றால் சதாசிவத்தின் மீதுதான் சந்தேகம். வேலனை ஊரில் உள்ள எவரும் சேர்ப்பதில்லை. அவன் செல்லும் வீடுகளில் களவெடுப்பான். ஆனால் சதாசிவம் அவனைச் சேர்த்து வைத்திருக்கிறார். ஒருவனது தன்மையைப் பற்றி ஆராய வேண்டுமானால் அவனோடு சேர்ந்தவர்களின் குணங்களை ஆராய்தல் வேண்டும். கோயிலின் ஆபரணங்கள் சதாசிவத்தின் வீட்டில் தான் உண்டு என்றான்.” ஆகையால் அன்பானவர்களே, சேருமிடம் அறிந்து சேருங்கள். நல்லவரோடு உறவு கொள்ளுங்கள். தீயவரை விலக்கி வையுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**முயறலே வேண்டா; முனிவரை யானும்**
**இயல்பன்னர் என்பது இனத்தால் அறிக!**
**கயலிகல்உண் கண்ணாய்! கரியரோ வேண்டா;**
**அயலறியா அட்டூணோ இல்.**

நல்வர்கள் தீயவர்களுடன் சேர்ந்தால் அவர்களும் தீயவராகக் கொள்ளப்படுவர், ‘**அயலறியா அட்டூணோ இல்**’ என்பது பழமொழி.

15 "அன்பானவர்களே, பயனை எதிர்பாராமல் ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகை. ஏனைய கொடுப்பனவுகள் எல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பவையாகும். நன்மை செய்வதற்குக் கூடப் பிறரிடமிருந்து பொருளை எதிர்பார்க்கக் கூடாது. சாவதை விடத்துன்பமானது உலகில் வேறெதுவும் இல்லை. ஆனால், "ஏழைகளுக்கு உதவ முடியாத நிலை ஏற்பட்டால் இறப்பது இனிமையானது" என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் அன்பானவர்களே இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாழப் பழகுங்கள். அந்தப் பழக்கம் உங்கள் பிறவிகளை அறுக்கும் வாளாகச் செயற்படும்."

"மாதவன் தணிகாசலத்தின் வீட்டில் வேலை செய்பவன். மிகவும் நேர்மையான அவன் தணிகாசலத்தைத் தெய்வத்தைப் போலப் போற்றி வந்தான். தணிகாசலமும் மாதவனின் குடும்பத்தின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார். மாதவனது மகன் முகுந்தன். படிப்பை முடித்து விட்டுத் தொழிலுக்காக காத்திருந்தான். எனினும் அவன் வேலையில்லாது சோம்பியிருப்பதை விரும்பவில்லை. தந்தையான மாதவனுக்கு உதவி வேண்டுமென்று எண்ணித் தணிகாசலத்தின் தென்னந்தோப்பில் வேலை செய்தான். அவனது சுறுசுறுப்பும் பணிவும் தணிகாசலத்தைக் கவர்ந்தது. ஊரில் உள்ள பாடசாலைக்குக் கணிதம் கற்பிக்க ஓர் ஆசிரியர் தேவைப்பட்டார். தணிகாசலம் பெருமுயற்சி செய்து அப்பதவியை முகுந்தனுக்குப் பெற்றுக் கொடுத்தார்"

“மாதவனும் முகுந்தனும் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். அதற்குப் பிராயச்சித்தமாக தணிகாசலத்திற்கு விலையுயர்ந்த பட்டு வேட்டியும் சால்வையும் வாங்கிக் கொண்டு தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றனர். மாதவன் சொன்னான்; “ஐயா விபரம் தெரிந்த நாளிலிருந்து உங்களிடம் தான் நான் யாவற்றையும் பெற்று வாழ்ந்து வருகிறேன். நான் எதையும் தரமுற்பட்டால் அதைத் தாங்கள் வாங்க மறுத்து விடுவீர்கள். இந்த முறை எனது மனத்திருப்திக்காக இதை வாங்குதல் வேண்டும். குசேலர் கொடுத்த அவலைக் கண்ணன் வாங்கி உண்டது போலத் தாங்கள் நான் தரும் வேட்டியை வாங்கி உடுத்தல் வேண்டும்” என்று கண்ணீர் விட்டான்.”

“ஏழைகளுக்குக் கொடுப்பதுதான் தர்மமே தவிர, அவர்களிடம் எதுவும் பெறுவது தர்மமாகாது என்று தணிகாசலத்திற்குத் தெரியும். இருப்பினும் மாதவன் குசேலரது கதையைக் கூறிய பின் அவர் அவன் கொண்டு வந்த வேட்டியையும் சால்வையையும் வாங்கிக் கொண்டார். பின் தனது விரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி முகுந்தனது மோதிர விரலில் அணிவித்தார். மாதவன் திகைத்துப் போனான். ஆனால் அவனால் எதுவும் பேசவோ, செய்யவோ முடியவில்லை. பெரியவர்கள் எப்போதும் கொடுப்பவர்களே தவிர பெற்றுக் கொள்ள மாட்டார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**சிறிய பொருள் கொடுத்துச் செய்த வினையால்,**
**பெரிய பொருள் கருது வாரே; – விரிபூ**
**விரா அம் புனலூர! வேண்டு; அயிரை விட்டு**
**வரா அல் வாங்கு பவர்.**

ஈகையால் இம்மையில் புகழையும் மறுமையில் இன்பத்தையும் பெறலாம் என நினையாது தர்மம் செய்தல் வேண்டும்; **'அயிரை விட்டு வரால் வாங்குபவர்'** என்பது பழமொழி.

16 "அன்பானவர்களே, நன்மை செய்பவர்கள் எதனையும் எதிர்பாராது கொடுத்தாலும் தீயவர்கள் அக் கொடைக்குக் களங்கம் கற்பிப்பர். அவர்களால் நல்லவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. தீயவர்கள் எப்பொழுதும் எதையும் தீயகண்களாலேயே பார்ப்பார்கள். மனதும் தீயதையே எண்ணும்."

" மழை பெய்கிறது. பசு பாலைத் தருகிறது. மரங்கள் காய், கனி, இலைகளை எமக்குத் தருகின்றன. இவையெல்லாம் கைம்மாறு கருதியா எமக்கு உதவுகின்றன. இவற்றைப் போல மனிதர்களும் உதவுதல் வேண்டும். இவ்வாறு உதவுபவர்கள் பலர் உலகில் வாழ்கிறார்கள். அதனால் தான் உலகம் வாழ்கிறது."

"மாதவனும் முகுந்தனும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தமது வீட்டிற்குச் சென்றனர். மாதவன் தணிகாசலத்திற்கு மிகவும் விலையுயர்ந்த பட்டு வேட்டியும் சால்வையும் வாங்கியது அவனது தாயாரான காமாட்சிக்குப் பிடிக்கவில்லை. அந்தக் காசில் தனக்கொரு பட்டுச் சேலை வாங்கித் தந்திருக்கலாமென்று மாதவனை ஏசிக்கொண்டிருந்தாள்."

“மாதவன் மகிழ்வுடன் மனைவிக்கு அங்கு நடந்த சம்பவத்தைக் கூறிக்கொண்டிருந்தான்; “உண்மையில் பெரியவர்கள் பெரியவர்கள் தான். நான் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான வேட்டியும் சால்வையும் வாங்கிக் கொடுக்க, அவர் ஐயாயிரம் ரூபா பெறுமதியான தங்க மோதிரத்தை எனது மகனின் கைவிரலில் அணிவித்தார். அவர் பெருவாழ்வு வாழ்ந்தால் தான் ஊர் சிறக்கும்” என்றான்”

“அதற்கு அவனது தாயான காமாட்சி சொன்னாள்; “சோழியன் குடும்மி சும்மா ஆடாது. அவர் திட்டத்தோடு தான் முகுந்தனுக்கு ஆசிரியர் பதவி பெற்றுக் கொடுத்தவர். இப்போ அதே திட்டத்தோடு தான் மோதிரம் போட்டிருக்கிறார். அவருக்கு ஐந்து பொம்பிளைப் பிள்ளைகள். அதில் ஒன்றை முகுந்தனின் தலையில் கட்டி வைக்கவே இத்திட்டம். நான் சொல்வது தான் நடக்கும். பொறுத்திருந்து பார்” என்றாள் கடுகடுப்புடன்”

“அம்மா, உனக்கு எப்போதும் கீழான எண்ணங்கள் தான் வரும் நானும் உன்னைப் போல நினைப்பதால் தான் கூலி வேலை செய்து கொண்டு கஷ்டப்படுகிறேன். நல்லதை நினைத்தால் நல்லது நடக்குமென்று தணிகாசலம் ஐயா சொல்லுறவர். அவரது மூத்த மகளை எந்தச் சீதனமும் இல்லாமல் திருமணஞ் செய்ய வைத்தியர் ஐங்கரன் முன்வந்திருக்கிறார். அவரின் வீட்டில் திருமணஞ் செய்யக் கொடுத்து வைக்க வேண்டும். தயவு செய்து இனிமேலும் நீ இப்படிக் கேவலமாக எண்ணி எமது குடும்பத்தை நரகத்தில் தள்ளாதே” என்றான் மாதவன்.”

“அன்பானவர்களே, நினைவு தான் செயல். எனவே நல்லதை நினையுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**நல்லார் நல்லத் உணரின், அவரினும்**
**நல்லார் உணர்ப; பிறர் உணரார்; – நல்ல**
**மயிலாடு மாமலை வெற்ப! மற்று என்றும்,**
**அயிலாலே போழ்பழ அயில்.**

நல்ல சிந்தனை இல்லாத மனம் எப்பொழுதும் தீயவற்றையே நல்லதென்று எண்ணும். **‘அயிலாலே போழ்பழ அயில்’** என்பது பழமொழி

17 “அன்பானவர்களே, ஒரு செயலின் உண்மையான நிலையினைத் தெரியாது அச்செயலில் ஈடுபடுவது எப்பொழுதும் ஆபத்தையே தரும். முழுமையாகச் செயலைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் எச்செயலையும் தொடங்கக்கூடாது. அத்துடன் பகைவரை எளிதாக எண்ணக்கூடாது. செயலின் தன்மையை அறிந்து தக்க கருவிகளுடனும், அதைப்பற்றி அறிந்த பெரியவர்களின் உதவியுடனும் செயலை ஆரம்பித்தால் தோல்வி உண்டாகமாட்டாது. தோல்விக்கு காரணமானது அறியாமையும், பயமும்தான். சகலவற்றையும் அறிந்தபின் துணிவுடன் செயற்பட்டால் வெற்றி தேடி வரும். யாவற்றையும் ஆராய்ந்து துணிந்தபின் காலந்தாழ்த்தாது செயலை மேற்கொள்ளல் வேண்டும். தொடக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட செயல், தீர்க்காத பகை, அணைக்காத நெருப்பு, என்பன பின் பெரிதாகித் துன்பத்தைத் தரும். ஆகவே, அன்பானவர்களே, செயலின்

உண்மையான நிலையை அறிந்த பின்பே செயலை ஆரம்பித்து வெற்றிபெறுங்கள்."

"முகுந்தன் ஆசிரிய நியமனம் பெற்றுப் பாடசாலைக்குச் சென்றான். அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும், பெற்றோரும் அவனை அன்புடன் வரவேற்றனர். அதிபர் தனது அலுவலகத்திற்கு அவனை அழைத்துச் சென்று சொன்னார்; "முகுந்தன் நீர் இளைஞன். பட்டதாரி. அதனால் க.பொ.த. உயர்தர வகுப்பிற்குப் பௌதிகவியல் கற்பியும்."

"அந்தப் பாடசாலையில் இதுவரை காலமும் கற்பித்த ஆசிரியருடன் அதிபர் முரண்பட்டதால் தான் தன்னைக் கற்பிக்குமாறு கூறுகிறார் என்பது அவனுக்குத் தெரியும்."

"ஐயா, நான் முதன்முதலாக இன்று தான் கடமை ஏற்றுள்ளேன். உயர்தர வகுப்பு மாணவர்கள் இன்னும் இரண்டு மாதங்களில் பரீட்சை எழுதவிருக்கிறார்கள். அதனால் கற்பித்தலைப் பற்றி எதுவும் அறியாத நான் கற்பித்தால் அந்த மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும். பரீட்சையைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால் பரீட்சைக்குக் கற்பிக்கும் முறைகள் எனக்குத் தெரியாது. பாடப் பரப்பு முழுவதையும் நல்ல முறையில் நான் கற்றுத் தேர்ந்துள்ளேன். பரீட்சையிலும்சித்தியடைந்துள்ளேன். எனினும் செயலிலீடுபட்டதில்லை. பரீட்சைக்குக் கற்பிக்கும் முறை எனக்குத் தெரியாததால் கற்பிக்கும் போது மாணவர்கள் திருப்திப்படமாட்டார்கள். அவர்களுக்கு எனது

கற்பித்தல் புதியதாகவும், விளக்கமில்லாத தாகவும் இருக்கும். அதனால் இதுவரை கற்பித்த ஆசிரியரைக் கொண்டு கற்பியுங்கள். அடுத்தவருடம் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு வேண்டுமானால் நான் கற்பிக்கிறேன்" என்றான்".

"ஆசிரியரைப் பழிவாங்க எண்ணிய அதிபர், முகுந்தனது வார்த்தைகளுக்குப் பதில்கூற முடியாதிருந்தார். செயலின் உண்மையான நிலையறியாது செயலில் ஈடுபடாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**உழைஇருந்து, நுண்ணிய கூறிக், கருமம்**
**புரையிருந்த வாறறியான், புக்கான் விளிதல்**
**நிரையிருந்து மாண்ட அரங்கினுள் வட்டு,**
**கரையிருந் தார்க்கெளிய, போர்**

ஒரு செயலின் உண்மையான நிலையையும், அதை நிறைவேற்றும் முறையையும் நன்றாக அறியாமல் அச்செயலில் ஈடுபடக்கூடாது; '**அரங்கினுள் வட்டு கரையிருந்தார்க்கெளிய போர்**' என்பது பழமொழி.

18 "அன்பானவர்களே, தீயை மூட்டி குப்பை கூழங்களை எரிக்கிறோம். எரிந்து முடிந்ததும் நெருப்பை அணைத்து விடல் வேண்டும். அணைக்காத நெருப்புப் பின் காற்றின் உதவியால் பரவி பெரும் அழிவுகளை உண்டாக்கும். விவசாயிகள் வயலில் களைகளின் தாள்களை வெட்டி விட்டு உழுது அதைப்புரட்டி நீரில் அமிழ்த்திக்

களைகளை முற்றாக அழுக விட்டு அழிப்பர். அது போல அரசனும் தனது பகைவர்களைப் போரில் வென்றுவிட்டோம் என்று இறுமாப்புடன் இருத்தலாகாது. தோற்ற பகைவன் படை திரட்டி வந்து வென்றவனைக் கொல்லவும் கூடும். அதனால் அரசர்கள் பகைவர்களை வெல்வதைவிட அழிப்பதிலேயே கவனஞ் செலுத்துவர்."

"வேலூர் மன்னன் உதயணன். அவனது அயல் நாடு புலியூர். புலியூர் பாலை நிலம். அங்கு பயிர்கள் செழித்து வளர்வதில்லை. அங்கு வாழ்பவர்கள் வழிப்பறி, கொள்ளைகளில் ஈடுபடுவர். புலியூர் மக்கள் வேலூரின் எல்லைப் பகுதிக் கிராமங்களுக்குள்ப் புகுந்து மக்களின் பொருட்களையும், கால் நடைகளையும், விவசாய உற்பத்திப் பொருட்களையும் அடிக்கடி கொள்ளையிட்டு வந்தனர். இதனால் வேலூர் மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளாகி வந்தனர். அத்துடன் புலியூரின் எல்லைப் பகுதியை விட்டு இடம் பெயரவும் தொடங்கினர். இதனால் வேலூர் மன்னன் உதயணன் புலியூர் மீது படையெடுத்தான். வேலூர்ப்படைகளை வெல்ல முடியாதென்று உணர்த்த புலியூர் மன்னன் போர் வீரர்கள் சிலருடன் தப்பியோடினான். பின் காடுகளில் மறைந்திருந்து வேலூருக்குள் நுழைந்து கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தான்."

"கொள்ளைக்காரர்களான புலியூர் மன்னனையும் போர் வீரர்களையும் வேலூர் படை வீரர்களால் இலகுவில் பிடிக்க முடியவில்லை. அடிக்கடி கொள்ளைகள் நடைபெறுவதால் வேலூர் மக்கள் பெரும் துன்பப்பட்டார்கள். அன்று வேலூர் அரச சபை கூடிய

போது முதலமைச்சர் சொன்னார்; "மன்னா எமது மக்கள் பகல் முழுவதும் உடலை வருத்தி வேலை செய்பவர்கள். அவர்களால் இரவு வேளைகளில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிவதில்லை. இதனால் பெருந்துன்பப்படுகிறனர். நாம் உடனடியாகப் புலியூர் மன்னனைக் கொல்லல் வேண்டும். பகைவனை அழிக்கா விட்டால். எம் சந்ததி அழிந்து விடும்"

"உதயணன் பல மணிநேரம் சிந்தித்து விட்டுச் சொன்னான்; அமைச்சரே புலியூர் மன்னனினதும் அவனது போர் வீரர்களினதும் தலையைக் கொண்டு வந்து தருவோருக்கு ஓர் இலட்சம் பொற்காசுகள் வழங்கப்படும் என்று நாடுமுழுவதும் முரசறிவியுங்கள்." என்றான்.

"மறுநாள் புலியூர் தளபதியினதும் மன்னனினதும் உயிரற்ற உடல்கள் வேலூர் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டன. புலியூர் மன்னின் போர் வீரனொருவன் பணத்திற்கு ஆசைப்பட்டு இருவரையும் கொன்று விட்டு ஓர் இலட்சம் பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டான்."

"அன்பானவர்களே, தற்செயலாக ஒருவர் மீது பகை கொண்டு விட்டால் அதை தீர்க்க வேண்டும். இல்லாவிட்டால் அப்பகை அவனது சந்ததியையே அழித்து விடும்" என்றார் நமசிவாய சுவாமிகள்.

**பொருந்தா தவரைப் பொருதட்டக் கண்ணும்,**
**இருந்தமையா ராகி, இறப்ப வெகுடல்**
**விரிந்தருவி வீழ்தரும் வெற்ப! அதுவே**
**அரிந்தரிகால் நீர்ப்படுக்கு மாறு.**

களையின் வேரை விட்டு வைத்தால் அதனடியிலிருந்து பயிர் முளைக்கும். அதனால் களையை வேரோடு அழிக்க வேண்டும். அது போலப் பகைவனையும் அழிக்கா விட்டால் ஆபத்துக்கள் தொடர்ந்து வரும். பகைவரை அழித்தல் அரசரது கடன்; **'அரிந்தரிகால் நீர்ப்படுக்குமாறு'** என்பது பழமொழி.

19 "அன்பானவர்களே, மூடர்களுடன் உறவுவைத்திருக்கக் கூடாது. அறிவுள்வர்கள், சிறுமதியாளர்களுடன் சேரமாட்டார்கள். இழி குணம் கொண்டவர்கள் தான் சிறுமதியாளரை நண்பராகக் கொள்வர். மக்களுக்கு நல்ல அறிவு அவன், சேர்ந்துள்ள பெரியவர்களில் இருந்து தான் வரும். உலகில் உள்ள ஒருவருக்கு நல்ல இனத்தை விடச் சிறந்த துணை இல்லை. அதுபோலத் தீய இனத்தை விடத் துன்பம் தரும் பெரும் பகையும் இல்லை."

"அறிவுள்ளவர்களைத்தமது சுற்றமாக ஆக்கிக் கொண்டவர்களுக்குத் துன்பங்கள் ஒரு போதும் வரமாட்டாது. மீறி வந்தாலும், அது அப்பெரியவர்களின் கண்பார்வை பட்டதும் நீங்கி விடும். பெரியவர்களின் துணையுள்ள ஒருவனை எந்தப் பகைவனும் வெல்ல முடியாது. மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருமானம் வரமாட்டாது. அதுபோலத் தன்னைத் தக்க தருணத்தில் தாங்கிக் காப்பாற்றும் துணையில்லாத அரசனின் ஆட்சி நிலைக்காது. அத்துடன் அவனது உயிரும் போய் விடும்."

“புலியூர் மன்னனும், போர்வீர்களும் பொருளாசை பிடித்தவர்கள் என்பது வேலூர் மன்னனுக்குத் தெரியும். குரங்கிடம் பழங்களைக் கொடுத்துப் பங்கிடச் சொன்னால் அதுமற்றக் குரங்குகளுக்குக் கொடாது தானே முழுவதையும் உண்டு விடும். அது போலப் பணத்தாசை பிடித்தவர்களுக்குப் பொருளாசை காட்டினால் அவர்கள் பணத்திற்காக எதையும் செய்வார்கள் என்று உணர்ந்த வேலூர் மன்னன், ஓர் இலட்சம் பொற்காசுகள் தருவதாக முரசு மூலம் அறிவித்ததும் புலியூர் போர் வீரர்கள் திகைத்து விட்டனர். யார் அரசனைக் கொன்று விட்டுப் பணத்தைப் பெறுவது என்ற பிரச்சினை அவர்களுள்த் தலை தூக்கியது. மன்னனுக்கும் தனது போர்வீரர்கள் மீது சந்தேகமேற்பட்டது. அதனால் தனக்கு நம்பிக்கையுள்ள இருவரை மெய்ப்பாதுகாப்பாளராக நியமித்தான்.”

“மெய்ப்பாதுகாப்பாளர் இரவானதும் மன்னனைத் தனிமையில் தமது பாதுகாப்பில் இருக்கச் சொன்னார்கள். மன்னன் அவர்களது சொற்படி தனியிடத்தில் மறைந்திருந்தான். ஏற்கனவே திட்டமிட்ட மெய் பாதுகாப்பாளர்கள் இருவரும் மன்னனையும் தளபதியையும் கொன்று விட்டுப் பணம் பெற்றனர்.”

“அன்பானவர்களே, விவசாயிகள் நெல்லை அறுவடை செய்யும் போது வயல்வெளியில் நரிகள் கூட்டமாக இருக்கும். அதைத் துரத்தத் தேவையில்லை. மனித நடமாட்டத்தைக் கண்டதும். அவை ஓடிவிடும். அதை விட்டு விட்டு அதைச் சிரமப்பட்டுத் துரத்திக் கொன்று

நேரத்தை வீணாக்க மாட்டார்கள். அறிவுள்ளோர் அறிவுள்ளோருடன் சேர்ந்து நல்லதையே செய்வார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தெரிவுடையா ரோடு தெரிந்துணர்ந்து நின்றார்**
**பரியார் இடைப்புகார், பண்பறிவார், மன்ற;**
**விரியா இமிழ்திரை வீங்குநீர்ச் சேர்ப்ப!**
**அரிவாரைக் காட்டார், நரி.**

அறிவுள்ள பெரியோர் நுண்ணறிவு இல்லாதவருடன் சேரமாட்டார்கள். ‘**அரிவாரைக் காட்டார் நரி**’ என்பது பழமொழி.

20 “அன்பானவர்களே, பொருள் இல்லாதவர்களின் பசியைப் பொருளுள்ளவன் நீக்க வேண்டும். அதுவே பொருள் பெற்றவன் பின் வந்து உதவுவதற்கு வைத்தற்குரிய இடமாகும். தான் பெற்ற உணவைப் பலருடன் பகிர்ந்துண்ணும் பழக்கம் உள்ளவர்களை ஒருபோதும் பசி என்ற கொடிய நோய் தாக்காது. பல நாடுகளை ஒரு குடையின் கீழ் ஆளும் மன்னர்களானாலும், அவனது நாட்டை இன்னொருவன் கைப்பற்றினால், அவனுக்கு உதவுவார் இல்லாதிருப்பதை நாம் கண்டுள்ளோம். செல்வத்திற்கு அழகு ஈகை ஒரு பெண் அழகானவள். அவளது புருவங்கள் வில்லைப் போன்றவை. முகம் அன்றலர்ந்த தாமரையைப் போலவும், கூந்தல் கரிய நாகத்தைப் போலவும் இருந்தாலும் அவளது கண்களில் பார்வையில்லாதிருந்தால் அவளது அழகை யாரும் ரசிக்க மாட்டார்கள். அது போல ஏழைகளுக்கு கொடுத்துதவாத செல்வம் பெருமை இல்லாதது.”

“தணிகாசலத்திற்கு ஐந்து பெண்பிள்ளைகள். தணிகாசலம் பெரிய பணக்காரர் அல்லர். ஆனால் தருமவான். ஊரில் உள்ள வறியவர்களுக்கெல்லாம். அவர்கள் கேட்காமலே வலியச் சென்று உதவுவார். வேலாயுதம், தணிகாசலத்தின் நண்பர். ஆனால் வறியவர். கால் ஊனமுற்றவர். வேலாயுதத்தின் மகன் ஆதவன். அவனது கல்விச் செலவு முழுவதையும் தணிகாசலமே ஏற்றார். அவன் கல்வி கற்று வைத்தியனானான். வேலாயுதத்தின் சகோதரியின் கணவன் பரமசிவன் பெரும் பணக்காரன். பரம சிவம் வேலாயுதத்தையும் மகனையும் வீட்டுப் பக்கம் வரவிடுவதில்லை. உதவியுஞ் செய்வதில்லை”.

‘ஆதவன் வைத்தியரானதும் தந்தையையும் தாயையும் அழைத்துக் கொண்டு தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தான்”.

“தணி, நீ என்னுடைய உயிர் நண்பன். நீ இல்லா விட்டால் எமது குடும்பம் என்றோ அழிந்திருக்கும். எனது உறவினர்கள் பலர் வசதியாக இருந்தும் எமக்கு உதவவில்லை. இப்போது நாம் உயர்ந்ததும் எம்மைத் தேடி உறவு கொண்டாடுகிறார்கள். எனது மைத்துனன் பரம சிவன் நாம் ஏதாவது கேட்டு விடுவோமென்று எமது உறவைத் துண்டித்தவர். இன்று தனது மகளை ஆதவனுக்குத் திருமணஞ் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறார். எனக்குப் பிடிக்கவில்லை. ஆதவனுக்கு உங்கள் மூத்த மகள் கௌரியைத் திருமணம் செய்ய விருப்பம். அது தான் பெண் கேட்க வந்தோம்” என்றார் வேலாயுதம்”.

“ஐயையோ, நான் பிரதியுபகாரத்தை எதிர்பாராது கடமை செய்பவன். தேவையானவர்களுக்கு உதவி செய்யாத பணத்தால் என்ன பிரயோசனம்? நான் உதவாவிட்டாலும் ஆதவன் வைத்தியராகி இருப்பான்” என்று தணிகாசலம் சொல்லும் போது வேலாயுதம் குறுக்கிட்டுச் சொன்னார்; “எனது நிலைமை எனக்குத் தெரியும். நீ உதவாவிட்டால் எனது மகன் வைத்தியராகியிருக்க முடியாது. அது இருக்கட்டும். நீ நான் கேட்டதற்குப் பதிலைச் சொல்.”

“எனது மூத்த மகளை எனது சகோதரியின் மகனுக்கு நிட்சயம் செய்து விட்டேன்” என்றார். உடனே வேலாயுதம் சொன்னார்;” உனது இரண்டாவது அல்லது மூன்றாவது மகளையாவது செய்துதா. செல்வத்திற்குப் பெருமை ஈகை. பெறுவபவனுக்குப் பெருமை நன்றியுடையவனாக இருத்தல்”என்றார்”

“நண்பா, எனது இரண்டாவது மகள் பொறியியலாளர் ஒருவனை விரும்பியுள்ளாள். மூன்றாவது மகள் பல்கலைக் கழகத்தில் படிக்கிறாள் படிப்பு முடிய யோசிப்போம்.”

“அதைக்கேட்டுத் துக்கத்துடன் வேலாயுதம் சொன்னார். “கொடுப்பவனுக்குக் குறைவிராது. மூன்றாவது மகளின் படிப்பு முடியும் வரை நாம் பொறுத்திருக்கிறோம்”

“ ஆதலால் அன்பானவர்களே, கொடுக்கக் கொடுக்கச் செல்வம் பெருகும். பிறருக்குக் கொடுக்காத தன்மையால் செல்வம் தன்

பெருமையை இழக்கும். எனவே தணிகாசலத்தைப் போலத் தான தர்மஞ் செய்து வாழுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**முழுவொலி முந்நீர் முழுதுடன் ஆண்டார்.**
**விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்தவிதல் கண்டும்,**
**இழவென் றொருபொருள் ஈயாதான் செல்வம்,**
**அழகொடு கண்ணின் இழவு.**

பணம், அழகு என்பன ஒரு பெண்ணுக்கிருந்தாலும் அவள் குருடானவளென்றால் பெருமையற்றவள் ஆவாள். அது போல ஈயாதவனின் செல்வமும் பெருமையற்றது. ‘**அழகொடு கண்ணின் இழவு**’ என்பது பழமொழி.

21 “அன்பானவர்களே, நல்லவர்களை நல்லவர்களே அறிவார்கள். தீயவர்கள் தீயவரோடு சேர்வார்கள். ஒருவர் வறியவரான காலத்திலும் அவருடன் கொண்ட உறவைப் பேணிக் காப்பாற்றும் குணம் நல்லவரிடம் இருக்கும். அன்பான உறவு நீடிக்கும். அந்த உறவு செல்வத்தை மேம்படுத்தும். நல்ல நண்பரது உறவை அவர்கள் வறுமைப்பட்ட காலத்திலும் பேணிப் பாதுகாப்பது நல்லோரது குணமாகும். உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் ஒழுக்கம். உண்மை, நாணம் என்ற மூன்றிலிருந்தும் ஒரு போதும் வழுவமாட்டார்கள். இவர்கள் எப்பொழுதும் மகிழ்வுடனும், கொடுத்துதவும் தன்மையுடனும், பிறரை இழிவாய் எண்ணாமலும், தான் வறுமைப்பட்டாலும் அடுத்தவர்களுக்குக் கொடுத்துதவும் பண்புள்ளவர்களாகவும் வாழ்வார்கள். கோடி கோடியாய்ப் பொருட்களைக் கொட்டிக்

கொடுத்தாலும் இவர்கள் ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடமாட்டார்கள்”

“அன்பானவர்களே, நிலத்தில் புதைந்திருக்கும் மாணிக்கக் கற்களில் சேறு படிந்திருந்தாலும் அவை பெறுமதி மிக்கவை. அதை மாணிக்கக் கல் பற்றித் தெரிந்தவர்கள் உணர்ந்து கொள்வார்கள். அது போலத் தொடர்ச்சி அறாது உயர்ந்து விளங்கும் நல்ல குடிப்பிறந்தோருக்கு எந்தவிதமான தாழ்வு வந்த போதும் அறவுடையவர்கள் அவர்களின் பெருமையைப் பாராட்டுவர்”

“நாவலடியில் சிறுத்தொண்டன் என்றொரு பெரியவர் இருந்தார். நல்ல குடியில் பிறந்த அவர் மிகவும் வறுமையானவர். ஒருவனை வறுமை வந்தடைந்தால் அவனுக்கு இப்பிறப்பிலும் இன்பம் இல்லை, மறுபிறப்பிலும் இன்பம் இல்லை என்பார்கள். ஆனால் சிறுத்தொண்டன் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். ஊரில் எந்த நிகழ்வும் அவரின் தலைமையில் தான் நடைபெறும்”

“ஒரு நாள் வெளியூரில் இருந்து வந்த மாறன் என்பவன் அவ்வூருக்கு ஒரு பாடசாலைக் கட்டிக் கொடுக்க விரும்பி ஊரவரை, “இவ்வூரில் வாழும் ஒரு பெரியவரைக் கொண்டே பாடசாலையின் வேலைகளைத் தொடங்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட பெரியவர் ஒருவரிடம் அழைத்துச் செல்லுங்கள்” என்றான். ஊரவர்கள் அவனைச் சிறுத்தொண்டனின் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். சிறுத்தொண்டனின் வீடு ஒரு சிறுகுடிசை. அவர் கந்தல் வேட்டியை

அணிந்திருந்தார். ஊரவர்கள் அவர் முன் கைகட்டி மரியாதையுடன் நின்றனர். அவர்கள் கொடுக்கும் மதிப்பைப் பார்த்து வியப்படைந்த அவன் அப்பெரியவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். அவரைக் கொண்டு பாடசாலை வேலைகளைத் தொடங்குவித்தான்."

"அன்பானவர்களே, சேற்றில் இருக்கும் மணிகளின் பெருமையைச் சேற்றால் மறைக்க முடியாது. அது போல நல்ல குடியில் பிறந்தவர்களின் பெருமைகளை வறுமை கெடுக்காது. அதனால் வறுமை வந்தாலும் நல்ல பண்புகளில் இருந்து விடுபடாது வாழுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**இணரோங்கி வந்தாரை என்னுற்றக் கண்ணும்;**
**உணர்பவர் அஃதே உணர்ப; – உணர்வார்க்கு**
**அணிமலை நாட! அளறாடிக் கண்ணும்**
**மணிமணி யாகி விடும்.**

வறுமையால் ஒருவர் கஷ்டப்பட்ட போதும், குடிப்பிறப்பின் உயர்வு அவரை விட்டு என்றும் மாறாது. அதனால் பெரியவர்கள் அவரை மதித்துப் போற்றுவர். '**அளறாடிக் கண்ணும் மணிமணியாகி விடும்'** என்பது பழமொழி

**22** "அன்பானவர்களே, சிலர் நல்லவர்களைப் போல உறவாடி அவர்களைக் கெடுப்பதையே நோக்காகக் கொண்டிருப்பர். இத்தகைய மனிதர்களை அடையாளம் காண்பது மிகவும் கடினமானது. வாளைப் போலக் கண்ணுக்குத் தெரிந்த பகைவருக்கு அஞ்சத் தேவையில்லை.

ஆனால் உறவினர்களைப் போல உடனிருந்து வெளிப்படையாகத் தெரியாமல் நடிக்கும் பகைவர்களுக்கு அஞ்சியே தீர வேண்டும். இப்படியானரிர்களிடம் இருந்து ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் தருணம் ஏற்படும் போது அவன் கொலை செய்யவும் தயங்கமாட்டான் . உட்பகையைத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டமானது. பாத்திரத்திற்கு ஏற்ற மூடி போல பொருத்தமாக இருந்தாலும் பாத்திரமும் மூடியும் வேறுவேறானவை. அது போல இனிய நண்பர்கள் போலச் சேர்ந்திருந்து கழுத்தறுப்பவர்களை இனங் காண்பவர்கள் தான் வாழ்க்கையில் வெற்றியடைவார்கள்.”

“அன்பானவர்களே, வேலூர் மன்னன் உதயணனின் அவைப் புலவர் இளமாறன். உதயணனும் இளமாறனும் ஒன்றாகப் படித்தவர்கள்; நண்பர்கள். உதயணன் தனது எக்காரியத்தையும் தனது நண்பனான புலவரைக் கேளாது செய்ய மாட்டான். அரசசபையிலே அவர் தான் தலைமைப் புலவர். அதனால் அவருக்குத் தலைக்கனம் அதிகம். அத்துடன் உதயணன் தனது நண்பன் என்ற வகையில் எல்லோருடனும் சற்றுத் திமிராக நடந்து கொள்வார்”.

“உதயணன் புலவரின் உற்ற நண்பனாகையால், அவனுக்குப் புலவரின் நடத்தைகள் பற்றிக் கூற எல்லோரும் பயந்தனர். புலவர் அந்தப்புரத்திற்கும் செல்வார். புலவர் இல்லாது நாட்டில் எக்கருமமும் நடக்காது. இதனால் புலவருக்கு உதயணனைக் கொன்று விட்டுத் தான் அரசனாக வேண்டும் என்ற ஆசை மனதில் குடியேறி வளர்ந்து பெருத்தது. அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தளபதிகள்,

அமைச்சர்களிடம் நட்புரிமையுடன் பழகித் தனது திட்டத்தை முதலமைச்சருக்கு வெளியிட்டார்."

"முதலமைச்சர் அரசனுக்கு விசுவாசமானவர். அவர் அவ்வப்போது அரசனுக்குத் தான் அறிந்த செய்திகளைக் கூறி வந்தார். அரசனுக்குப் புலவரின் எண்ணம் புரிந்தது. புலவர் ஒரு நாள் தான் அயல் நாட்டிற்குச் செல்ல விரும்புவதாக அரசனுக்குக் கூறினார். அரசன் மரியாதையுடன் பல போர் வீரர்களை அவரோடு அனுப்பி வைத்தான். நடுக்காட்டில் அரசனின் சொற்படி படை வீரர் புலவரைக் கொன்றனர். புலவர் அரச சபையில் செல்வாக்கைப் பெற்று விட்டதாக நினைத்து அயல் நாட்டரசனின் துணையோடு வேலூரைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தார்."

"அன்பானவர்களே, உட்பகை கொடியது. அது உயிரை அறியாது கொல்லும் தன்மை வாய்ந்தது. ஆகையால் உட்பகை உண்டாகா வண்ணம் காத்துக் கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**வெள்ளம் பகையெனினும், வேறிடத்தார் செய்தவதென்?**
**கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்பு**
**புள்ளொலிப் பொய்கைப் புனலூர! அஃதன்றோ,**
**அள்ளில்லத் துண்ட தனிசு.**

உட்பகை மிகவும் கொடியது. போலியான நட்பு பெரும் கேட்டைத் தரும். உட்பகை ஒருவனைக் குடியோடு அழிக்கும் தன்மை கொண்டது. '**அள்ளில்லத்து உண்ட தனிசு**' என்பது பழமொழி.

23 “அன்பானவர்களே, தருமஞ் செய்யச் செய்யப் பாவம் குறைந்து குறைந்து அது முற்றாக நீங்கி விடும். அந்நிலை உருவானால் நாம் இறைவனின் பாதார விந்தங்களை அடைந்து பிறப்பில்லாத இன்ப வாழ்வு வாழலாம். பாத்திரமறிந்து பிச்சையிடுபவன் தான் மேலான இன்பத்தை அடைவான். நாம் செல்வத்தைத் தேடுவதற்காக முயற்சிகள் பல செய்கிறோம். அந்த முயற்சிகள் தெய்வ அருளால் வெற்றியளித்தால் முயற்சிப்பவனின் வறுமை நீங்கிச் செல்வம் குவியும். அது போல நல்ல தருமங்களைச் செய்ய செய்யப் பாவம் நீங்கிப் புண்ணியம் சேரும். தருமஞ் செய்யும் போது உண்மையாக இரப்பவன் வறியவன் தானா என்று ஆராய்ந்து உதவுபவனின் வாழ்வு பெருமை பெறும்; சிறப்பும் பெறும். நற் குடியிற் பிறந்து குற்றங்களில் இருந்து நீங்கிப் பாவச் செயல்களுக்கு அஞ்சி வாழ்பவர்களே தருமஞ் செய்யத் தகுதியுடையவராவர். இவர்களிடம் பொருள் பெறுபவன் சிறப்படைவான். பொருள் கொடுப்பவன் உயர்வடைவான்.”

“அன்பானவர்களே, வெளியூரில் இருந்து வந்த மாறன் என்பவன் சிறுத்தொண்டனின் பண்புகளை அங்கிருந்த சில நாட்களில் கண்டு அதிசயித்தான். பொன். பொருள் இல்லாவிட்டாலும் அவரின் பண்புகள் அவனைக் கவர்ந்தன. அதனால் அவருக்கு உதவி செய்ய முன் வந்தான். பொன்னையும் பொருளையும் அவருக்குக் கொடுத்தான். அவர் அதை வாங்க மறுத்து விட்டார்; நான், மிகமிகச் சந்தோசமாக வாழ்கிறேன். எனது தேவைகளுக்கு இறைவன் அள்ளித் தருகிறான். ஊரவர்கள் என்னை மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்துப்

போற்றுகின்றனர். தேவைக்கதிகமாக ஏன் பொருள்கள். அதனால் இவற்றை நீ ஏழை எளியவர்களுக்குக் கொடு" என்றார்"

"அவரின் பதில் அவனைத் திகைக்கச் செய்தது. தான் கொடுக்கும் பொன்னையும் பொருளையும் வாங்குவார் என்று அவன் நினைத்தான்"

"ஐயா, தருமம் அறிந்தவரே, நான் பொன்னும் பொருளும் தந்து தங்களை அவமதித்து விட்டேன். தயவு செய்து என்னை மன்னித்தருளுங்கள். அத்துடன் எனது விருப்பத்தைத் தாங்கள் பூர்த்தி செய்தல் வேண்டும். நான் தான் தர்மங்களை ஒழுங்காகச் செய்யும் அடுத்த ஊரில் வாழும் தர்மராசாவின் மகன். நான் உங்கள் மகளைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். தயவு செய்து தர்மமாக நினைத்து உங்கள் மகளை எனக்குக் கொடுங்கள் என்றான்".

"சிறுத்தொண்டன் திகைத்துப் போனார். அவரால் இல்லை என்று கூற முடியவில்லை. "சரி" என்றார்"

"ஐயா, நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நாளை நான் பெற்றோரை அழைத்து வருகிறேன் என்றான் மாறன்"

"அன்பானவர்களே, தர்மம் தலை காக்கும். தக்க சமயத்தில் உதவி செய்யும். தர்மஞ் செய்பவனுக்குக் கடவுள் அள்ளி அள்ளிக்

கொடுப்பார். அதனால் தர்மம் செய்யுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அறஞ்செய் பவர்க்கும், அறவழி நோக்கித்**
**திறந்தெரிந்து செய்தக்கால், செல்வழி நன்றாம்,**
**புறஞ்செய்யச், செல்வம் பெருகும்; அறஞ்செய்ய**
**அல்லவை நீங்கி விடும்.**

தகுந்தவர்களுக்குச் செய்யும் தர்மமே சிறந்தது. '**அறம் செய்ய அல்லவை நீங்கி விடும்**' என்பது பழமொழி

24 "அன்பானவர்களே, அன்பு காரணமாக விரும்பாமல், பொருள் காரணமாய் விரும்பும் விலை மகளிரின் இனிய சுகம் என்றும் தீமையையே தரும். விலை மகள் கொடுக்கும் பொருளின் அளவுக்கேற்ப இன்பம் தருவாள். யார் பொருளைக் கூடுதலாகக் கொடுக்கிறார்களோ அவர்களையே அவள் விரும்புவாள். ஒழுக்கமில்லாத விலை மகளின் இழிந்த உறவை இழிந்தவர்கள் சொர்க்கமாக நினைப்பர். பொன்னையும் பொருளையும் சொத்தையும் விலை மகளிடம் இழப்பவர்கள் இறுதியில் மானத்தையும் இழப்பர். அதனால் நீண்ட நரகத்தைச் சொர்க்கமென் றெண்ணி விலை மகளிடம் செல்லும் தன்மையை ஒழித்தல் வேண்டும். உள்ளத்தை ஒழுக்கநெறியில் நிலை நிறுத்த முடியாதவர்கள் தான் விலை மகளை நாடிச் செல்வார்கள். எனவே அன்பானவர்களே, உள்ளத்தை ஒழுக்க நெறியில் நிலை நிறுத்துங்கள்."

“வேலூரிலே நாராயணன் என்று ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது தந்தையார் பெரும் வணிகன். அதனால் சொத்துக் குவிந்திருந்தது. அவன் அழகான தனது மனைவியை வெறுத்து ஒதுக்கி விட்டு விலை மகளைத் தேடிச் செல்வான். பொருட்களை அள்ளிக் கொடுப்பான். அதனால் அவனது தந்தை தனது சொத்துக்கள் அனைத்தையும் தனது மருமகளான காயத்திரியின் பெயருக்கு எழுதி வைத்து விட்டார். அதனால் விலை மாதர்க்குக் கொடுக்கப் பொருளில்லாமையால் நாராயணனன் துன்பப்பட்டான். பொருள் இருக்கும் போது அள்ளி அணைத்து இன்பங் கொடுத்த விலை மாதர்கள் அவனை வேலைக்காரரை விட்டுத் துரத்துவித்தனர். அதனால் மனம் வருந்திய நாராயணன் தனது தோழனான மணிவண்ணனிடம் வந்து தான் திருந்தி விட்டதாகவும், இனிமேல் விலை மாதர்கள் இருக்கும் வீட்டுப் பக்கம் தலை வைத்துத் தூங்க மாட்டேன்” என்று சொல்லித் தனது மனைவியுடன் சேர்த்து வைக்குமாறு கெஞ்சினான். அவனது கெஞ்சலால் மனம் மாறிய மணிவண்ணன் காயத்திரியிடம் வந்தான்.”

“அண்ணா, எனது கணவர் திருந்தி விட்டாரென்று நான் கடைசி வரையும் நம்ப மாட்டேன். விலை மாதரின் அணைப்பையும், இனிய சொற்களையும், நஞ்சாகக் கருதல் வேண்டும். ஆனால் எனது கணவர் அதை அமிழ்தமாகக் கருதுகிறவர். அவரைத் திருத்த முடியாது. பலமுறை திருந்தி விட்டதாகக் கூறி வீட்டுக்கு வந்து பொருட்களைப் பற்றியதும் சென்று விடுவார். இது நீங்கள் அறியாததல்ல. இப்பொழுது திருந்தி விட்டதாகக் கூறி வீட்டுக்குக் வருவார். பின் பெறுமதியான

பொருட்களைத் தருணம் பார்த்து திருடிக்கொண்டு சென்றுவிடுவார். அதற்காகத் தான் நாடகமாடுகின்றார். தூங்குபனை எழுப்பலாம். தூங்குபவனைப் போல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது." என்றாள் காயத்திரி.

"அன்பானவர்களே, பொய்யாக நடிப்பவர்கள் திருந்த மாட்டார்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தொடித்தோள் மடவார் மருமந்தன் ஆகம்**
**மடுத்து, அவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப,**
**நெறியல்ல சொல்லல் நீ, பாண! —அறிதுயில்**
**யார்க்கும் எழுப்பல் அரிது.**

நித்திரை கொள்பவர்கள் போலப் பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியாது ; '**அறிதுயில் யார்க்கும் எழுப்பல் அரிது'** என்பது பழமொழி.

25 "அன்பானவர்களே, பாரி என்ற மன்னன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். தேரை நிறுத்திவிட்டு வேட்டையாடி விட்டுத் திரும்ப வந்து பார்த்த போது மன்னனின் தேரில் ஒரு முல்லைக் கொடி படர்ந்திருந்தது. அதனால் முல்லை படரட்டும் என்று நினைத்துத் தேரை அவ்விடத்தில் விட்டு விட்டுச் சென்றான் மன்னன். பேகன் என்ற மன்னன் மயிலொன்று மழையில் நனைந்து குளிரால் நடுங்குரிதைக் கண்டு போர்வையால் அதைப் போர்த்து விட்டான். முல்லைக்குப் பெறுமதியான தேர் எதற்கு? நான்கு கம்புகளை நட்டுப் பந்தலிட்டுக்

கொடுத்திருக்கலாம். மயில் போர்வையை ஏற்குமா? அதற்குப் போர்க்கத் தெரியுமா....? தெரியாதே. இது தெரிந்தும் தெரியாததைப் போல நடந்தமையினால் இந்த இரு மன்னர்களும் அழியாப் புகழைப் பெற்றனர். தேவையில்லாத செயல்களைப் பெரியவர்கள் செய்தாலும், அதை மக்கள் போற்றிப் புகழ்வார்கள்."

"சிறுத்தொண்டனின் மகளின் திருமணம் வெகு சிறப்பாக ஊரே அல்லோல கல்லோலப்படும்படி நடந்து முடிந்தது. தர்மராசா பெயருக்கேற்ற உத்தமர். பெரும் பணக்காரர். பெருங் குணவான். அதனால் மிக மகிழ்ந்த சிறுத்தொண்டன் சிவனுக்கு ஒரு தங்கச் சங்கிலியைக் கொண்டு வந்து போட்டார்."

"கடவுளுக்குக் காணிக்கையாக எதுவும் கொடுக்கலாம். ஆனால் இதுவரை சிறுத்தொண்டன் சிவனுக்கு எதுவும் கொடுத்ததில்லை. தணிகாசலம் ஒரு நாள் சிவனுக்கு இருபதாயிரம் ரூபா செலவில் ஒரு காளை வாகனம் செய்து கொடுக்க விரும்பினார். அதை அறிந்த சிறுத்தொண்டன் சொன்னார்; "தணி, சாதாரண பக்தர்கள் வாகனம் செய்து கொடுப்பது சரி. உண்மையான பக்தன் சிவனுக்குக் கொடுப்பதை விடச் சிவனடியாருக்குக் கொடுக்கவே விரும்புவான். சிவ பக்தனான நடராஜன் வயிற்று வலியால் துன்பப்படுகிறான். இருபத்தையாயிரம் ரூபா சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமாம். சிவனுக்குக் கொடுக்கும் இருபதினாயிரத்துடன் இன்னும் ஒரு ஐயாயிரம் போட்டு நடராஜனுக்குக் கொடு. சிவன் பெயரளவில்

நடராஜன் தானே" என்றார். அவரின் பேச்சை நம்பிய தணிகாசலம் நடராஜனுக்கு இருபத்தையாயிரம் ரூபா கொடுத்தார். சத்திரசிகிச்சை செய்த நடராஜன் சுகம் பெற்று நல்ல முறையில் வாழ்கிறான். அப்படித் தருமத்தில் விருப்புக்கொண்ட சிறுத்தொண்டன் சிவனுக்குச் சங்கிலியை அன்பளிப்பாகக் கொடுத்ததை இன்னும் மக்கள் பெருமையுடன் பேசிக் கொள்கிறார்கள்."

"அன்பானவர்களே, பெரியவர்கள் எதைச் செய்தாலும் அது போற்றுதற்குரியதாக இருக்கும். அதனால் சாதாரண மக்களான நீங்களும் தான தருமம் செய்து பெரியவர்களாக மாறுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்,**
**தொல்லை, அளித்தாரைக் கேட்டறிந்தும்; – சொல்லின்**
**நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப !**
**அறிமடமும் சான்றோர்க்கு அணி.**

பாரியும் பேகனும் முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் அளித்துப் பெருமையடைந்தனர். அவை பொருத்த – மில்லாத கொடை என்றாலும் அவை பெரும் புகழைப் பெற்றன. சான்றோரது பெருமை இதனாற் கூறப்பட்டது. '**அறிமடமும் சான்றோர்க்கு அணி**' என்பது பழமொழி.

26 “அன்பானவர்களே, நன்மைகளையும், தீமைகளையும் ஆராய்ந்து, நன்மை தருகின்றவற்றையே செய்யும் இயல்புகளை உடைய பெரியவர்கள் யாரும் சொல்லாமலே நற்காரியங்களைச் செய்வர். இப்பெரியவர்கள் பொருள்வரும் வழிகளைப் பெருக்கி, அவற்றை வளப்படுத்தி, இடையில் வரும் துன்பங்களைப் போக்கி நிதானமாக இருந்து செயலாற்றுவர். அன்பு, அறிவு, ஐயமில்லாது தெளியும் ஆற்றல், ஆசையில்லாமை ஆகிய பண்புகள் இவர்களிடத்தில் இருக்கும். இவர்கள் செய்யும் வழிவகைகளை நன்றாக அறிந்து அதில் வரும் இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு செயலில் கண்ணுங் கருத்துமாக இருப்பார்கள். இவர்கள் செயல்களை முடிக்க இயலாதவனைச் செயலுக்குரியவனாகச் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். நன்கு திட்டமிட்டுத் தொடங்கிய செயலை இடைநடுவில் கைவிடவும் மாட்டார்கள். திடமான மன உறுதியும், கடினமான செயற்றிறனும் உடைய இவர்களால் தான் செயற்கரிய காரியங்கள் செய்யப்படும்”.

“வேலூர் மன்னன் உதயணன் நீதிநெறி தவறாது ஆட்சி செய்பவன். துறையூர் மன்னன் மார்த்தாண்டன் களியாட்டப் பிரியன். அவன் தனக்கு இன்பந்தரும் களியாட்டங்களில் ஈடுபடுவானே தவிர நாட்டைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ சிந்திப்பதில்லை. உதயணனும் மார்த்தாண்டனும் நண்பர்கள். அதனால் துறையூர் மக்கள் வேலூருக்கு வந்து போவார்கள். திடீரென்று துறையூரில் வெள்ளப் பெருக்கும் சூறாவளியும் ஏற்பட்டு விட்டது. மார்த்தாண்டன் மக்களைப் பற்றிச் சிந்திக்காது களியாட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். துறையூர் மக்கள் அகதிகளாக வேலூருக்குள் வந்து

கொண்டிருந்தனர். இதை அறிந்த உதயணன் மார்த்தாண்டனுக்கு நிலைமையை விளக்கினான். ஆனால் மார்த்தாண்டன் முதலமைச்சரிடம் அதைக் கூறுமாறு சொன்னான். உதயணன் வேலூர் படைத் தளபதிகளையும், முதலமைசரையும் அழைத்துச் சொன்னான்; "துறையூரில் இருந்து இலட்சக் கணக்கான மக்கள் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், இருப்பிடமின்றியும் எமது நாட்டுக்கு வருகிறார்கள். அவர்கள் உள்ளே நுழையாதபடி எல்லையில் காவலைப் பலப்படுத்துங்கள். எமது போர் வீரர்களையும் மக்களையும் அழைத்துச் சென்று துறையூர் மக்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளைச் செய்யுங்கள்" என்றான்".

"ஆயிரக்கணக்கான படைவீரர்களும் மக்களும் துறையூருக்குச் சென்று ஒரு வார காலத்தில் மீட்புப் பணிகளைச் செய்து முடித்தனர். அதனால் துறையூர் மக்கள் எவரும் வேலூருக்கு வரவில்லை. அந்த மக்களுக்கு நிம்மதியும், வாழ்வும் ஏற்பட்டது. வேலூர் மக்களுக்குப் பல வழிகளாலும் ஏற்படவிருந்த துன்பங்கள் பலவும் இல்லாமல் போயிற்று. பெரிய செயல்களை முதன்மையுடையவனாக இருந்து ஆட்சி செலுத்துபவனே அறிந்து கொள்வான். வேலூர் மன்னனைப் போல பெருமை உடைய சிறந்த செயல்களை நீங்கள் செய்தல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**பொறப்வும் பொல்லாதனவும், புணர்ந்திருந்தார்**
**சொற்பெய்து உணர்த்துதல் வேண்டுமோ? —விற்கீழ்**
**அரிபாய் பரந்தகன்ற கண்ணாய்! அறியும்,**
**பெரிதாள் பவனே பெரிது.**

அறிவுடையோரே சிறந்த செயல்களைச் செய்ய விரும்புவர் ; அதைத் தாமாகவே புரிந்து செய்வர் '**அறியும் பெரிதாள்பவனே பெரிது'** என்பது பழமொழி.

27 "அன்பானவர்களே, சிலர் தமக்கு வந்து சேருகின்ற இன்பதுன்பங்கள் ஏன் வந்து சேர்கின்றன என்று அறியாது, அறியாமையால் தன் வாழ்விற்கு விதிதான் காரணம் என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பர். இத்தகையவனைப் பேதை என்று சொல்வார்கள். இவர்கள் எதற்கும் முயற்சி செய்யாது இருப்பார். முயற்சி வெற்றி தராது என்பது இவர்களது எண்ணமாகும். பேதைமை என்று சொல்லப்படுவது கெட்டதைப் பிடித்து வைத்துக் கொண்டு நல்லவற்றை விடுவதாகும்".

" பேதைமை உள்ளவர்கள் தகாத செயல்களை வெட்கப்படாமல் செய்வார்கள். செய்யத் தக்கவை எவையென்று தெரியாது மயங்குவார்கள். மற்றவர்களைக் காரணமின்றிச் சந்தேகிப்பார்கள். காக்க வேண்டியவற்றைக் காக்காது விடுவார்கள். ஒருவன் ஏழேழு பிறவிகளில் அடையும் நரகத் துன்பத்தைப் பேதை ஒருவன் எடுத்த ஒரு பிறப்பிலேயே அனுபவிப்பான். பேதையானவன் ஒரு செயலை மேற்கொண்டால் அது நிறைவுபெறாது. அத்துடன் அவன் குற்றவாளியாகிப் பிறருக்கு அடிமைப்படவும் செய்வான். இத்தகைய பேதையிடம் பெருஞ்செல்வம் சேர்ந்தால் அவனுக்குத் தொடர்பிலாதவர்கள் நன்மை அடைவார்கள். அவனின் சுற்றத்தார் பெருந்துன்பம் அடைவார்கள். பேதையிடம் பெரும் பதவி

சென்றடைந்தால் தீயவர்கள் நன்மை பெறுவார்கள். நல்லவர்கள் துன்பப்படுவார்கள்"

"துறையூர் மன்னன் மார்த்தாண்டன் மக்களுக்கு வந்த துன்பத்திற்கெல்லாம் காரணம் ஊழ் என்று சொல்லி, மக்கள் தாம் செய்த ஊழ் வினைப் பயனை அனுபவிக்கிறார்கள் என்று சொல்லித்தான் அதில் பங்கு பற்றாது களியாட்டங்களில் ஈடுபடுவான். முதலமைச்சர் உண்மை நிலையை எடுத்துக் கூறிய போதும் அதை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் தளபதி போர் வீரர்களுடன் சேர்ந்து நாட்டைக் கைப்பற்றினான். மார்த்தாண்டனைப் பிடித்துச் சிறையில் அடைத்தான். அவனுக்கு நேரத்திற்கு உணவு கொடுக்கப்படுவதில்லை. சிறையில் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை"

'ஒரு நாள் மார்த்தாண்டன் தங்கியிருந்த சிறைக் கூடத்திற்கு முதலமைச்சர் சென்றார். மார்த்தாண்டன் சொன்னான்; "என்னை விடுதலை செய்யச் சொல்லுங்கள். நான் வேலூருக்குச் சென்று வாழ்கிறேன். இங்கு எனக்கு நல்ல உணவு தரப்படுவதில்லை. குடிக்கக் கூடப் போதிய நீர் தருவதில்லை" . அதற்கு முதலமைச்சர சொன்னார் "எல்லாம் உன் ஊழ்வினைப் பயன் என்று"

"அன்பானவர்களே, ஊழ்வினையின்படி துன்பங்கள் வந்தால் அதை எமது அறிவுத் திறமையால் முயற்சி செய்து நீக்குதல் வேண்டும். மிருகங்கள் பறவைகள் கூடத் தாம் வசிக்குமிடங்களில் நீர், உணவு

இல்லாவிட்டால் நீர், உணவுள்ள இடங்களைத் தேடிச் சென்று விடும். மனிதன் முயற்சி செய்து தனக்கு விரும்பியதைப் பெற்று வாழ்வதே முறை அதனால் நீங்கள் முயற்சியுள்ளவர்களாக வாழுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**உறுகண் பலவும் உணராமை கந்தாத்,**
**தறுகண்மை ஆகாதாம் பேதை, – 'தறுகண்**
**பொறிப்பட்ட வாறல்லால், பூணாது' என் றெண்ணி,**
**அறிவச்சம் ஆற்றப் பெரிது.**

ஊழை முயற்சியுள்ளவர் வெல்வர். ஆனால் பேதைகள் அனைத்தையும் ஊழின் பயன் எனக்கருதி முயற்சி செய்யாதிருந்து துன்பப்படுவார். '**அறிவச்சம் ஆற்றப் பெரிது**' என்பது பழமொழி.

28 “அன்பானவர்களே, ஒருவன் செல்வந்தனாக வேண்டு – மென்றால் அவனுக்கு விதி உதவ வேண்டும். அது போல ஒருவன் வறுமைப்பட வேண்டுமானால் அதற்கும் விதியே காரணமாக அமையும். பொருளைச் சேர்ப்பதற்காக ஒருவனை அறிவாளி யாக்கும் விதி, பொருளை இழப்பதற்காக அவனை அறிவிலியாக்கும். அதுபோல ஒருவன் பல்வேறு உயர்ந்த கருத்துக்களைக் கூறும் நூல்களைத் தெளிவாகக் கற்றாலும் விதியின் காரணமாய் அவன் அறியாமை மிகுந்தவனாகவே சபையில் பேசுவான். எனவே விதி காரணமாக நல்வினைகள் வரும் போது மகிழ்ச்சியடையும் மனிதர்கள், அதே விதி காரணமாகத் துன்பங்கள் வரும் போது கடவுள் பக்தியுடன் முயற்சி செய்தல் வேண்டும்”

“தணிகாசலம் பெரும் வசதியுடையவர் அல்ல. அவர் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஞ்சத் திருவிழாவிற்கு தனது மனைவி மக்களுடன் சென்றார். சுவாமியைத் தரிசனஞ் செய்து விட்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த கடைகளில் பொருட்களை வாங்கினார். தனது ஐந்து பெண்பிள்ளைகளுக்கும் அவரவர்கள் விரும்பிய பொருட்கள் அனைத்தையும் வாங்கிக் கொடுத்தார். பிள்ளைகள் மகிழ்டன் தகப்பனை வாழ்த்தினர். அதன்பின் இரவு பத்து மணி வரை அங்கு திருவிழாவுக்கென அமைக்கப்பட்ட கடைகளையும் களியாட்ட இடங்களையும் பார்வையிட்டனர். குடும்பத்துடன் எல்லோரும் ராட்டினத்தில் ஏறி விளையாடினர்”.

“இரவு பதினொரு மணிபோல அனைவரும் வீட்டுக்குப் புறப்படத் தயாரான போது தணிகாசலத்தின் மூத்த மகள் ஆரணி கேட்டாள்; “ அம்மா, நீங்கள் இன்றைக்குத் தாலிக்கொடி போடவில்லையா?”

“தணிகாசலத்தின் மனைவி ; “போட்டு வந்தனான்” என்றபடி கழுத்தைத் தடவிப் பார்த்தாள். தாலிக்கொடியைக் காணவில்லை. அவள் திகைத்துப் போனாள்”.

“நான் யாருக்கும் கெடுதி செய்ததில்லை. அது போல நான் யாருடைய பொருட்களையும் அபகரிக்கவில்லை. முற்பிறப்பில் அப்படிச் செய்தேனோ தெரியாது. கோடி கோடியாகப் பொருள் சேர்த்தாலும் அதை அனுபவிக்கக் கொடுத்து வைத்தால் தான் அனுபவிக்கலாம்.

கவலைப்படாதையும், ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருட்களைக் கட்டிக் காத்தாலும் அவை நம்மிடம் நிலைத்திராது. அது போல நமக்குரிய பொருட்களை கடலில் கொண்டு போய்க் கொட்டினாலும் அவை நம்மைத் தேடி வந்து விடும். வாருங்கள் சென்று காவல்துறை அலுவலகத்தில் முறையிடுவோம்" என்று கூறிக் காவல்துறை அலுவலகத்திற்குச் சென்றனர்".

காவல்துறை அதிகாரியின் மேசையில் தணிகாசலத்தின் மனைவியின் தாலிக் கொடி இருந்தது. அதைக் கண்டதும் தணிகாசலம் சொன்னார்; "நான் கஷ்டப்பட்டு உழைத்த பணம். கடைசி வரையும் என்னை விட்டுப் போகாது என்று" ஆகையால் அன்பானவர்களே, எல்லாம் விதியென்று சோம்பியிராதீர்கள். விதியால் வரும் துன்பங்களை முயற்சியால் வெல்லலாம். துன்பங்கள், இன்பங்கள் யாவும் ஊழால் தான் வரும். அறிவையும் ஊழ்கெடுத்து விடும். ஆகவே இறைவனைப் பிராத்தியுங்கள்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**சுட்டிச் சொலப்படும் பேரறிவி னார்கண்ணும்**
**பட்டஇழுக்கம் பலவானால் – பட்ட**
**பொறியின் வகைய, கருமம்; அதனால்,**
**அறிவினை ஊழே அடும்.**

மிக்க அறிவுடைய ஒழுக்கமானவரும் ஊழால் கெடுவர். '**அறிவினை ஊழே அடும்**' என்பது பழமொழி.

29 “அன்பானவர்களே, வற்றாத குளத்திலே ஒரு குடம் நீர் எடுத்தால் அது வற்றிவிட மாட்டாது. அது போல நிறைந்த செல்வமுடைய ஒருவன் வறியவர்களுக்குக் கொடுப்பதனால் அவனது செல்வம் குறைவடையாது. கிணற்று நீரை முழுவதும் இறைத்தாலும் அது சிறிது நேரத்தில் முன்பு இருந்த நிலையை அடைந்து விடும். நூறாண்டு காலமாக இவ்வூரவர்கள் சிவன் கோயிற் கிணற்றில் நீர் எடுத்து வருகிறார்கள். அடுத்த ஊரான நாவலடிக் கிராமம் உவர் நீரை உடையது. அக்கிராம மக்களும் தினமும் வந்து சிவன் கோயிற் கிணற்றில் நீர் எடுக்கிறார்கள். ஒரு நாளென்றாலும் அக் கிணறு வற்றியதா? தன்னை நம்பி நீர் எடுக்க வருவவர்களை ஏமாற்றியதா..? இல்லையே. கிணற்று நீரைப் போன்றது தான் செல்வம். செல்வம் என்றால் கொடுக்கக் கொடுக்கக் குறையாதது என்று பொருள். ஆகையால் அன்பானவர்களே, உங்கள் தகுதிக்கேற்றபடி ஏழைகளுக்கு கொடுத்துதவுங்கள். ‘ஔவையார் அறஞ்செய்ய விரும்பு’ என்று தான் சொல்கிறார். ஒருவன் தான தர்மம் செய்ய ஆசைப்பட்டால் தான் அவனால் தானஞ் செய்ய முடியும். எனவே எல்லோரும் தானஞ் செய்ய விரும்புங்கள். பின் தேவை ஏற்படும் போது தானஞ் செய்யலாம்”.

“தணிகாசலத்திற்குத் தாலிக் கொடி கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. நல்லூர் கந்தனை வணங்கி விட்டு வீட்டுக்கு வந்தார். அவரது மனம் பூரிப்பால் நிறைந்திருந்தது. ‘தான் உண்மையானவன்; நேர்மையானவன்; பிறர் சொத்தை விரும்பாதவன் என்பதை நல்லூர் முருகன் உணர்த்தி விட்டார் என்று நினைத்தார்”. “மறு நாட்காலை பேரம்பலம் என்பவன் தணிகாசலத்திடம் வந்து

சொன்னான்; “அண்ணை, எனது மகளுக்கு முப்பத்தாறு வயது. அது உங்களுக்குத் தெரியும். நான்  நோயாளி. உழைக்க முடியாதவன். என்றும் எல்லோருக்கும் தெரியும். எனது மருமகன் மகளைச் செய்யச் சம்மதிக்கிறான். அவள் பிறக்கும் போதே அவனுக்கென நிட்சயிக்கப்பட்டவள். ஆனால் தாய் பத்துப் பவுண் நகைதந்தால் தான் திருமணஞ் செய்ய விடுவேன் என்கிறாள்.  மனைவியின் தாலிக்கொடி ஐந்து பவுண். அவளிடம் ஒரு சங்கிலியும் உள்ளது. அது மூன்று பவுண். இன்னும் இரண்டு பவுண் தேவை அண்ணை” அழுதான் பேரம்பலம்”.

“அழாதை, எனது பத்துப் பவுண் தாலிக்கொடி களவுபோனது. உடனே அது எனது கைக்கு வந்து விட்டது. அது தொலைந்திருந்தால் பொறுத்துக் கொண்டுதானே இருத்தல் வேண்டும். அதனால் நான் உனக்கு இரண்டு பவுண் தருகிறேன்” என்றார்.

“அண்ணை, நீங்கள் கேட்கிற எல்லாருக்கும் கொடுக்கிறியள். அதனால் தான் கடவுள் திருப்பித் தந்தார். கொடுக்கிறவன் குறைவடைய மாட்டான். நீங்கள் இம்மையிலும் மறுமையிலும் எந்தக் குறையுமில்லாமல் வாழ்வீர்கள்” என்று கூறிவிட்டுச் சென்றான்.”

“அன்பானவர்களே, தருமஞ்செய்து கெட்டுப் போனவர்கள் உலகில் யாரும் இல்லை. குளத்து நீர் போலவும், கிணற்று நீர் போலவும் கொடுக்கக் கொடுக்கச் செல்வம் குவியும். அதனால் பிறருக்குக் கொடுத்துதவி  செய்யுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**பல்லாண்டும் ஈண்டிப் பழுதாய்க் கிடந்தது**
**வல்லான் தெரிந்து வழங்குங்கால், – வல்லே**
**வலிநெடிது கொண்ட தறா அது; அறுமோ,**
**குளநெடிது கொண்டது நீர்?**

செல்வத்தின் பயன் தக்கவர்களுக்கு ஈதல். அதனால் தக்கவர்களுக்குக் கொடுப்பதால் செல்வந்தனுடைய செல்வம் குறையாது. '**அறுமோ குளநெடிது கொண்டது நீர்**' என்பது பழமொழி.

30 "அன்பானவர்களே, பிறர் வருந்தும்படி ஒருவன் அடைந்த பொருள் அனைத்தும் பின்னொரு காலத்தில் அவன் வருந்தியழும்படி அப்பொருள் நிட்சயம் அவனை விட்டுச் சென்று விடும். நல்ல வழியில் சேர்த்த பொருள் ஒரு போதும் உரியவனை விட்டுப் போகாது. தற்செயலாகப் போனாலும் அது காலங் கடந்தாவது திரும்பி வந்து சேர்ந்து விடும். ஆகையினால் மற்றவர்கள் மனம் மகிழ்ந்து கொடுத்தாலன்றி எமது ஆசைக்காக எடுத்தல் கூடாது. எடுக்க நினைப்பதும் கூடாது. ஏனென்றால் நினைவுகள்தான் பின்பு செயலாகும். வயல் விளைந்ததும் அறுவடை செய்வதற்காக வயலில் தேங்கி நிற்கும் நீரை வாய்க்கால் வழியாக விவசாயிகள் வெளியேற்றிய பின்பு தான் அருவி வெட்டுவார்கள். இந்த மேலதிக நீர் வாய்க்கால் வழியாகச் சென்று கடலை அடையும். வயலோரங்களில் உள்ள நரிகள் வாய்க்காலில் ஓடும் நீரை நக்கிக் குடிக்கும். அப்படி நக்கிக் குடிப்பதன் மூலம் கடல் வற்றி விட மாட்டாது."

“முருகப்பாச் செட்டியாரின் களஞ்சியத்திலிருக்கும் தானியங்கள் மலைபோலக் குவிந்திருக்கும். அதை மேற்பார்வை செய்பவன் ஒவ்வொரு தொழிலாளியிடமும் கொஞ்சக் கொஞ்சத் தானியங்களைக் கொடுத்து விட்டுப் பின் அதைத் தனது வீட்டில் கொண்டு சென்று கொடுக்கச் சொல்வான். இது பற்றி அங்கு வேலை செய்யும் ஒருவன் முருகப்பாச் செட்டியாருக்குச் சொல்லி விட்டான். ஒருநாள் திடீரென்று முருகப்பாச் செட்டியார் தொழிலாளர் வேலை முடிந்து செல்லும் போது அவர்களை வழி மறித்தார். அவர்களின் கையில் ஒரு சிறிய முடிச்சு இருந்தது. அதை என்னவென்று கேட்டார். “இவை கழிவு தானியங்கள். மேலாளர் உதவாது என்று கழித்து விட்டவர். அவற்றைக் கொண்டு செல்கிறோம்” என்றனர்.”

‘முருகப்பாச் செட்டியாரின் உதவியாளன்; “முடிச்சைப் பிரியுங்கள் சோதனை செய்தல் வேண்டும்” என்றான். அதனால் தொழிலாளர்கள் நடு நடுங்கினர். நிலைமையைப் புரிந்து கொண்ட முருகப்பாச் செட்டியார் சொன்னார்; “நூறு பேரிடம் உள்ளவை இரண்டு மூடைகள் கூடத்தேறாது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூடையைத் தூக்கிக் கொண்டு சென்றாலும் எனது செல்வம் குறைவடையாது. நீங்கள் கொண்டு செல்லுங்கள். நான் உங்கள் மேலாளரைத் தண்டிக்கிறேன்.” என்றார்”.

“ பெரும் செல்வந்தனது களஞ்சியத்தில் பல்லாயிரம் பிராணிகள் வாழும். அவை அவ்வணிகனின் தானியங்களை உண்ணும். அதனால் பெரும் வணிகன் நட்டமடையமாட்டான். அது போல பெரும்

வணிகனிடம் வேலை செய்வோர். சிறு சிறு களவுகளைச் செய்தாலும் அவன் குறைந்து போகமாட்டான்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**களமார் பலரானும் கள்ளம் படினும்,**
**வளமிக்கார் செல்வம் வருந்தா; – விளைநெல்**
**அரிநீர் அணைதிறக்கும் ஊர!  அறுமோ,**
**நரிநக்கிற் றென்று கடல்.**

பெரும் வணிகனிடம் வேலை செய்பவர் சிறு சிறு களவுகள் எடுத்தால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அக்களவால் பெரும் வணிகனின் செல்வம் ஒரு போதும் குறைவடையாது; '**அறுமோ நரிநக்கிற்றென்று கடல்**' என்பது பழமொழி.

31 "அன்பானவர்களே, விதியை விட வலியது எதுவும் இல்லை. விதியை விலக்குரிதற்கு வேறு வழிகளைத் தேடினாலும் அங்கு விதியே முன் வந்து நிற்கும். ஒருவன் தான் எடுக்கும் பிறவிகளிற் செய்கின்ற புண்ணிய பாவங்கள் தான் விதியாகிப் பிறப்புக்கள் தோறும் வந்து அவனை இன்பப்படுத்துகின்றன; துன்பப்படுத்துகின்றன. வங்கியில் பணத்தை வைப்பிலிட்டவன் தேவையேற்படும் போதெல்லாம் வங்கியிலிருந்து மீளப் பணத்தைப் பெறுவது போலப் புண்ணியஞ் செய்தவன் கடவுளிடமிருந்து நன்மைகளைப் பெறுகிறான். பாவஞ் செய்தவன் தன்னிடமிருந்தே துன்பங்களைப் பெறுகிறான். இன்பத்தையும் துன்பத்தையும் ஒவ்வொரு உயிரும் தம் செயல்களுக்கேற்றபடி பெற்றுக் கொள்கிறது."

“ஒரு முறை கடலில் பெருஞ் சூறாவளியேற்பட்டது. வேலூரில் உள்ளபல வணிகர்கள் கப்பல்களில் பொருட்களை ஏற்றிய னுப்பியிருந்தனர். முருகப்பாச் செட்டியாருடைய பத்துக் கப்பல்களும், துரைசிங்கம் செட்டியாரின் எட்டுக்கப்பல்களும், வாதவூர்ச் செட்டியாரின் ஆறு கப்பல்களும் நடுக்கடலில் நிற்பதாகச் செய்தி வந்தது. அதன்பின் இரண்டு நாட்கள் எந்தச் செய்தியும் வரவில்லை.”

“அதனால் முருகப்பச் செட்டியாரும், துரைசிங்கம் செட்டியாரும், வாதவூர்ச் செட்டியாரும் துறை முகத்தில் கப்பல்களின் செய்திக்காகக் காத்திருந்தனர். அவர்களுடன் அவர்களது குடும்பத்தினரும், அயலவர், நண்பர்களும், ஊர் மக்களும் அங்கு கூடியிருந்தனர். முருகப்பாச் செட்டியார் எந்தவிதக் கலக்கமும் இல்லாமல்; “நான் அனியாயங்கள் செய்திருந்தால் எனது கப்பல்கள் வரமாட்டாது.” என்றார். துரைசிங்கச் செட்டியாரும் வாதவூர்ச்செட்டியாரும் எதுவும் பேசத்தோன்றாது திக்குப்பிரமை பிடித்தவர்கள் போல இருந்தனர்.”

“மேலும் மூன்று நாட்கள் கழிந்தன. முருகப்பாச்செட்டியாரின் ஏழு கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்து நங்கூரமிட்டன. முருகப்பாச் செட்டியாரது பொருட்களுக்கும் கப்பல்களுக்கும் சேதமேற்படவில்லை. கப்பல் தலைவன் ஒருவன் சொன்னான்;

“மிகுதியான மூன்று கப்பல்களும் இன்று பொழு சாயுமுன் வந்துவிடும்” “எமது கப்பல்களைக் கண்டீர்களா?” என்று துரைசிங்கச் செட்டியாரும்,வாதவூர்ச் செட்டியாரும் கேட்டனர் அதற்கு அவர்கள்

“காணவில்லை.” என்றனர். மறுநாட்காலை முருகப்பாச் செட்டியாரின் கப்பல்கள் மூன்றும் பௌத்திரமாக வந்து சேர்ந்தன. ஒரு வாரங் கழிய துரைசிங்கச் செட்டியாரின் மூன்று கப்பல்களும், வாதவூர்ச் செட்டியாரின் ஒரு கப்பலும் வந்து சேர்ந்தன. மற்றவை கடலில் மூழ்கி விட்டதாகச் செய்திவந்தது”.

“முருகப்பாச் செட்டியார் தர்மமானவர்; அடுத்தவர்களுக்கு உதவுபவர்; கோயில்கள் கட்டுபவர்; நிதியுதவிகள் செய்பவர். மற்றைய இருவரும் கஞ்சர்கள். கோயிலுக்குக்கூட எதுவும் கொடாதவர்கள். முருகப்பாச் செட்டியாரின் பத்துக் கப்பல்களும் பௌத்திரமாகக் கரை சேரவேண்டுமென்று தினமும் வேலூர் மக்கள் அனைவரும் பிரார்த்தித்தனர். அந்தப் பிரார்த்தனை அவர் செய்த தான தர்மங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒருவன் பணக்காரனாக வேண்டுமானால் அவன் செய்த புண்ணியம் பல்வேறு வகையிலும் வந்து உதவி செய்யும். ஒருவன் ஏழையாக வேண்டுமானால் அவன் செய்த பாவம் பல்வேறு வழிகளாலும் வந்து அவனைத் தாக்கி அழிக்கும். இதற்கெல்லாம் காரணம் ஊழ் வினை. எனவே அன்பானவர்களே, நீங்கள் எப்பொழுதும் புண்ணியவானாக வாழுங்கள். அந்தப் புண்ணியம் உங்களை வாழ்வில் முன்னேற்றும் ஏணியாகச் செயற்படும்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**ஆகும் சமயத்தார்க்கு ஆள்வினையும் வேண்டாவாம்**
**போகும் பொறியார் புரிவும் பயனின்றே;**
**ஏகல் மலைநாட! என்செய்தாங்கு என்பெறினும்**
**ஆகாதார்க்கு ஆகுவது இல்.**

செல்வமும் வறுமையும், ஊழ்வினைப் பயனால் தான் வரும்; **'ஆகாதார்க்கு ஆகுவது இல்'** என்பது பழமொழி.

32 "அன்பானவர்களே, தான் ஆராய்ந்து உணர்ந்த கருத்துக்களையும், உலக ஒழுக்கத்தினையும் உணராத மூர்க்கனுக்கு ஆலோசனைகள் எதுவும் கூறக்கூடாது. மூர்க்கன் தான் நினைத்தது தான் சரியென்று விடாப் பிடியாக நினைத்து அதைச் செய்து கொண்டேயிருப்பான். அதனால் வரும் துன்பங்களையும் நட்டங்களையும் அவன் கருத்திற் கொள்ள மாட்டான். இப்படியான மூர்க்கர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ளும் துன்பம் அவர்களின் பகைவர்களாற் கூட செய்ய முடியாததாகும்".

'வேலூரில் சிவராமன் என்றொரு மூர்க்கன் வசித்து வந்தான். அவனுக்குத் திருமணமாகிப் பதினைந்து வருடங்களுக்குப் பின்பு தான் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவன் தவமிருந்து பெற்றமையால் அக்குழந்தைக்குத் தவச்செல்வி எனப்பெயரிட்டு மிகவும் செல்லமாக வளர்த்து வந்தான். அவள் கன்னிப் பருவத்தை அடைந்ததும் அவளுக்கு ஊரிலும், வெளியூர்களிலும் திருமணம் பேசினான். கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் மூர்க்கனான சிவராமனின் மகளை எமது பிள்ளைகளுக்குத் திருமணஞ் செய்ய மாட்டோம் என ஒவ்வொருவரும் கூறினர். அதையிட்டு அவன் கவலை கொள்ளவில்லை. தனது பணத்திற்காக யாரோ ஒருவன் வலிய வருவான் என்று ஊரில் அவன் சொல்லிக் கொண்டு திரிந்தான். தவச்செல்விக்கு வயது ஏறிக்கொண்டு சென்றது"

“சிவராமனின் சகோதரியின் மகன் வளவன். சிவராமனுடன் வளவனின் பெற்றோர் உறவு கொண்டாடுவதில்லை. எனினும் தனது சகோதரனின் மகள் வயது சென்றும் கன்னியாக இருப்பது வளவனின் தாய் சாவித்திரிக்கு வேதனையைக் கொடுத்தது. அதனால் வளவனைத் தவச் செல்வியைத் திருமணஞ் செய்யுமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தாள். ஆரம்பத்தில் வளவன் விரும்பவில்லை. பின் தாயின் வேண்டுகோளுக்காகச் சம்மதித்தான். சாவித்திரி கல்யாணத் தரகன் ஒருவனைச் சிவராமனின் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.”

“கல்யாணத் தரகன் விஷயத்தைச் சொன்னதும் கடுஞ்சினம் கொண்டான் சிவராமன்; “முன்பே அவள் எனது காணி எல்லையை அகட்டியவள். காணி, பூமி பொருளில் ஆசை கொண்டு திட்டமிட்டுச் செயலாற்றுகிறாள். எனது மகள் திருமணஞ் செய்யாமல் கன்னியாக இருந்தாலும் பரவாயில்லை. நான் உயிர் போனாலும் வளவனுக்கு எனது மகளைச் செய்து கொடுக்க மாட்டேன்” என்றான்”.

“சிவராமன் மூர்க்கன் என்று சாவித்திரிக்குத் தெரியும். அதனால் அவன் கடைசி வரையும் திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டானென நினைத்துச் சாவித்திரி தனது மகனுக்குப் பெரிய இடத்தில் திருமணம் செய்து வைத்தாள்.”

“தகப்பனின் மூர்க்கத்தனமான தன்மையால் தனக்கு வாழ்வு கிடைக்காது என்பதை நன்கு அறிந்த தவச்செல்வி நஞ்சு குடித்து இறந்து விட்டாள்”.

“அன்பானவர்களே, மூர்க்கர்கள் தாம் நினைத்தவை தான் நடக்க வேண்டும் என்று உறுதியாக இருப்பார்கள். ஒரு பொருளின் மீது நீல நிற நஞ்சு பரவினால் அதைக் கட்டுப்படுத்த முடியாது. அந்நீல நிறத்தை மாற்றவும் முடியாது. அதனால் அன்பார்ந்தவர்களே, மூர்க்கராக இருக்காது உண்மை நிலையை உணர்ந்து விட்டுக் கொடுத்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**ஓர்த்த கருத்தும் உலகும் உணராத**
**மூர்க்கற்கு யாதும் மொழியற்க! – மூர்க்கன்றான்**
**கொண்டதே கொண்டு விடானாகும் ; ஆகாதே,**
**உண்டது நீலம் பிறிது.**

நீலம் பற்றிய பின் அது ஒரு போதும் அப்பொருளை விட்டு நீங்காது. அது போல மூர்க்கனும் தான் கொண்டதிலிருந்து ஒரு போதும் மாறுபட மாட்டான் ; ‘**ஆகாதே உண்டது நீலம் பிறி**து’ என்பது பழமொழி.

33 “அன்பானவர்களே, ஒரு செயலைத் தொடங்கு முன் அதனால் வரும் அழிவையும், அழிந்த பின் வரும் ஆக்கத்தையும், அச் செயலைச் செய்து முடித்த பின் வரும் பயன்களையும் ஆராய்ந்து, நன்மை கூடுதலாக வரும் என்று தெரிந்து கொண்ட பின்பு தான் செயலைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் தான் செய்யத் திட்டமிட்ட தொழிலைச் செம்மையாகச் செய்யத் தெரிந்த நம்பிக்கை மிக்கவரோடு

நன்கு ஆலோசித்து தாமும் நன்கு சிந்தித்து முடிவை எடுத்த பின்பு தொடங்கும் செயல்கள் ஒரு போதும் நட்டத்தைத் தராது”.

“தாம் நட்டமடையக் கூடாது என்று எச்சரிக்கையோடு அவதானத்துடன் தொழிலைத் தொடங்குதல் வேண்டும். அத்துடன் செய்ய வேண்டிய முறைப்படி செய்யாத முயற்சிக்குப் பல்லாயிரம் போர் துணைக்கு வந்தாலும் அது வெற்றியைத் தராது. எனவே தொழிலைத் தொடங்கும் போது மிக்க அவதானத்துடன் தொடங்கினால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும். இதைவிட்டு விட்டுப் பகட்டுக்காகவும், அவா காரணமாகவும், தகுந்த ஆலோசனைகளைப் பெறாமலும் செய்யும் தொழில்கள் எப்பொழுதும் அவமானத்தையும், பகையையும் நட்டத்தையுமே தரும்.”

“வயலில் வாழும் நத்தைகள் ஊர்ந்து செல்லும் இடங்களில் கோடுகள் உண்டாகும். அக்கோடுகளை உழவு நடைபெற்றதாகக் கருதி விவசாயியானவன் நெல்லை விதைக்க மாட்டான். அது போல ஆரவாரப்படுபவர்களும், அவாப்படுபவர்களும், தகுந்த ஆலோசனையைப் பெறாதவர்களும் தொழிலில் இலாபம் அடைய மாட்டார்கள்”.

‘வேலூரில் அருணன், மகேசன் என்ற இரண்டு மர வியாபாரிகள் இருந்தனர். அவர்கள் காட்டிற்குச் சென்று மரங்களைத் தறித்து ஊரில் கொண்டு வந்து விற்பது வழக்கம். காட்டுக்கு அருகே பெரியதொரு ஆறு பாய்கின்றது. மழையில்லாத வேளைகளில் ஆற்றில்

நீர் மட்டம் குறைந்திருக்கும். மர வியாபாரிகள் மரத்தை ஆற்றிலிட்டு இழுத்து மறுகரைக்குக் கொண்டு செல்வர்".

"அன்று மழைக் குணமாக இருந்தது. அதனால் அருணன் தான் காட்டில் வெட்டிய மரக்குற்றிகளை காட்டில் அடுக்கி வைத்தான். மகேசனிடம் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரர் பல இலட்ச ரூபா பெறுமதியான மரங்களைக் கேட்டிருந்தனர். அதனால் மகேசன் தான் வெட்டிய மரங்களை ஆற்றங்கரையில் கொண்டு வந்து குவித்தான். அப்பொழுது அவனிடம் வேலை செய்யும் தொழிலாளி ஒருவன் சொன்னான்; "ஐயா, மழைவரும் போலத் தெரிகிறது. குளிர் காற்றும் வீசுகிறது. வானத்தைப் பார்த்தால் பெருமழை வரும் போலத் தெரிகிறது. அதனால் சற்று யோசித்துச் செய்யுங்கள்" என்றான்"

"மகேசன் அதைக் கேட்கவில்லை. மேலும் மேலும் மரங்களைக் கொண்டு வந்து குவித்தான். சில மணி நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்து மூன்று தினங்கள் கடும் மழை பெய்தது. மகேசன் ஆற்றங்கரையில் கொண்டு வந்து குவித்த மரங்கள் முழுவதையும் ஆற்று வெள்ளம் தள்ளிக் கொண்டு போய்விட்டது. திறமையுள்ளவர்கள் ஒரு தொழிலைச் செய்கிறார்கள் என்பதற்காக அவாப்பட்டுத் தெரியாத தொழிலைச் செய்யக்கூடாது. அத்துடன் நிலைமையை ஆராயாது நடக்கவும் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தந்தொழில் ஆற்றும் தகைமையார் செய்வன,**
**வெந்தொழிலர் ஆய வெகுளிகட்குக் கூடுமோ?**
**மைந்திறை கொண்ட மலைமார்ப! ஆகுமோ,**
**நந்துழுத எல்லாம் கணக்கு?**

நத்தை கீறிய கோட்டை உழவு என நினைக்கும் விவசாயியைப் போலச் செயலாற்றும் தன்மை இல்லாதவர்கள் செய்யுங் காரியங்கள் நட்டத்தையே தரும். "**ஆகுமோ, நந்து உழுததெல்லாம் கணக்கு'** என்பது பழமொழி.

34 "அன்பானவர்களே, கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். மிக மிக ஆடம்பரமாக வந்து அலங்காரமான வார்த்தைகளைப் பேசித் தமது காரியத்தைச் சாதிக்க விரும்புபவர்களே அனேகர். இவர்கள் தமது காரியங்களை ஒப்பேற்றத் தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் எடுப்பார்கள். அதை உண்மையென்று நம்பி அவர்களின் சொற்படி நடந்தால், பெரும் தீமைகள் தான் வரும். அதனால் உங்களோடு பழகுபவர்களுடன் அவதானமாக இருங்கள். உங்களது நண்பர்களுடன் அல்லது உறவினர்களுடன் இப்படியானவர்கள் பழகியமையைக் கண்டால் அவர்களுக்கத் தெரியாத வண்ணம் உண்மை நிலையை விளக்கிக் கூறுங்கள்"

"வேலூர் அரண்மனைக்கு அயல் நாட்டிலிருந்து ஓர் இரத்தின வியாபாரி வந்தான். அவன் மன்னரைச் சந்தித்துப் பெறுமதி மிக்க இரத்தினக் கற்கள் பலவற்றைக் காட்டினான். அது போன்ற பெறுமதி

மிக்க கற்கள் உலகில் இல்லை என்று சொன்னான். மன்னனுக்குப் பெறுமதியான பல மாணிக்கக் கற்களை அன்பளிப்பாகக் கொடுத்தான். அதன் பின் அவன் அடிக்கடி வேலூருக்கு வந்து போனான். அவன் வரும் போது அன்பளிப்பாகப் பல பொருட்களைக் கொண்டு வந்து மன்னனுக்குக் கொடுப்பான். அதனால் மன்னன் அவனை நண்பனாக்கிக் கொண்டான்."

"அமைச்சர்கள் மன்னனுடன் பேசுவோரைக் கண்காணிப்பர். முதலமைச்சர் எளிதில் யாரையும் நம்ப மாட்டார். செயலுக்குரிய கருவி, காலம், செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து சிறப்போடு செயற்படுபவர் தான் சிறந்த அமைச்சன். அஞ்சாமை, உயர் குடிப் பிறப்பு, பாதுகாக்கும் திறமை, கற்றுணர்ந்த அறிவு, சோர்வற்ற முயற்சி ஆகிய ஐந்து தன்மைகளையும் முழுமையாகப் பெற்றவர் முதலமைச்சர். அதனால் அந்தப் பணிகளை, அந்த வியாபாரி அறியாது ஆராய்தறியுமாறு ஒற்றர்களை அனுப்பினார். அந்த வணிகன் இரவு வேளைகளில் குதிரைப் படைத் தளபதி மணிசேகரனின் வீட்டுக்குச் சென்று வருவதை ஒற்றர்கள் முதலமைச்சருக்குத் தெரிவித்தனர்"

"அன்று மிகப் பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்களுடன் வணிகன் வந்ததும் மன்னன் அவனையும் குதிரைப் படைத் தளபதியையும் கைது செய்யுமாறு கட்டளையிட்டான். முதலமைச்சர் சொன்னார்; "வணிகரே, நீர் வந்தன்றே எனக்கு உமது நடையுடை பாவனையில் சந்தேகமேற்பட்டது. ஆனால் அரசர் உம்மை

முழுமையாக நம்பியதால் என்னால் உடனே எதுவும் செய்ய முடியவில்லை. உம்மைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்காக ஒற்றர்களை நியமித்தேன். அவர்களின் செய்திப்படி நீர் மாவடி என்ற நகரின் அரசனோடும் எமது குதிரைப் படைத் தளபதியோடும் சேர்ந்து எமது மன்னனைக் கொலை செய்து விட்டு நாட்டைக் கைப்பற்ற விரும்பினீர். அதனால் மன்னர் உனக்குத் தகுந்த தண்டனை தருவார்." என்றார்"

"மன்னனை யாராவது ஏமாற்றினால், அமைச்சர்கள் அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளில் ஈடுபடுவர். முதலமைச்சரின் நடவடிக்கையால் நாடும் தப்பியது. எனது உயிரும் காப்பாற்றப்பட்டது. அதனால் உனக்கு மரண தண்டனை அளிக்கிறேன்." என்றான் மன்னன். ஆகையால் ஏமாற்றுக்காரரிடம் கவனமாக இருங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**பொருளல்லார் கூறிய பொய்க்குறளை வேந்தன்**
**தெருளுத் திறந்தெரிதல் அல்லால் – வெருளவெழுந்து**
**ஆடு பவரோடே ஆடார், உணர்வுடையார்,**
**ஆடுபவணைப் பொய்க்காலே போன்று.**

யாராவது மன்னனை ஏமாற்றினால், அமைச்சர் தனது அறிவுத் திறமையால் அதைத் தடுப்பார். அதை விட்டு விட்டு வந்தவனுடன் சேர்ந்து மூங்கிலாற் செய்த பொய்க் காலைப் போலத் தாமும் தவறானவற்றிற்குத் துணையாகி ஆட மாட்டார். **'ஆடுபணைப் பொய்க்காலே போன்று'** என்பது பழமொழி

35 "அன்பானவர்களே, நல்ல மனம் படைத்தவர்கள் உயிர்கள் அனைத்தையும் தன்னைப் போல நேசிப்பார்கள். அன்பானவர்களுக்கு உதவ ஆயிரமாயிரம் பேர் காத்திருப்பார்கள். வாழ்க்கைக்கு அன்பு தான் உயிர் மூச்சு. அன்புள்ளம் கொண்டவர்கள். எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுவதால் அவருக்கு ஊர் முழுவதும் நல்ல நண்பர்கள் இருப்பார்கள்."

"அன்று வேலூர் அரச சபை கூடிய போது குடிமக்களும், விவசாயிகளும், வணிகர்களும், கலைஞர்களும் வந்திருந்தனர். அரசன் சபைக்கு வந்ததும். எல்லோரும் எழுந்து அவனை வணங்கினர். பின் குடிமகன் ஒருவன் எழுந்து சொன்னான் ; "அரசே, நாட்டில் பருவ மழை பொய்த்து விட்டது. அதனால் எமக்கு மானியம் தர வேண்டும்." என்று கூறிய குடிமகன் அமருமுன் மன்னன் முதலமைச்சரைப் பார்த்துக் கேட்டான் "முரசறையச் சொன்னேன். முரசறையவில்லையா?"

"இப்போது தான் முரசறைபவர்களுக்குச் செய்தி அனுப்பினேன். கோரிக்கை இல்லாமல் கொடுக்கக் கூடாது. அத்துடன் மக்கள் தமது துன்பங்களை நேரிற்கூற விரும்பினர்". என்றார் முதலமைச்சர்".

"அரசன் சொன்னான்; "குடிமக்களுக்கு மானியமும், விவசாயிகளுக்கு விதை நெல்லும், புலவர்களுக்கு மானியமும் வழங்கும்படியும், இம்முறை யாரும் வரி செலுத்தத் தேவையில்லை

என்றும் கட்டளையிட்டு விட்டேன். வணிகர்கள் களஞ்சியக் காப்பாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். வேறு ஏதாவது குறைகள் இருப்பின் கூறுங்கள்" என்றான் மன்னன்"

"எல்லோருமாகச் சேர்ந்து, 'மன்னன் வாழ்க' என்று கோசம் எழுப்பினர். அவைப் புலவர் சொன்னார்; "மன்னா, நீ மக்களுக்கு எந்தக் குறைகளும் வைப்பதில்லை. நீ அறிவித்தவற்றையெல்லாம் மக்கள் அறிந்து சந்தோஷப்பட்டனர். நாம் உனக்கு நன்றி கூறவே வந்தோம். மன்னா, விசுவாசமான மக்கள் இருக்கும் வரைக்கும் உன்னை யாராலும் வெல்ல முடியாது".

"வர்த்தகர்களுக்கும் , குதிரைப் படைத் தளபதிக்கும் மரண தண்டனை வழங்கியதால் கோபங்கொண்ட மாவடி மன்னன் சிற்றரசர்கள் மூவரின் துணையுடன் வேலூர் மீது படையெடுத்தான். வேலூர் மக்கள் அனைவரும் திரண்டெழுந்து தளபதிகளின் தலைமையில் மாவடிக்கும் சிற்றரசர்களின் நாடுகளுக்கும் சென்றனர். படை வீரர்மாவடிப் படையைச் சூழ்ந்து நின்றனர். தோல்வி உண்டாகப் போகிறதென்று நினைத்த மாவடி மன்னன் பின் வாங்கினான். பின் வாங்கித் தமது ஊருக்குச் சென்ற மாவடி மன்னனையும் சிற்றரசர்களையும் வேலூர் மக்கள் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து வேலூர் மன்னிடம் ஒப்படைத்தனர்."

“அன்பானவர்களே, அன்பு காதலுக்கு மட்டும் உரியது அல்ல. அது வீரத்தையும் உண்டாக்கும். அதனால் அன்புள்ளம் கொண்டவர்களாக வாழுங்கள். அன்பு உங்களுக்கு ஆக்கம் அனைத்தையும் தரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்**
**உறுமனத்த னாகி ஒழுகின் செறுமனத்தார்**
**பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்ப?**
**ஆயிரம் காக்கைக்கோர் கல்.**

ஆட்சியில் இருப்பவர்கள் குடி மக்களின் மேல் அன்பு கொள்ளல் வேண்டும். அன்பு தான் வலிமையான கோட்டை. ஆயினும் காக்கைகளைக் கலைக்க ஒரு சிறுகல் போதும். வலிமையான கோட்டைகளைத் தகர்க்க அன்பு மட்டும் போதும் ‘**ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்**’ என்பது பழமொழி.

36 அன்பானவர்களே, நாம் வாழ்க்கையில் ஆயிரமாயிரம் மனிதர்களைச் சந்திக்கின்றோம். பழகுகின்றோம். பலர் எம்முடன் நெருக்கமான உறவை வைத்திருக்கிறார்கள். இப்படியானவர்களைக் கூட ஆராயாது பழகக்கூடாது. ஆராய்ந்து பாராமல் உறவு கொள்வதைப் போன்றகேடு வேறெதுவும் இல்லை. ஆராயாது கொள்ளும் நட்பு, இறுதியில் தான் சாவதற்கே காரணமான துன்பங்களைக் கொடுக்கும். ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும் அவனிடமுள்ள குறை , நிறைகளையும், அவனைச் சேர்ந்தவர்களின் இயல்பையும் நன்றாக ஆராய்ந்து அறிந்த பின்பே அவனுடன் உறவு கொள்ள வேண்டும்.

எனவே நன்கு ஆராயாது முக்கிய விடயங்களை உங்களுக்கு மிகவும் நெருங்கியவர்கள் என்று நினைப்பவர்களிடங் கூடச் சொல்வார்கள். அது பெரும் ஆபத்தை உண்டு பண்ணும்.”

“புலியூரின் தளபதி கோபாலன். புலியூருக்கு அடுத்த ஊர் கல்வியங்காடு. கல்வியங்காட்டு மன்னன் விமல தேவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற போது வழிதவறிப் புலியூருக்குச் சென்று விட்டான். அவனைக் கைது செய்த பின்பு தான் அவன் கள்வியங்காட்டின் மன்னன் விமலதேவன் என்று தளபதி கோபாலனுக்குத் தெரிந்தது. அவன் அரசனை அன்பாக உபசரித்து பாதுகாப்புடன் அனுப்பி வைத்தான்.”

“கோபாலனின் அன்பான அரவணைப்பை உண்மையென நம்பிய விமலதேவன் கோபாலனை அடிக்கடி இரகசியமாகச் சந்தித்தான். அவரகளது நட்பு வளர்ந்தது. அதனால் புலியூர் மன்னனுக்குத் தெரியாதபடி கோபாலன் கள்ளியங்காட்டுக்குச் சென்று வந்தான். அவன் விமலதேவனுக்குப் புலியூர் மன்னனைப் பற்றித் தவறாகக் கூறி, புலியூர் மீது படையெழுத்து அதைக் கைப்பற்றிக் கள்ளியங்காட்டுடன் சேர்க்கும்படி ஆலோசனை கூறினான். புலியூர்ப்படைகளே புலியூர் மன்னனைக் கொல்லப் போதும் அதனால் கள்ளியங்காட்டைப் பாதுகாக்கும் பணியில் உங்கள் படையை வைத்திருங்கள் என்றான். அதன்படி விமலதேவன் சிறுபடையுடன் வந்த போது காட்டில் மறைந்திருந்த கோபாலன் தனது படை வீரர்களைக் கொண்டு விமலதேவனைக் கொலை செய்து விட்டுக் கள்ளியங்காட்டிற்கு

மன்னனானான். விமலதேசன் வழி தெரியாது இருந்த போது வழி காட்டியிருந்ததற்காக் கோபாலன் மீது அளவுக்கதிகமான அன்பும் நம்பிக்கையும் வைத்தான். அவன் தனது ஒற்றர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்திருந்தால் தன் நாட்டையும் உயிரையும் இழந்திருக்க மாட்டான். எனவே, அன்பானவர்களே, உறவினனாக, அயலவனாக இருந்தாலும் ஆராயாது அவர்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படாதீர்கள். அது எப்பொழுதும் தீமையையே தரும்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்**
**முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா;**
**அளிந்தார்கண் ஆயினும், ஆராயா னாகித்**
**தெளிந்தான் விளிந்து விடும்.**

அன்புள்ளவராக இருந்தாலும் கூட அவரைப் பற்றி நன்கு ஆராய்ந்த பின்பே நட்புக் கொள்ளல் வேண்டும், '**ஆராயனாகித் தெளிந்தான் விளிந்து விடும்**' என்பது பழமொழி.

37 "அன்பானவர்களே, தான் செய்ய விரும்புகின்ற செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, பகைவனுடைய வலிமை, இருதரப்பினர்க்கும் துணையாக வருபவர்களின் வலிமை என்பவற்றை ஆராய்ந்த பின்புதான் ஒரு செயலைச் செய்யத் தொடங்க வேண்டும். அத்துடன் ஒரு செயலை ஒருவனிடம் ஒப்படைக்கும் போது அவன், அறம், பொருள், இன்பம், தன் உயிருக்காக அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பிறகே அவன் செயலுக்குத்

தகுந்தவன் தான் என்று அறிந்து கொள்ள முடியும். நற்குடியிற் பிறந்த குற்றங்களில் இருந்து நீக்கிப் பாவச் செயலைச் செய்ய நாணப்பட்டு அஞ்சுபவனிடம் எக்காரியத்தையும் துணிந்து கொடுக்கலாம். அவன் தன்னை இழந்தாலும் தான் ஏற்றுக் கொண்ட செயலைச் செய்யாது விடமாட்டான்."

"வேலூர் மன்னன் எந்த வேலைக்கென்று ஆளை நியமித்தாலும் அவனைப் பரீட்சிக்காது எடுக்க மாட்டான். வேலூர் அரசவைப் புலவர் மணிமாறன் அரசனிடம் சென்று தனது மகனைப் படைத் தளபதியாக நியமிக்கும் படி கேட்டுக் கொண்டார். குதிரைப் படைத் தளபதி ஓய்வு பெற இருப்பதால் அரசன் குதிரைப் படைத்தளபதி ஒருவனை நியமிக்கப் போவதாக முரசறைவித்திருந்தான்."

"அன்று பலர் நேர் முகப்பரீட்சைக்கு வந்திருந்தனர். வந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுத்தான் மன்னன். புலவரின் மகனுக்கு, சில ஏடுகளைக் கொடுத்தான். "குதிரைப்படைத் தளபதிக்கும் ஏட்டிற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார் முதலமைச்சர்."

"முதலமைச்சரே, ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பின்னர் குற்றங்களை ஆராய்ந்து அவற்றுள் எது மிகுதியாக இருக்கின்றதோ அதைக் கொண்டே அவன் எத்தகையவன் என்பதைத்

தீர்மானித்தல் வேண்டும். புலவரின் மகனை ஆராய்ந்த போது அவன் எதற்கும் உதவாதவன் எனக் கண்டு கொண்டேன். அவன் தந்தையுடன் கூட நல்லுறவு இல்லாதவன். அப்படியானவர்களை நம்பக்கூடாது. ஏனென்றால் அவர்களுக்கு வாழ்க்கையின் அர்த்தம் புரிவதில்லை. பற்று, பாசமில்லாதவர்கள் பழிக்கு அஞ்ச மாட்டார்கள். அதனால் இவன் கடைசி நான்கு வரிப்பாடலாவது எழுதுகிறானா எனப் பார்ப்போம்" என்றான் மன்னன்".

"மூன்றாம் நாள் புலவரின் மகனை அழைத்தான். அவன் ஏட்டில் எதையும் எழுதாது வந்து ; "குதிரைப் படைத்தளபதிக்கு ஏன் ஏடு.?" என்று கேட்டான்".

"மன்னன் தனது வேலைக்காரனிடம் ஒரு வேலையை ஒப்படைத்தால் அவ்வேலையை யாரின் காலில் விழுந்தேனும் செய்து முடித்தல் வேண்டும். அப்படியில்லாது தனக்குத் தகுதியில்லாத வேலை என்று நினைத்தாலோ இல்லாவிட்டால் அதைச் செய்யாது விட்டாலோ அவர்கள் தகுதியில்லாதவர்கள் என்று அர்த்தம். யாராக இருந்தாலும் ஆராய்ந்து தெளிந்த பின்பே அவரிடம் செயல்களை ஒப்படைத்தல் வேண்டும். அறிய வேண்டியவற்றை அறியாதவர்களை அன்பின் காரணமாக நம்பிச் செயலை ஒப்படைத்தால் எனது தலைமுறைக்கே தீராத துன்பங்கள் பல ஏற்படும்" என்றான் மன்னன்".

"ஆகையால் அன்பானவர்களே, நன்கு ஆராய்ந்து செயல்களை நல்ல முறையில் முடிப்பவைனத் தெரிவு செய்து செயல்களை ஒப்படையுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**எமரிது செய்க எமக்கென்று வேந்தன்**
**தமரைத் தலைவைத்த காலைத் – தமரவற்கு**
**வேலின்வா யாயினும் வீழார் மறுத்துரைப்பின்**
**ஆல்என்னிற் பூல்என்னு மாறு.**

செயலைச் செய்யச் சொல்ல அதனை மறுத்துச் சிறியதை உரைப்பவரும், செயலைச் செய்யாதவரும் தகுதியற்றவர். 'ஆல்' பெரிது 'பூல்' சிறிது. பெரிதோ சிறிதோ மறுப்பின்றிச் செய்வரே தகுதியானவர்; "**ஆல் என்னிற் பூலென்னுமாறு**" என்பது பழமொழி.

38 "அன்பானவர்களே, ஒருவர் வறியவரான காலத்திலும் அவருடைய பழைய உறவைப் பேணிப் பாதுகாக்கும் தன்மை நல்ல உறவினரிடத்து எப்போதும் இருத்தல் வேண்டும். ஒருவரைச் சுற்றத்தார் சுற்றியிருக்கும்படி வாழ்வது, அவர் செல்வத்தைத் தேடியமையால் அடைந்த பயனாகும். எல்லோருக்கும் உதவிகள் செய்தும், இனிமையாகப் பேசியும் வாழ்வோரை எப்போதும் மக்கள் சூழ்ந்திருப்பார்கள். சிலர் யாராவது உதவிகள் கோரி வந்தால் கொடுக்க மாட்டார்கள். பணத்தைப் பெற்ற பயன் கொடுத்து உதவுதலே. சிலர் தம்மை விரும்பி வந்து உதவி கோருபவர்களுக்கும், தம்முடைய சுற்றத்தினருக்கும் அவர்களை வருத்துகின்ற பசித்துன்பத்தினைப் போக்காதவர்கள், புதியவர்களுக்கு உதவுதலானது, தன்னை மிகவும் பாதுகாத்து வளர்த்தவர்களுக்கு உதவாது நெடுங்காலஞ் சென்று பின்வரும் புதியவர்களுக்கு உதவுகின்ற கொடுமையான பனையின் தன்மை போன்றதாகும். பனை தன்னை நட்டுப்

பாதுகாக்காதவர்களுக்கு உதவுவதில்லை. இரண்டு சந்ததி கழியத் தான் அது உதவும். அது போல அல்லாது தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கியோருக்கு எந்நாளும் உதவுதல் வேண்டும்”

“வேலூரிலே கந்தசாமி என்றொரு வர்த்தகன் இருந்தான். ஒரு முறை அவன் வர்த்தகம் செய்வதற்காக வெளியூர் ஒன்றிற்குச் சென்றான். சென்ற இடத்தில் அழகான பெண் ஒருத்தியைக் கண்டு காதலுற்று அவளைத் திருமணஞ் செய்து அங்கேயே வாழ்ந்தான். அவனது பெற்றோர் வேலூரில் வாழ்ந்து வந்தனர். அவன் திருமணமான பின்பு சில காலம் ஊருக்கு வருவான். பெற்றோரைப் பார்ப்பான், உறவினர்கள் நண்பர்களைப் பார்பான். பின் சென்று விடுவான். நாலைந்து முறை வந்து சென்ற பின் அவன் ஊர்பக்கம் வருவதை நிறுத்தி விட்டான்”.

“பெற்றோர் நோயுற்றனர். அவனுக்குக் கவிதா என்றொரு தங்கை இருந்தாள். பொருள் இல்லாமையால் அவளது திருமணம் தடைப்பட்டது. கந்தசாமியினுடைய தந்தை, கந்தசாமியிடம் பலமுறை சென்று மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்கப் பொருள் கேட்டார். அவன் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சாட்டுச் சொல்லி வந்தான். இறுதியாகத் தான் தொழிலில் நட்டமடைந்து விட்டதாகக் கூறி, இனிமேல் பொருள் கேட்டு வரவேண்டாம்” என்று கூறிவிட்டான்”.

“ஆனால் அவன் தனது மனைவியின் வேண்டு கோளுக்கிணங்க மனைவியின் தங்கைமார் ஐவருக்குச் சீதனம்

கொடுத்து நல்ல இடங்களில் திருமணஞ் செய்து வைத்தான். இதை அந்த ஊரவர்கள் கந்தசாமியின் தந்தைக்குச் சொல்ல அவர் அந்த அதிர்ச்சியில் இறந்து விட்டார். அதன் பின் அவர்களது குடும்பம் பெருந்துன்பப்பட்டது".

"ஆகவே அன்பானவர்களே, நீங்கள் கந்தசாமியைப் போலவும் பனையைப் போலவும் பெற்று வளர்த்தவர்களுக்கும் , இனத்தவர்களுக்கும் உதவாது இராதீர்கள். பிறருக்கும் உதவ வேண்டும். பெற்று வளர்த்தவர்களுக்கும் உதவுதல் வேண்டும்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்**
**வருந்தும் பசிகளையார் வம்பர்க்கு உதவல்,**
**இரும்பணைவில் வென்ற புருவத்தாய்! ஆற்றக்,**
**கரும்பனை அன்ன துடைத்து.**

செல்வம் உடையவர்கள் சுற்றத்தவர்களுக்கு உதவாமற் போனால் அச் செல்வத்தால் பயன் எதுவுமில்லை. "**ஆற்றக் கரும்பனை அன்னது உடைத்து**" என்பது பழமொழி.

39 "அன்பானவர்களே, திருப்பித்தருவதாகக் கூறி வாங்கிய பொருட்களைக் கொடுக்காத தன்மையும், தன்மானம் இல்லாத தன்மையும், தகுதியில்லாத மகிழ்ச்சியும் ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடாது. ஒருவன் நடுநிலை இல்லாமல் பிறரது பொருளை அடைய நினைத்தால் அவனது குடும்பங் கெடும். அழிவு தரும் பல

துன்பங்கள் வந்து சேரும். தர்மத்தைக் கவனிக்காது பிறரின் பொருளை விரும்பி அதைக் கவர்பவர் அறத்தால் அழிக்கப்படுவர். பிறரின் பொருளால் வரும் இன்பங்களை விரும்பக் கூடாது. விரும்பினால் அப் பொருளே அவரை அழித்து விடும். அத்துடன் அவரிடம் இருக்கும் செல்வத்தையும் சேர்த்து அழித்துவிடும். ஆகையால் நீங்கள் பிறரின் பொருளில் ஆசைப்படாது வாழுங்கள். வழிதெருக்களில் இன்னொருவருடைய பொருள் இருக்கக் கண்டால் அதை எடுத்து உரியவர்களிடம் கொடுங்கள். உரியவரைக் கண்டு பிடிக்க முடியாவிட்டால் கோயில் உண்டியலில் போடுங்கள். அதனால் பொருளைத் தொலைத்தவனுக்கும், அதை எடுத்துப் போகும் உங்களுக்கும் பெரும் புண்ணியம் கிடைக்கும்.”

“வேலூரிலே, மூர்த்தி என்றொரு பணக்காரன் இருந்தான். அவன் வட்டிக்குப் பணம் கொடுப்பவன். அவன் பலசாலிகளான தீயவர்களைத் தனக்கு உதவியாக வைத்திருந்தான். வாங்கிய பணத்தைக் கொடுக்காதவர்களையும், உரிய நேரத்தில் பணங்கொடுக்காதவர்களையும் பயமுறுத்தி அத்தீயவர்கள் பணம் பெற்று மூர்த்திக்குக் கொடுப்பார்கள். அவன் கூடுதலான வட்டி கேட்பான். நல்ல குடியிற் பிறந்த ஏழைகளும், உதவிக்கு ஆள் இல்லாதவர்களும், ஏழைகளும் இவனிடம் பணத்தை வாங்கி விட்டுக் கொடுக்காது விட்டால் அத்தீயவர்கள் அவர்களை வெருட்டி அச்சுறுத்தி அவர்கள் குடியிருக்கும் காணியைப் பெற்றுக் கொடுப்பர்.”

“ஊரில் பணமுள்ளோர் மூர்த்தியிடம் இரகசியமாகக் கொண்டு சென்று கொடுத்து குறைந்த வட்டியைப் பெறுவர். அப்படியான பலர் தமக்குப் பணம் தேவையெனத் திருப்பிக் கேட்டால் மூர்த்தி கொடுக்கமாட்டான். பலமுறை அலைக்கழிந்து விட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுப்பான். இதனால் அவனிடம் பணம் பெற்றவர்களும், பணங்கொடுத்தவர்களும் பெருந் துன்பப்படுவர்.”

“ஒரு நாள் மூர்த்தி கையாட்களாக வைத்திருந்த ஐவரும் ஒன்று சேர்ந்து மூர்த்தியைப் பயமுறுத்தி அவனது பணம், நகைகள் முழுவதையும் கொள்ளையடித்துச் சென்று விட்டனர். அத்துடன் அதைப்பற்றி வெளியே சொன்னால் கொலை செய்து விடுவோமென்று எச்சரித்து விட்டுச் சென்றனர். அதனால் மூர்த்தி அதை வெளியே சொல்லவில்லை”.

“அதனால் அன்பானவர்களே, எளியாரை வலியார் வருத்தினால் வலியாரைத் தெய்வம் வருத்தும். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். என்றெல்லாம் முதுமொழிகள் உண்டு. நாம் இன்னொருவரின் பத்து ரூபா பெறுமதியான பொருளை வஞ்சகமான முறையில் கவர்ந்தால், பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகையால் பிறரை ஏமாற்றி வாழவோ, பிறரின் பொருளைக் கவர்ந்து வாழவோ ஒரு போதும் நினைக்கக் கூடாது.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் நல்கூர்ந்தார்**
**மாற்றத்தால் செற்றார் எனவலியார் ஆட்டியக்கால்**
**ஆற்றாது அவரழுத கண்ணீர் அவையவர்க்குக்**
**கூற்றமாய் வீழ்த்து விடும்.**

எளியாரை வலியார் ஏமாற்றினால் அவரால் அவரை எதிர்த்து வெல்ல முடியாது. ஆனால் அவர்கள் அடைந்த துன்பமும் அவர்கள் பெருக்கிய கண்ணீரும் அவ்வலியவரின் குடும்பத்தை அழிக்கும்; '**ஆற்றாது அவர் அழுது கண்ணீர் அவையவர்க்குக் கூற்றமாய் வீழ்ந்து விடும்**' என்பது பழமொழி.

40 "அன்பானவர்களே, கற்பதைக் குற்றமில்லாமல் கற்றல் வேண்டும். கற்றபின் கற்றபடி நடத்தல் வேண்டும். கற்றவர்கள் தான் கண்ணுள்ளவர்கள். செல்வர்கள் முன் ஏழைகள் கைகட்டி வாய்பொத்தி வணங்கி இரப்பது போலக் கற்றவர்கள் முன் கல்லாதவர்கள் இரக்க வேண்டும். நாம் பூமியை எவ்வளவு தோண்டுகிறோமே அந்தளவுக்கு நீர் வரும். அது போல, மக்கள் எந்தளவுக்கு நூல்களைக் கற்கிறார்களோ அந்த அளவிற்கு அறிவும் வளரும். கற்றவர்களுக்குத் தம் நாட்டையும், ஊரையும் , சுற்றத்தவரையும் போலவே பிற நாடுகளும், ஊர்களும் , ஊர் மக்களும் உரிமை உடையனவாகும். இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் சாகும்வரையும் கல்வி கற்பர். நன்கு கற்றறிந்தவர்கள் தம்முடைய மகிழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் , உலக மக்களின் மகிழ்ச்சிக்கும் , வளர்ச்சிக்கும் காரணமாக இருப்பது கல்வியே

என்றறிந்து அக் கல்வியை மேலும் மேலும் கற்பர். அதனால் அன்பானவர்களே, ஒருவனுக்கு அழிவில்லாத செல்வமாக இருக்கின்ற கல்வியை நீங்களும் கற்று உங்களது பிள்ளைகளுக்கும் கற்பியுங்கள். கல்வியால் வரும் செல்வமும் புகழும் உலகெங்கும் பரவும்.”

“வேலூரிலே பண்டிதர் சதானந்தன் என்றொரு பெருங்கல்விமான் இருந்தார். அவரிடம் தான் வேலூர் மன்னன் ஆலோசனை கேட்பான். வேலூர் கரும்புச் செய்கையில் ஈடுபடும் நாடு. தனது நாட்டின் சர்க்கரைத் தேவைகளைப் பூர்த்தி செய்து பிறநாடுகளுக்குச் சர்க்கரையை ஏற்றுமதி செய்து பெரும்பணம் சம்பாதிக்கும் நாடு. புலியூர் மன்னன் வேலூர் மன்னனுடன் முரண்பட்டதால் புலியூருக்குச் சர்க்கரையை அனுப்பாது தடை செய்து விட்டான். புலியூர் பாலை நிலம். அதனால் அங்குள்ள மக்கள் பெருந் துன்பப்பட்டனர்”.

தீடீரென்று வேலூர்க் கரும்புத் தோட்டங்கள் யாவும் புதுவிதநோயால் கருகின. மன்னன் கமநல உத்தியோகத்தர்களை அழைத்து ஆலோசனை செய்தான். அவர்கள் புதிய புதிய மருந்துவகைகளைத் தெளிக்கச் சொன்னார்கள். இருந்தும் அவை பயனளிக்கவில்லை. மனம் வருந்திய மன்னன் சதானந்தனை அழைத்து ஆலோசனை கேட்டான். அவர் கரும்புத் தோட்டங்களைச் சென்று பார்வையிட்டு விட்டுச் சொன்னார்; “மன்னா, உடனே புலியூர் மன்னனைக் கொன்று அந்நாட்டைக் கைப்பற்று”

“மன்னன் காரணத்தைக் கேட்காது முப்படைத் தளபதிகளையும் அழைத்துப் புலியூருக்குப் படை எடுத்துச் செல்லுமாறு கட்டளையிட்டான். இரண்டு தினங்களில் புலியூர் மன்னன் கொல்லப்பட்டு புலியூர் கைப்பற்றப்பட்டது. அதன் பின் மன்னன் சதானந்தனிடம் வந்தான். அவர் சொன்னார் ; “மன்னா, இது கரும்புக்கு வந்த நோயல்ல. புலியூர் மன்னன் பகை காரணமாக நச்சுத் திரவத்தை கரும்புப் பயிரின் மீது விசிறியுள்ளான். அடுத்து அவன் வயல்களுக்கு விசுறுவான், பின் வாழைத்தோப்புக்கு விசுறுவான். இதனால் நாட்டின் பொருளாதாரம் அழிந்துவிடும். அவனைக் கொன்று விட்டால் இவை எதுவும் நடவாது” என்றார். மன்னன் மகிழ்வுடன் அவரது பாதங்களைப் பணிந்தான்.

“மாவடி நாட்டிலே இரவில் மோகினிப் பேய்களும் , குட்டிப் பிசாசுகளும் நாட்டுக்குள் புகுந்து மக்களை அச்சுறுத்தி வந்தன. மாவடி மன்னன் மந்திரவாதிகளைக் கொண்டு மந்திரித்து கழிப்புகள் கழித்தும் பேய்களின் அட்டகாசம் குறையவில்லை. அதனால் துன்பப்பட்ட மாவடி மன்னன் வேலூர் மன்னனிடம் உதவி கேட்டான்”.

“வேலூர் மன்னன் சதானந்தனை மாவடிக்கு அனுப்பி வைத்தான். சதானந்தன் இரவு வேளைகளில் தெருக்களுக்கும், வீடுகளுக்கும் சென்று விசாரித்தார். பின்பு மாவடி மன்னனைச் சந்தித்து இரகசியமாக எதையோ சொன்னார். அன்று இரவு ஐம்பது பேரை மோகினிப் பிசாசு வெட்டிக் கொன்று விட்டது. மன்னன் நாட்டு மக்களுக்குச் சொன்னான் ; “அன்பான மக்களே, அறிஞர் சதானந்தம்

மோகினிகளை விரட்டி விட்டார். மோகினிகள் சென்ற வேளை காவலுக்கு நின்ற எமது தளபதியையும் ஐம்பது பேரையும் அவை பலியெடுத்து விட்டன. இனிமேல் எந்தப் பயமும் இல்லாமல் நீங்கள் வாழலாம் என்றான்".

"மன்னன் சதானந்தன் சொன்னதை முதலமைச்சருக்குச் சொன்னான். "பேயும் இல்லை ; பிசாசும் இல்லை ; மோகினியும் இல்லை உனது மைத்துனனான தளபதியும் அவனது கையாட்களும் பொருளை விரும்பி இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைச் சிரச்சேதம் செய்து விட்டு மோகினி பலி வாங்கியதாகக் கூறு" என்றார். அதனால் அன்பானவர்களே, கல்வியறிவுள்ளவர்களால் தான் எதையும் அறிந்து கொள்ள முடியும். அதனால் கல்வியைக் கற்கக் கூடியளவும் கல்லுங்கள்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

**ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு;**
**வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டு தில்.**

**'ஆற்றுணா வேண்டுவதில்'** கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது பழமொழி. நெடுந்தூரம் பயணஞ் செய்வோர் கொண்டு செல்லும் உணவுக்கும் 'ஆற்றுணா' என்று பெயர்.